GOKULAM ஆகஸ்டு '94 ரூ. 3.00

# கோகுலம்



'வெல்கம் பவித்ரா! வெல்டன்!'

IT'S AMAZING!




# DIAMOND COMICS

*Introduces*

# MAGIC FUN BOX



**PAY Rs. 60/- instead of Rs. 120/-**

FOR HALF THE PRICE WITH

## Multi Dimensional Comics

In colour of course!

See through a special glass with multi dimensional effect.

Could you GUESS? What more it contains!

## MAGIC FUN BOX CONTAINS


**10 comics each of :**

1. Chacha Choudhary
2. Billoo
3. Pinki
4. Phantom
5. Mendrik
6. Mahabali Shaka
7. Fauladi Singh
8. Chacha Bhatija
9. Tauji
10. Agni Putra Abhay

**Rs. 30/-**

5 multi Dimensional Comics

**Rs. 30/-**




A LUNCH BOX

**Rs. 20/-**

Magic Tricks
Aladdin Lamp
Poddar Digestive Tablet
Rachna Tablet
Percy Candy
Audio Cassete
Action Comic
Key Chain
Diary 1994
10 Paper Stickers
Magnetic Stickers
Billoo's Button
Mask of Mahabali Shaka

**Rs. 40/-**

Contain Comics worth Rs. 60/- Gifts worth Rs. 60/- Total Rs. 120/-

## Diamond Magic Fun Box for Rs. 60/- only

### NEW DIAMOND COMICS (JUNE 94)

| | |
|---|---|
| Pran's—**Chacha Chaudhary & Bing Ben** | 8.00 |
| Pran's—**Pinki's New Frock** | 8.00 |
| **Agniputra Abhay & Khardulla** | 8.00 |
| **Tauji & The Tiny Magician** | 7.00 |
| **Mahabali Shaka & The Uniform Clad Ghosts** | 7.00 |
| **Spider Man-4** | 8.00 |
| **Rasana Genie & Tarvil** | 7.00 |
| **James Bond-23** | 7.00 |
| **Phantom-33 (Digest)** | 15.00 |
| **Mandrake-20** | 8.00 |

### NEW DIAMOND COMICS (JULY 94)

| | |
|---|---|
| Pran's—**Billoo's Bicycle** | 8.00 |
| Pran's—**Daabu & Marto** | 8.00 |
| **The Explosion** (Dynamite Series) | 8.00 |
| **Chacha Bhatija & The Vengeance of a Snake** | 8.00 |
| **Fauladi Singh in the Trap of enemy** | 7.00 |
| **James Bond-24** | 7.00 |
| **Phantom—34 (Digest)** | 15.00 |
| **Mandrake-21** | 8.00 |

DIAMOND COMICS PVT. LTD.
2715, DARYAGANJ, NEW DELHI-110002



# கோகுலம்


1994


ஆகஸ்ட் மாத

இதழ்

மலர் : 12

இதழ் : 7


உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்
- பாரதியார்.



## அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

எத்தனை கடிதங்கள்! எத்தனை வகையான பாராட்டுக்கள்! கூத்தபிரானின் 'அபிராமியின் அட்டிகை'யைப் பாராட்டி வந்துள்ள கடிதங்களைத்தான் குறிப்பிடுகிறேன். தொடர்கதையைப் படித்தவர்கள் மனத்தில் அபிராமி, நிலைத்திருப்பாள் என்பதில் சந்தேகமே இல்லை.

புதிய தொடர்கதை இந்த இதழில் ஆரம்பமாகியுள்ளது. இதை எழுதியுள்ள த. ஜானகி, ஏற்கெனவே தனது தரமான சிறுகதைகளின் மூலம் கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமாகி, இடம்பிடித்துள்ளவர். சிறுவர் இலக்கியத்திற்காகப் பல பரிசுகளைப் பெற்றவர். இவரது "இரண்டாவது சாவி" உங்களிடம் நல்ல வரவேற்பைப் பெறப் போவது உறுதி. சிறுவர் இலக்கியத்தில் பெண் எழுத்தாளர் பங்கு அதிகம் இல்லை என்ற குறையை 'இரண்டாவது சாவி' கண்டிப்பாகப் போக்கும்.

பள்ளி மாணவர்க்கான சிறுகதைப் போட்டி அறிவிப்பு இந்த இதழில் வெளியாகியுள்ளது. மாணவ மணிகளிடம் உறங்கிக் கிடக்கும் கற்பனை ஆற்றலை வெளிக்கொண்டு வரவும் எழுதத் துடிக்கும் மாணவ மணிகளுக்கு ஒரு நல்ல வாய்ப்பாகவும் இந்தப் போட்டி பயன்படும். இந்த நல் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது மாணவர் பொறுப்பு.

நாம் பெற்றுள்ள 'சுதந்திரம்' விலை மதிப்பற்றது. இதைக் காக்கத் தவறினால் மீள்வதற்கு வழியே இல்லை. இந்த சுதந்திரத்தைப் பெற்றுத் தரப் போராடிய தியாகிகளின் பட்டியலில் சிறுவரின் பங்கும் இருந்த உண்மையை இந்த இதழில் வெளியாகும் "சும்மாவா வந்தது?" சுவைபடக் கூறுகிறது. அனைவருக்கும் 'சுதந்திர தின' வாழ்த்துகள்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)



# கோகுலம்

ஆகஸ்ட் '94 — இந்த இதழில்







*** உலகம் சுற்றிய மாவீரன் - பக்கம் 45**







*** லாராவின் சாதனை - பக்கம் 94**

# ஓசை கேட்குதா?

சீனத்து அரசர் லியாங்லீவ், தனக்குப் பின் பட்டத்துக்கு வரவிருக்கும் இளவரசனை அரசனுக்குரிய பண்புகளைப் பெற்றுவர குருவிடம் அனுப்பினார். குருவின் ஆசிரமம் அருகில் உள்ள காட்டில் அமைந்திருந்தது. இளவரசன் குருவைத் தேடிக் கொண்டு காட்டுக்குப் போனான். அவருடனேயே தங்கினான். பணிவிடைகள் செய்தான்.

ஒரு நாள் குரு இளவரசனைப் பார்த்து, "காட்டிற்குள் சென்று, காதில் கேட்கும் ஓசைகளை என்னிடம் வந்து சொல்" என்று உத்தரவிட்டார்.

நாட்டின் மன்னனாகி ஆட்சி நடத்துவதற்கும் ஓசைகளைக் கேட்பதற்கும் என்ன சம்பந்தம் இருக்கும் என்பது இளவரசனுக்குப் புரியவில்லை. இருந்தாலும் குரு கூறுவது, பணிப்பது எல்லாமே நமது நன்மைக்குத்தான் என்று நினைத்தான். பயணம் செய்து காட்டில் அடர்ந்த பகுதிகளுக்குச் சென்று சில நாட்கள் தங்கி, குரு கேட்டபடி என்ன ஒலிகள் கேட்கின்றன என்பதை அறிந்து திரும்பினான்.

"இளவரசே, அடர்ந்த காட்டுப் பகுதியில் என்னென்ன ஒலிகளைக் கேட்டீர்கள்?" என்று கேட்டார் குரு.

"குருவே! காட்டில் பல வகையான பறவைகளின் ஒலியையும், விலங்குகளின் ஒலியையும், மற்றும் மழை, இடி, காற்றின் ஒலியையும் நன்றாகக் கேட்டேன்" என்று பணிவாகச் சொன்னான் இளவரசன்.

குரு இளவரசனை நோக்கிச் சிரித்து விட்டு, "இளவரசே, நீங்கள் இன்னும் சரியாகக் கேட்கவில்லை. எனவே மீண்டும் காட்டுக்குள் சென்று தங்கி கவனமாக இருந்து இன்னும் என்னென்ன ஒலிகள் கேட்கின்றன என்பதை அறிந்து வாருங்கள்" என்று பணித்தார்.



இளவரசனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் குருவின் கட்டளைக்குப் பணிந்து மறுபடியும் காட்டுக்குள் சென்று தங்கி அங்கு எழும் ஒலிகளை உன்னிப்பாகக் கேட்டான். இப்படிச் சில நாட்கள் கவனித்ததும், மீண்டும் குருவிடம் வந்து பணிந்து நின்றான்.

"இளவரசே, காட்டில் என்னவெல்லாம் ஒலிகளைக் கேட்டீர்கள்?" என்று கேட்டார் குரு.

தேனீ பறக்கும் துல்லியமான ஓசை, நீரோடையின் 'சலசல' மெல்லிய ஓசைகளைக் கேட்டதாகச் சொன்னான் இன்வரசன்.

குரு சிரித்துவிட்டு, "இதெல்லாம் போதாது இளவரசே. மீண்டும் காட்டிற்குச் சென்று, இன்னும் சில நாட்கள் தங்கியிருந்து முழு கவனத்தோடு இருந்து என்னென்ன ஒலிகள் கேட்கின்றன என்பதை அறிந்து வந்து கூறுங்கள்" என்றார்.



இளவரசனுக்குக் குழப்பம் அதிகமானது. தனக்கு அரசனாகும் தகுதி இல்லையோ என்று கூட எண்ணத் தொடங்கி விட்டான். இருப்பினும் குருவின் ஆணையை மீற முடியாதே!

மீண்டும் காட்டிற்குச் சென்றான். மௌனமாக தியானத்தில் ஆழ்ந்தான். சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் அவனுக்கு, தான் அது வரை கேட்காத பல ஓசைகள் கேட்டன. குரு தன்னைக் கேட்கும்படி எதிர்பார்த்தது இவைகளைத்தானோ என்பதை உறுதிசெய்து கொள்ள குருவிடம் ஓடி வந்தான்.

"இளவரசே, இந்த முறை என்னவெல்லாம் ஓசையைக் கேட்டீர்கள்?" என்று கேட்டார் குரு.

"இந்த முறை சாதாரணமான காதுகளால் கேட்க முடியாத ஓசைகளை என்னால் கேட்க முடிந்தது. கேட்க முடிந்தது என்பதை விட உணர முடிந்தது என்பதே சரியாக இருக்கும். பூக்கள் மலரும் ஓசையையும், சூரியனால் பூமி வெப்பமாகும் போது எழும் ஓசையையும் என் காதுகளால், மனத்தால் கண்டு உணர முடிந்தது குருநாதா" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான் இளவரசன்.

குருவின் முகத்தில் இந்த முறை மகிழ்ச்சியும், நிறைவும் தெரிந்தது.

இளவரசனைப் பார்த்து,

"இப்போதுதான் நாட்டை ஆளும் தகுதியை நீ அடைந்திருக்கிறாய். எந்த அரசன் தன் மக்களின் உள்ளங்கள் பேசும் மௌன மொழியைக் கேட்கிறானோ; எந்த அரசன் தன்னுடைய மக்களின் மன உணர்ச்சிகளை உண்மையாக உணர்கிறானோ அவன்தான் மக்களை ஆளத் தகுதி பெற்ற முழுமையான மன்னன். புகழ்ந்து கூறப்படும் அதிகாரிகளின் போலிப் புகழாரங்களை மட்டும் கேட்டு விட்டு மனமகிழ்ந்து, சாதாரண மக்களின் மன உணர்வுகளைக் கேட்கும் திறமை இல்லாது இருக்கிறவன் அரசனாகும் தகுதி இல்லாதவன். அதோடு எந்த நாட்டில், அரசன் தனது மக்களின் உணர்ச்சிகளை அறியத் தவறுகிறானோ அப்போதிலிருந்தே அந்த நாடு அழியத் தொடங்குகிறது என்று அர்த்தம். எனது வாழ்த்துகள். நீங்கள் மக்கள் நலமறிந்து அரசாளும் நல்ல உத்தமமான அரசனாகப் பல காலம் வாழ்வீர்கள்" என்று குரு இளவரசனை வாழ்த்தி அனுப்பி வைத்தார்.

(சீனப் பழங்கதையின் தழுவல்)

தங்க. சங்கரபாண்டியன்

# சந்தேகம்

"ரவி! இங்கே வா!" என்று அழைத்தார் அப்பா.

"என்னப்பா?" என்றபடி துள்ளிப் பாய்ந்து வந்தான் ரவி. ரவி ஐந்தாம் வகுப்பில் படிப்பவன். துறுதுறு வென்ற படுசுட்டி.

"என் மூக்குக் கண்ணாடி, உள்ளே மேஜை மேல இருக்கு. போய் எடுத்துக்கிட்டு வா!" என்றார் அப்பா. ரவி உள்ளே சென்று மூக்குக் கண்ணாடியைக் கொண்டு வந்து அப்பாவிடம் கொடுத்தான்.

அப்பா உறையிலிருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு புத்தகத்தை வாசிக்க ஆரம்பித்தார்.

"அப்பா, ஒரு சின்ன சந்தேகம்," என்றான் ரவி திடீரென்று.

"என்ன கேளு?" என்றார் அப்பா.

"இந்தக் கண்ணாடியை எதுக்குப் போடறீங்க?"

"எனக்குக் கண் பார்வை கொஞ்சம் சரியில்லாததால் டாக்டர்கிட்டே காமிச்சு அவர் ஆலோசனைப்படி கண்ணாடி மாட்டியிருக்கிறேன். கண்ணாடி வழியா பார்த்தா, அதிலுள்ள லென்ஸ், பார்வைக் குறையை சரி செய்திடும்" என்றார் அப்பா.

"ஏம்ப்பா! கண்ணுக்காகத்தானே கண்ணாடி போட்டிருக்கீங்க? பிறகு அதை ஏன் மூக்குக் கண்ணாடிங்கிறீங்க?" - ரவியின் மடக்க வைக்கும் கேள்வி அப்பாவை அசத்தியது. திகைத்துப் போனார் ஒரு நிமிஷம்.

"ரவி! கண்ணாடியை நான் எதில மாட்டியிருக்கிறேன்னு பார்த்துச் சொல்லு?"

"உங்க கண்களிலேதானே மாட்டியிருக்கீங்க. அப்ப கண் கண்ணாடின்னுதானே சொல்லணும்பா?" என்று கேட்டான் ரவி.

"பொறு ரவி! கண்ணாடியை நான் எதில மாட்டியிருக்கேன்னு



இன்னும் கொஞ்சம் கவனமா பார்த்துச் சொல்லு."

அப்பாவின் முகத்தை ரவி இன்னும் கூர்மையாக உற்று நோக்கினான். கண்ணாடியை அவர் எங்கு மாட்டியிருக் கிறார் என்று அவனுக்கு இப்பொ ழுது புரிந்து விட்டது. "அப்பா! கண்ணாடியை உங்க ரெண்டு காதுகளிலேயும்தானே மாட்டி யிருக்கிங்க?" என்றான்.

"அப்போ, இதைக் காதுக் கண்ணாடின்னு சொல்லலாமா?" என்று ரவியைக் கேட்டார் அப்பா.

ரவிக்கு ஒரே குழப்பமாக இருந்தது. கிணறு வெட்ட பூதம் தோன்றின கதையாய், நாம அப்பாகிட்ட ஒரு கேள்வியைக் கேட்க, அவர் பதிலுக்கு ஒரு கேள்வி கேட்டு நம்மை மடக்கிட்டாரே என்று குழம்பினான். "அப்பா எனக்கு ஒன்றும் விளங்கலே" என்றான் கடைசியாக.

"ரவி, நான் போட்டிருக்கிற மூக்குக் கண்ணாடி, பல வடிவங் கள்ல இருந்து கடைசியாய் இந்த வடிவத்தைப் பெற்றிருக்கிறது. கண்ணாடியை நாம காதுல மாட்டுறோம். ஆனா, கண்ணுக்குச் சரியான அளவில இருக்கின்ற மாதிரி மூக்குதான் அதைத் தாங்குகின்றது. கண்ணாடியால தனக்கு உபயோகமில்லா விட்டாலும் மூக்கு பெருந்தன்மையோடு கண் பார்க்க உதவி செய்யுது இல்லையா? அதைப் பாராட்ட வேண்டும் என்றுதான் யாரோ கண்ணாடிக்கு மூக்குக் கண்ணா டின்னு பேர் வைச்சிருக்காங்க" என்றார் அப்பா.

ரவி சமாதானமானான்.

"நாமும் மூக்கு மாதிரி பெருந்தன்மையோடு இருந்தா பெயர் வாங்கலாம்" என்றான் தெளிவோடு.

பாளை பசும்பொன்

# குரங்கு

குட்டியை வயிற்றில் சுமக்கும் - அது
குதித்தே எங்கும் நடக்கும்
திட்டிய பேர்களை முறைக்கும் - பல
தெருக்களில் சேர்ந்து இருக்கும்

கைகளில் உள்ளதைப் பறிக்கும் - முகக்
கண்ணாடி கிடைத்தால் சிரிக்கும்
பையவே அருகினில் நெருங்கும் - வாழைப்
பழங்களை எடுத்து ஒதுங்கும்

சட்டென்று கூரையில் விரையும் - நாம்
சந்திக்க முயன்றால் மறையும்
பட்டென்று முன்வந்து திரியும் - அதன்
பழக்கத்தால் குரங்கென்று புரியும்

குழந்தைகள் பார்த்ததை மகிழும் - தினம்
குரங்கதன் சேட்டைகள் நிகழும்
இழந்ததை நெஞ்சம் மறக்கும் - குரங்கு
எதிர்பட்டால் துன்பம் பறக்கும்.


- குழிபிறை கஸ்தூரிநாதன்



# டிடெர்ஜெண்ட் பிரச்சனை!

ஒரு காலத்தில் துணிகளுக்குப் போடும் சலவை சோப்பு, பணக்காரர்கள் மட்டுமே பயன்படுத்தக்கூடிய பகட்டான பொருளாக இருந்தது. இன்று சோப்பைப் பயன்படுத்தாதவர்களே கிடையாது என்னும் நிலை உருவாகி உள்ளது.

சோப்பு என்பது என்ன? அழுக்கைப் போக்கும் நுரைவழங்கும் சாதனம். தாவர எண்ணெய் அல்லது கொழுப்பு எண்ணெய்களுடன் காஸ்டிக் சோடாவைச் சேர்த்து விட்டால் சோடியம் அல்லது பொட்டாசியம் உப்பு திரளும். நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய் போன்றவைகளை இதற்குப் பயன்படுத்துகிறார்கள்.



இப்பொழுது 'டிடெர்ஜெண்ட்' சோப்புகள் அதிகமாக வெளிவரத் தொடங்கி விட்டன. தாவர எண்ணெய்களில் இருந்து தயாரிக்கப்படும் சோப்புகள் கிணற்று நீர் போன்ற கடின நீர்களில் எளிதில் கரைவதில்லை. திரி திரியாகி வாளிகளின் ஓரத்தில் பிசுக்கு மாதிரி திரளும். இதன் காரண மாக, அழுக்கை சுத்தப் படுத்தத் தேவைப்படும் நுரை கடினமான கிணற்று நீரில் கிடைப்பதில்லை. இந்தக் குறையைப் போக்கவே டிடெர்ஜெண்ட் சோப்புகள் தோன்றின.

இந்த டிடெர்ஜெண்ட் சோப்புகளை எப்படித் தயாரிக்கிறார்கள்? பெட்ரோலியம், நிலக்கரி, தார் போன்ற வேதிப் பொருள்களைக் கலந்து 'டிடெர் ஜெண்ட்' சோப்புகள் தயாரிக்கப் படுகின்றன. இவைகளில் இயற்கைப் பொருள் எதுவும் இல்லை. எல்லாமே செயற்கைப் பொருள்கள்தான்.

'டிடெர்ஜெண்ட்' கடினமான கிணற்று நீரில் மட்டுமில்லை, ஆசிட்டுகளில் கூட கரைந்து நுரையைத் தருகிறது. குளுமையான நீரிலும், கொதிக்கும் நீரிலும் கூட இவை கரைந்து 'குபுகுபு'வென நுரையைத் தள்ளி அழுக்கைப் போக்குகின்றன.


இன்றைக்கு 'டிடெர்ஜெண்ட்' சோப்பைப் பயன்படுத்தாதவர்களே கிடையாது. இவை 'பௌடர்' வடிவிலும் மிகவும் கூடுதல் சக்தி கொண்டவையாகவும் கூடத் தயாரிக் கப் படுகின்றன.

கிணற்றுத் தண்ணீரையே நம்பியிருப்பவர்களுக்கு 'டிடெர்ஜெண்ட்' ஒரு வரப் பிரசாதம் என்றாலும், இது புதிய பிரச் சனைகளை உருவாக்கத் தவறவில்லை. சாதாரண சோப்பைப் போட்டுத் துவைத்த நீரினால் மண்ணுக்குப் பாதிப்பு ஏதும் இல்லை. ஆனால் 'டிடெர்ஜெண்ட்' போட்டுத் துவைத்த நீர், இவற்றில் கலந்துள்ள செயற்கை வேதிப் பொருள் காரணமாக மண்ணின் கடினத் தன்மையை அதிகரிக்க வைக்கிறது.

மண்ணில் இந்த டிடெர்ஜெண்ட் அழுக்கு நீர் இறங்கி நிலத்தடி நீரையும் பாதிக்கிறது. இந்தப் பகுதிகளில் உள்ள கிணற்று நீர் மாசுபடுகிறது. இவைகளில் விடப்படும் மீன்களும் இறந்து விடுகின்றன. டிடெர்ஜெண்ட் கலவை நீர் ஆற்றுடன் கலந்தால் அது கால் நடைகளையும் பாதிக்கிறது.

இதனால் சுற்றுப் புறத்தூய்மையும் கெடுகிறது.

விஞ்ஞானிகளுக்கு 'டிடெர்ஜெண்ட்' இன்று பெரும் பிரச்சனையாகவும் சவாலாகவும் உள்ளது. உடனடியாக இதற்கு ஒரு வழி கண்டுபிடிக்க இவர்கள் தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.



# சும்மாவா கிடைத்தது?

ரொட்டிக் கடையில் வியாபாரம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. முதலாளி கிருபாராம், தானே கல்லாவில் உட்கார்ந்து வியாபாரத்தைக் கவனித்தார்.

உணவுப் பொருள்களுக்குக் கடுமையான பற்றாக்குறை இருந்ததால் 'ரேஷன்' முறை அமுலிலிருந்த காலம். ரேஷன் கார்டைக் கடையில் காட்டினால்தான் ரொட்டி கொடுப்பார்கள். இஷ்டத்திற்குப் போய்க் கேட்டால் ரொட்டியைத் தர மாட்டார்கள்.

கிருபாராம் கடைக்கு முன்பாக கம்பீரமான ஓர் இராணுவக் குதிரை வந்து நின்றது. அதிலிருந்து குதித்த பிரிட்டிஷ் இந்தியச் சிப்பாய் கடைக்கு வந்தான்.

''குட்மார்னிங் சாப்'' என்று பணிவாக வணங்கினார் கிருபாராம்.

"சாகிப் சாப்புக்கு என்ன வேணும்?"

"பதினைந்து ரொட்டிகள் வேணும்.... உடனே பேக் பண்ணிக் கொடுங்க."

"ரேஷன் கார்டு இல்லாம நான் ரொட்டி வித்தால், என்னைச் சிறையில் தள்ளிடுவாங்க சாப்."

"நான் கேட்கிறேன், கொடு."

"மன்னிச்சுக்குங்க சாப். நான் ஏழை. கருணை காட்டுங்க."

சிப்பாயின் நீண்ட துப்பாக்கி முனை கிருபாராமின் நெஞ்சுக்கு நேராக நீண்டது.

''உம். மறு வார்த்தை பேசாம

ரொட்டியை பேக் பண்ணிக் கொடுங்க."

கிருபாராம் பதினைந்து ரொட்டிகளை ஒரு காகிதத்தில் வைத்துக் கட்டிக் கொடுத்தார். பொட்டலத்துடன் சிப்பாய் நகர்ந்தான்.

"இந்த அநியாயத்தைக் கேட்க ஆளில்லாம போச்சே. அமிர்தசரஸ் நகர்ல இந்த பிரிட்டிஷ் இந்திய சிப்பாய்களின் அக்கிரமம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறதே!" என்று புலம்பினார் கிருபாராம்.

பள்ளியில் இருந்து வந்திருந்த சிறுவன் கியான்சந்த் நடந்ததையெல்லாம் பார்த்துக் குமுறினான்.

"வகுப்புல நண்பர்களெல்லாம் பேசிக்கிட்டது சரிதான். நாம்ப அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். வியாபாரம் செய்வதற்காக பிரிட்டனில் இருந்து வந்தவங்க நமது ஒற்றுமையின்மையை பயன்படுத்தி, நம்மை அடிமைப்படுத்தி ஆளறாங்க. அடிமைகளிடம் எஜமானர்கள் நியாயமாகவா நடந்து கொள்வாங்க? அப்படி எதிர்பார்ப்பது எத்தனை முட்டாள்தனம்? இந்த அநியாயத்திற்கு எல்லாம் முடிவு கட்டறத்துக்கு ஒரே வழி நம்ம நாட்டுக்கு சுதந்திரம் கிடைப்பதுதான்" என்று மனத்திற்குள் கூறிக் கொண்டான் கியான்சந்த்.

அடுத்த நாள் கியான் பள்ளிக்குச் சென்ற போது, அவனது அருமை நண்பன் தீன், பள்ளி மைதானத்தில் கவலையோடு உட்கார்ந்திருந்தான். தீனின் முழுப் பெயர் அகமத் தீன். அவனுடைய தந்தை சட்டி பானை செய்யும் குயவர். கஷ்டமான வாழ்க்கை. தீன், அருமையாகக் கால்பந்து ஆடுவான். என்ன ஆயிற்று அவனுக்கு இப்படி உட்கார்ந்திருக்கிறான்!

"கியானி, நேற்றைக்கு இராணுவச் சிப்பாய்ங்க எங்க கடைக்கு வந்து ஏராளமான சட்டி பானைகளையும், பூந்தொட்டிகளையும் இராணுவ வண்டியில் தூக்கிப் போட்டுக்கிட்டுப் போயிட்டாங்க. அப்பா காசு கேட்டாரு. அதுக்காக அவரை முரட்டுத்தனமா கீழே தள்ளிட்டு, மீதி இருந்த எல்லா சட்டி பானைகளையும் உடைச்சுட்டுப் போயிட்டாங்க. அப்பாவுக்குக் கையில காயம்"



என்றான் தீன்.

கியான்சிங் தங்கள் கடையில் நடந்த நிகழ்ச்சிகளை விளக்கினான். தீன் குமுறினான்.

"இந்த பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஒரு முடிவு கட்டி, நம்மை நாமே ஆளும்படி செய்ய வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் விடுதலை இயக்கம் நாட்டில் மற்ற பகுதிகளில் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இது ஆங்கில அரசின் அடக்குமுறைச் சட்டத்தை எதிர்க்கிறது. இதற்கு இங்கே இடமளிக்கக் கூடாது என்று பிரிட்டிஷ் அரசு அடக்கு முறைச் சட்டத்தை அமுல் படுத்தியிருக்கு. தெருவில் இரண்டு பேர் கூடிப் பேசக் கூடாது. மீறினால் சிறைவாசம். கசை அடி."



''இதுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும் தீன். நாமும் இந்த இயக்கத்தில் சேர்ந்து, இவர்களுடைய நோக்கம் வெற்றி பெறப் பாடுபட்டால் என்ன?

''நான் ஏற்கெனவே இந்த இயக்கத்தில் சேர்ந்தவங்க சில பேரை இரகசியமா போய்ச் சந்திச்சிருக்கேன். நீ பதினைந்து வயது கூட நிரம்பாத சிறுவனாச்சே. உன்னால என்ன பண்ண முடியும்னு கேட்டாங்க. என்னால பதில் கூற முடியலே. இவங்களோட கூட்டம் ஒன்று வரும் 13-ஆம் தேதி ஜாலியன்வாலா பூங்காவில் நடைபெற இருக்கிறதாம். இந்தச் செய்தியை எல்லோருக்கும் அறிவிக்க உன்னால ஏதாவது தந்திரம் பண்ண முடியுமான்னு கேட்டாங்க. எனக்குப் பதில் கூற முடியலே?"

"இவ்வளவுதானே? கையகலக் காகிதத்தில் ஐநூறு நோட்டீசை நாமே கையாலே எழுதி, ஊர் முழுக்கக் கொடுத்திடுவோம். நம்ப நண்பர்களையும் சேர்த்துக் கொள்ளுவோம். பள்ளி முடிந்ததும் கிளம்பலாம்."

கையால் எழுதிய கூட்ட அறிவிப்பு நோட்டீசை தீனும், கியான்சந்தும் தங்கள் நண்பர்களுடன் ஆரவாரமில்லாது வீட்டுக்கு வீடு விநியோகித்துக் கொண்டிருந்தார்கள்.

கடைவீதிக்கு அருகே ஒரு நீண்ட தெரு. அதுதான் வண்டிப் பேட்டையையும் கடை வீதியையும் இணைத்தது.

# மறைந்திருப்பவை என்ன? - போட்டி முடிவு

இந்தப் போட்டியில் கலந்து கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை ஏன்னூறைத் தொட்டுவிட்டது! பெரும்பாலானவர்கள் சரியான விடையையே எழுதியி ருக்கிறார்கள். பரிசுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்க வழக்கப்படி குலுக்கல் முறையே கைகொடுத்தது.

சரியான விடை :

1. தேசிங்கு திரைக்குப் பின்னால் என்ன?
   - குதிரை
2. இட்டிலி என்னப்பா கல் மாதிரி இருக்கே?
   - பாகல்
3. காட்டில் வில்லி மலர் பூத்திருக்கா?
   - டில்லி.
4. கப்புவை காசிக்குப் போகச் சொல்லவா?
   - வைகாசி.
5. விக்கல் கிட்டுவுக்கு நின்னுதா?
   - கல்கி.
6. இங்கே ரம்பம் இருக்குதா?
   - கேரம்.
7. கொடுக்கல் வாங்கல் கத்தாழை மாதிரி இருக்கலாமா?
   - கல்கத்தா.
8. போக்கா, விசில் பொம்மை யாருக்கு வேணும்?
   - காவிரி.
9. இரும்மா, துளைக்காதே, சினிமாவுக்கா போகணும்?
   - மாதுளை.
10. ஒரே போர். பந்தர் தெருவுக்காவது போகலாமா?
    - போர்பந்தர்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. அருள்முருகன், சின்னக்காஞ்சி, 2. சா. விநோத், திருவாரூர், 3. ப. நபீஸ் அகமத், ஆடுதுறை அஞ்சல், 4. க. இரமேஷ் குமார், மேட்டூர் அணை, 5. ஹரிணி சிங்கர், ஜே., புதுடில்லி, 6. அரவிந்த் ரவீந்தரன், சூரத், குஜராத் மாநிலம், 7. சந்திரமௌலி பரத்வாஜ், நாகபுரி, மகாராஷ்ட்ரா, 8. P. பீட்டர் அருண் பிரதீப், தாராபுரம், 9. எஸ். சுகன்யா, ஹௌரா - 2, மே. வங்காளம், 10. ஏ. கே. ஸ்ரீகண்டன், பெங்களூர் - 16, கர்நாடகா, 11. திவ்யா சாய்நாத், பூனா, மகாராஷ்ட்ரா, 12. க. தீபக் குமார், மேட்டுப்பாளையம், 13. ஆர். சத்தியா, கடலூர் - 1, 14. மேகா ஆர். நடராஜன், நாகபுரி, மகாராஷ்ட்ரா, 15. என். அபுல்பசல், விளாத்திகுளம், 16. ஆர். ஜெனிஃபர், துங்களிகாட் அஞ்சல், அந்தமான், 17. எஸ். செல்வராஜன், சேலம் - 3, 18. மு. இ. நஸிஹா, உடுமலை, 19. பி.கே. ஆர்த்தி, சென்னை - 5, 20. என். ஜீவரத்தினம், கொடுமுடி, 21. ஜி. முத்துக்குமரன், குடியேற்றம், 22. அ. சேதுபதி, கொண்டமநாயக்கன்பட்டி.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

நண்பர்கள் அந்தத் தெருவுக்குள் நுழைந்த போது, அங்கே காவலுக்கு இருந்த இராணுவச் சிப்பாய், "டேய் தம்பிங்களா, இங்கே வாங்க" என்று மிரட்டலாக அழைத்தான்.

நண்பர்கள் நடுக்கத்தை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. கியான்சந்த் மட்டும் சிப்பாயிடம் போனான்.

"கூடையில என்ன? கையில என்ன காகிதம்?"

"கூடையில வெள்ளரிக்கா. பொடிப் பொடியா நறுக்கி உப்பு மிளகுத்தூள் போட்டுத் தர துண்டுக் காகிதம்."

"சரி, எனக்கும் கொஞ்சம் கொடு."

திகைத்துப் போன கியான்சந்த், எழுதாத ஒரு காகிதத்தை எடுத்து வெள்ளரித் துண்டுகளை வைத்து உப்புப் போட்டு நீட்டினான்.

"நல்ல பசங்க" என்று பாராட்டிய சிப்பாய், "இந்தத் தெருவில் இனிமே யாருமே நடந்து போகக் கூடாது. இரண்டு கைகளையும் தரையில் ஊன்றித் தவழ்ந்துதான் போகணும்" என்றான்.

"ஏன்?"

"போன வாரம் இந்தத் தெருவில் ஒரு பிரிட்டிஷ் பாதிரியாரை யாரோ ஓர் இந்திய அடிமை நாய் தாக்கி விட்டது. தாக்கியவன் யாரென்று கண்டுபிடிக்க முடியலே. அதனால இந்தத் தெருவுக்கே எங்க கவர்னர் இப்படி ஒரு உத்தரவு போட்டு தண்டனை வழங்கியிருக்கார்."

"குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியலேங்கறதுக்காக இப்படி எல்லோரையும் தண்டிப்பது நியாயமா? இப்படித் தவழ்ந்து நடக்க முடியாத வயதானவங்க எத்தனை பேர் இந்தத் தெருவில் இருப்பாங்க? அவங்களுக்கெல்லாம் இது சித்ரவதையா இருக்காது?" என்று ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு கேட்டான் கியான்சந்த்.

"அடிமைகளை இப்படித்தான் நடத்தணும்" என்று ஆணவமாகக் கூறிய சிப்பாய், "தம்பிங்களா, நீங்களும் தவழ்ந்துதான் போகணும். மறுத்தா கசையடியும் சிறைத் தண்டனையும்தான்" என்று முறைத்தான்.

அந்த ஆணவம் பிடித்த சிப்பாயை

அப்படியே அடித்து நொறுக்கிவிட நண்பர்கள் துடித்தாலும், வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு முன் கை இரண்டையும் குனிந்து தரையில் ஊன்றி நடந்தனர்.*

நண்பர்களின் முயற்சிக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது. ஜாலியன்வாலாபாக் என்ற அந்தச் சிறிய பூங்காவில் அன்று இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். எத்தனையோ கவனமாகப் பார்த்துக் கொண்டும், இத்தனை மக்களை ஒன்று கூட வைக்க எப்படி முயற்சி எடுத்தார்கள் என்பது வெள்ளைக்கார அரசுக்குப் புதிராகவே இருந்தது. கூடியவர்கள் எல்லோருமே ஏதாவது ஒரு வகையில் ஆங்கில ஆட்சியின் கொடுமைக்கு இலக்காகி பாதிக்கப்பட்டவர்கள் என்பதை அரசு உணரவில்லை.

கூட்டம் நடந்த பூங்காவுக்கு ஒரே ஒரு வழிதான். அதுவும் கூடக் குறுகலானது. கூட்டம் தொடங்கியதும் துப்பாக்கி ஏந்திய 150 இராணுவ சிப்பாய்களுடன் அங்கே வந்தார் தளபதி ஜெனரல் டயர்.

இதில் நூறு பேர் இந்தியர். முன் வரிசையில் இந்திய சிப்பாய்களையும், அவர்களுக்குப் பின்னால் பிரிட்டிஷ் சிப்பாய்களையும் நிற்க வைத்து, கூட்டத்தினரைக் கலைந்து போகச் சொல்லி எச்சரித்தார் டயர். எச்சரிக்கை விட்டாலும், கலைந்து போக வழியே இல்லாது சிப்பாய்கள் பூங்காவின் குறுகிய வாயிலை அடைத்து நின்றனர். இரண்டு நிமிடம் கடந்தது. "சுடுங்கள்" என்று டயர் உத்திரவிட அரை மணி நேரம், துப்பாக்கிகள் குண்டு மழை பொழிந்து ஓய்ந்தன. குண்டுகள் எல்லாம் காலி. சுடப்பட்ட குண்டுகள் 1000.

கூடியிருந்த 20,000 பேரில் பாதிக்கு மேல் கூட வீடு திரும்பவில்லை என்று சரித்திரம் கூறுகிறது! இதில் கியான் சந்த், தீன் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள்.

கியானும், தீனும் அவர்களைப் போன்ற மற்ற சிறுவர் பெரியவர்கள் செய்த தியாகம் வீண் போகவில்லை. இந்தியா சுதந்திரம் பெற்றது. இதை நாம் பெறத் தங்களையே தந்து மறைந்த அந்த எண்ணற்ற முகம் அறியாத தியாகிகளை எண்ணிப் பார்ப்போம். அவர்களைப் போன்றவர்களின் தியாகத்தை விலை கொடுத்துப் பெற்றதே நமது சுதந்திரம். இதை ஏளனமாக எண்ணாது, பெருமையாக எண்ணி, அந்தத் தியாக உணர்வு நமக்கும் கிடைக்க இறைவனை வேண்டுவோம்.

* இந்தத் தெரு **Kneelers street** என்று இன்னமும் இருக்கிறது.

* கியான்சந்த்தும், அகமத்தீனும் உண்மையாக வாழ்ந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்டு, ஜாலியன்வாலா பாக் படுகொலையில் தியாகிகளான சிறுவர்கள்.



## கோடை விடுமுறைப் போட்டி - 2 முடிவு

என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்தப் போட்டியில் எதிர்பார்த்த அளவுக்கு வாசகர்கள் மிக ஆர்வமாகக் கலந்து கொள்ளவில்லை. ஆனால் வந்தவை எல்லாமே சரியான விடை. கடைசியில் குலுக்கல் முறையே பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க உதவியது.


### சரியான விடை :

அருமை நண்பா, வணக்கம். தேர்வுகளை நன்கு எழுதினாயா? இங்கே என்று வருவாய்? பரிசு கிடைக்க வாழ்த்துகள். வருவதை இன்றே எழுது. அருமை நண்பன் கார்த்தி.

### ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர்:

1. எஸ். கதிரேசன், மண்ணிப்பள்ளம் அஞ்சல், 2. எம். ஜெ. முத்துசாமி, சென்னை - 82, 3. இரா. திவாகரன், கண்டன் கோட்டை, 4. ஆர். பத்மஸ்ரீ, சென்னை - 83, 5. ஏ. கார்த்திக், பரமார்த்தலிங்கபுரம் அஞ்சல், 6. கே. தஸ்தகீர், தஞ்சை - 9, 7. ம. கிரீசன், சென்னை - 101, 8.ச. சரவணராஜா, அருப்புக்கோட்டை, 9. ம. கோதை, காஞ்சிபுரம், 10. B. M. சபிதா, திருச்சி - 17, 11. க. அனிதா, வேதாரண்யம், 12. ஆர். கோபிநாத், ஆரணி.

பரிசு பெற்றவர்களுக்கு வாசகர் சார்பில் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.



சோனியா காந்தி, அம்மாவுடன் பவித்ரா

# ‘வெல்கம் பவித்ரா!

**போ**பால் நகரில் இந்திய இராணுவத்தினர் குடியிருப்பு. குடியிருப்பை ஒட்டி ஒரு மைதானம். அது ஒரு கல்லூரிக்குச் சொந்தமானது. அங்கே அடிக்கடி ஏதாவது விழா அல்லது விருந்து நடக்கும். கண்களைக் கவரும் வண்ணம் மின் விளக்கு அலங்காரம், பாட்டு எல்லாம் இருக்கும். குடியிருப்பில் இருந்த இராணுவத்தின ரின் குழந்தைகள் அடிக்கடி அந்த மைதானத்திற்கு விளையாடப் போவார்கள்.

இந்த ஆண்டு, ஜனவரி மாதம் ஒரு நாள். அந்த மைதானத்தில் பந்தல் போட்டு, அழகு படுத்தி, கண் கவரும் வண்ணம் வண்ண வண்ண மின் விளக்குகளைப் போட்டு தடபுடல் பண்ணியிருந்தார்கள். இராணுவத்தார் வீட்டுக் குழந்தைகள் வேடிக்கை பார்க்கவும், விளையாடவும் வந்திருந்தனர்.

வந்தவர்களில் மூன்று குழந்தைகள் குறிப்பிடத் தக்கவர்கள். ஒருத்தி ஆறு வயது கூட நிரம்பாத பவித்ரா. மற்றும் இருவர், இரட்டையர்கள். புனீத், ரிஷித். அந்த விழா வேடிக்கைகளைக் காண புனித், ரிஷித்தை அழைத்தான். ரிஷித்தும் வந்தான். வந்தவன், புனீத்தை முந்திக் கொண்டு பெரிய இரும்புக் கதவுக்குள் இருந்த மினி கதவு வழியாக உள்ளே போய் விட்டான். பின்னாலேயே புனீத் நுழைந்திருக்கிறான். நுழைந்தவன் சும்மா இருந்திருக்கக் கூடாதா?

வண்ணச் சரமாகத் தொங்கிய மின்சார ‘சீரியல்’ ஒயர்கள் அவன் கைக் கெட்டும் உயரத்தில் இருந்ததை புனீத் பார்த்தான். உடனே அதை ஆசையாகத் தொட்டுவிட்டான். இந்த மாதிரி சீரியல் விளக்குளைத் தொங்க விடும்போது, இணைப்பு ஒயர்களை மூடி, இன்சுலேட் பண்ணியிருக்க வேண்டும். குட்டிப் புனீத்தின் போதாத காலம், இன்சுலேட் செய்யப்படவில்லை. புனீத் தொட்டதும் உடலில் மின்சாரம் பாய்ந்து அவன் அப்படியே நின்ற இடத்தில் நின்று விட்டான்.

அங்கே வந்த பவித்ரா, “என்னடா புனீத், ஏன் அப்படியே நிக்கறே? வா வேடிக்கை பார்க்கலாம்” என்று அழைத்தாள். புனீத்திடம் எந்த விதமான சலனமும் இல்லை. பவித்ராவுககு, அவனுக்கு என்னவோ ஆகி விட்டது என்பதை மட்டும் உணர முடிந்ததே தவிர, அது என்ன என்பதை அவளால் அறிய முடியவில்லை. காலில் கேன்வாஷ் பூட்ஸ் அணிந்திருந்தாள். அதனால் வந்தது வரட்டும் என்று துணிந்து தன் காலைத் தூக்கி, புனீத்தை எட்டி உதைத்தாள்.

புனீத்துக்கு மின்சாரத்தில் இருந்து விடுதலை கிடைத்தது.

புனீத் விழுந்ததும், பவித்ரா ஓடிச் சென்று பார்த்தாள். பேச்சு மூச்சில்லை. வாயில் வாய் வைத்து ஊதியும், நெஞ்சைப் பிசைந்து கொடுத்தும் மூச்சை வரவைத்தாள். உடனே டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்பது அவளுக்குத் தெரிந்தது. ஆனால் எப்படிப் போவது?

நல்ல வேளையாக பவித்ராவின் அண்ணன் குமார் அங்கே வந்தான். இருவருமாகச் சேர்ந்து புனீத்தை, அந்தத் தெருவின் கோடியில் இருந்த டாக்டரிடம்




# 'வெல்டன்!'

• பிரதமர் பரிசளிக்கிறார்

தூக்கிச் சென்றனர். டாக்டர் உடனே, கவனித்து சிகிச்சையைத் தொடங்கினார். புனீத்தின் பெற்றோர்களுக்கும் தகவல் போனது.

"இதே நிலையில், இன்னும் ஓரிரு நிமிஷம் தாமதித்திருந்தால்கூட புனீத் நம்மை விட்டுப் போயிருப்பான். அவன் உடம்பில் மின்சாரம் பாய்ந்து பிடித்துக் கொண்டிருந்தது. இதோ அவன் கையைப் பாருங்கள்" என்று டாக்டர் கூறியதும் தான் பவித்ரா எத்தகைய ஒரு பேராபத்தில் இருந்து குட்டிப்பையன் புனீத்தின் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாள் என்பதை எல்லோரும் உணர்ந்தனர். புனீத்தின் கை கருகியிருந்தது.

"பவித்ரா, நீ அருமையான நல்ல செயல் ஒன்றைச் செய்து, மின்சாரம்



• பெற்றோர் அண்ணனுடன்



• குடியரசுத் தலைவர் விருந்தளித்துப் பாராட்டுகிறார்.

பாய்ந்த ஒரு குழந்தையின் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாய். உனக்குப் பரிசு தந்து பாராட்ட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு எழுதப் போகிறேன்" என்றார் டாக்டர்.

செய்தி பரவியது. செய்திப் பத்திரிகைகளில் பவித்ராவின் படமும், பேட்டியும் வெளி வந்தன. வீரச் செயல்களுக்காக பிரதமரால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுக்கு பவித்ராவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டு, அவளுக்கு டெல்லிக்கு வர அழைப்பும் வந்தது. பாரதப் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் பரிசளித்து மாலையும் போட்டார். பவித்ராவைப் போலவே இந்த ஆண்டு 22 வீரச் சிறுவர்களுக்கு குடியரசு தினத்திற்கு முன் பரிசு வழங்கப்பட்டது. அவர்களில் பவித்ராவே மிகவும் சிறியவள்.

வீரச் சிறுவர்க்கான பரிசு தமிழ் நாட்டுக்கு கிடைத்து ஒன்பது ஆண்டுகள் ஆகின்றன. அதற்குப் பிறகு இப்பொழுது தான் பவித்ராவால் கிடைத்திருக்கிறது. பவித்ராவின் தந்தை மலையப்பனும் இந்திய இராணுவத்தில்தான் இருக்கிறார். தாயும், தந்தையும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். பவித்ரா அண்மையில் கோடை விடுமுறைக்காக சென்னைக்கு வந்திருந்தபோது கோகுலத்தின் சார்பில் பேட்டி காணப் போனோம். ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் சக்கைப் போடு போடும் பவித்ரா தமிழிலும் பேசுகிறாள். ஆனால், தமிழில் படிக்கத் தடுமாறுகிறாள். தந்தை இராணுவத்தில் இருப்பதால் அடிக்கடி ஊர் மாற்றி விடுகிறார்கள்.

"இங்கே சென்னையில் யார் வீட்டுக்கு வந்திருக்கே?"

"எங்க தாத்தா வீட்டுக்கு. எங்கம்மாவுக்கு பழனி தான் சொந்த ஊர். அப்பாவுக்கு ஒட்டன் சத்திரம்."

"நீ புனீத்தைத் காப்பாத்தினப்போ என்ன நினைச்சே?"

"அவனுக்கு ஆபத்து. அதிலிருந்து காப்பாத்தணும்கிற வேகம்தான் எனக்கு இருந்தது. பிறகுதான் டாக்டர் கூறிய பிறகு, அவனுடைய உயிருக்கு வந்த ஆபத்திலிருந்தே காப்பாத்தியிருக்கோம்னு புரிஞ்சது. எனக்கு. ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது."

"பிரதமர்கிட்டே பதக்கம் வாங்கினே ! குடியரசுத் தலைவர் விருந்து கொடுத்தார். இதெல்லாம் பெருமை தானே?"

"கண்டிப்பா. ஆனால், புனீத்தின் உயிருக்கு வர இருந்த ஆபத்திலிருந்து காப்பாத்தினோம்னு தெரிஞ்ச உடனே எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை எதுவோடும் ஒப்பிட முடியாது."

பவித்ராவுக்கு பெயின்டிங், விளையாட்டுகள் எல்லாமே பிடிக்கும். வகுப்பில் அவள்தான் முதல் ரேங்க். பவித்ரா வீரச் செயலுக்கான விருதைப் பெற்றதை பல அமைப்புகளும், பள்ளிகளும் பாராட்டியிருக்கின்றன. நெருக்கடியான நேரங்களில் தம்பி தங்கைகள் எப்படித் துணிவோடு செயல்பட வேண்டும் என்பதற்கு பவித்ரா ஒரு எடுத்துக்காட்டு. கோகுலத்தின் பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் சார்பில் நாமும் பாராட்டுவோம்.

அட்டையில்: கோகுலம் வாசகர் சார்பில் பவித்ராவுக்கு மாலை போடுவது சிறுமி சீதா.
வண்ணப்படம்: **யோகா.**

# மலைப்பாம்பு நஞ்சுடையதா?

ரேவதி



**பா**புவின் கிரிக்கெட் டீம் தெருவின் இரு பக்கங்களையும் அடைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தது.

"என்னடா தம்பி! காலையிலேயே இப்படி ஆட ஆரம்பிச்சிட்டீங்களா? இரு இரு... நான் போயிடறேன். அப்புறமா பந்து வீசச் சொல்" என்று இரண்டொரு பெரியவர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டி விட்டுப் போனார்கள்.

முத்து வீசிய பந்தை பாபு அடித்தான். அது கண்ணம்மா வீட்டு கண்ணாடி ஜன்னலைப் பதம் பார்த்து "பொலபொல" வென்று உடைந்து கொட்டியது. அதிலே ஒரு கண்ணாடிச் சில்...

கழுத்தில் பெரிய மலைப் பாம்பைப் போட்டுக் கொண்டு, கையில் மகுடியோடு ஓரமாக நின்று கிரிக்கெட் ஆட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிறுவனின் தலையில் விழுந்தது!

''அம்மா!'' என்று கத்திக் கொண்டே சிறுவன் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான். அவன் மறுபடி கையை எடுத்துப் பார்த்த போது கையெல்லாம் இரத்தக் கீறல்!

"ஐயையோ, செப்டிக் ஆயிடுமே! உடனே ஏடிஎஸ் ஊசி போட்டுக்க. இல்லேன்னா ஆபத்து," என்று பதறினான் பாபு.

"அதுக்கு எங்கிட்ட காசு இல்லேங்க அண்ணா. வீட்டுக்குப் போய் மஞ்சளை அரைச்சுப் போட்டா சரியாயிடும்."

"தம்பி, நீ காசு தர வேண்டாம். எங்கப்பாவே டாக்டர்தான். அம்மாவே ஊசி போடச் சொல்றேன்."

"ஐயையோ வேண்டாங்க. ஊசி போட்டா வலிக்கும் அண்ணா."

"பார்த்தாலே எல்லோரும் பயப்படற இத்தனை பெரிய மலைப் பாம்பைக் கழுத்திலே போட்டிருக்கற நீ, ஊசி போட்டுக்க இப்படி நடுங்கறியே!" என்று சிரித்தான் பாபு.

இதற்குள் பாபுவின் அப்பாவே காரில் வந்து இறங்கினார். பாபு விஷயத்தைக் கூறினான்.

"எறும்பு கடிக்கிறாப் போலதான் இருக்கும். பயப்படாம போட்டுக்க" என்று தைரியம் கூறிய அப்பா, "பாபு, இவனை உள்ளே கூட்டிக்கிட்டு வா" என்று கூறிவிட்டு உள்ளே போனார்.

முரண்டு பிடித்து ஓடிப் போய் விட முயன்ற பாம்புச் சிறுவனுக்குச் சிறுவர் பட்டாளம் தைரியம் கூறி ஒரு வழியாகச் சம்மதிக்க வைத்தது.

"அண்ணா, ஊசி போட்டுக்கற வரை பாம்பை என்ன செய்ய? நீங்க போட்டுக்கறீங்களா?"

இப்பொழுது பாபு அரண்டான்! சிறுவர் கூட்டம் விலகிக் கொண்டு அச்சத்தோடு பார்த்தது.

"மலைப்பாம்பு, கழுத்தை இறுக்கி, மூச்சுத் திணற வைத்து கொன்று விழுங்கும்னு கேள்விப்பட்டிருக்கோமே...?"

"அது உண்மைதான். பசிக்கும் போது, இரை தேவைப்படும் போது மலைப் பாம்பு அப்படித்தான் இருக்கும். ஆனால், இரையை விழுங்கியதும் ஜீரணமாகி மறுபடி பசி எடுக்கும் வரை அது பொம்மைப் பாம்பு மாதிரிதான். சுத்த சோம்பேறி. நான் என் கழுத்தில்தானே மாலையா போட்டுக்கிட்டு வந்தேன்? இன்னிக்குக் காலையில் இது இரண்டு பெருச்சாளியையும் ஒரு முயல் குட்டியையும் விழுங்கியிருக்கு. அதனால சாயங்காலம் வரை இதுக்குப் பசிக்காது. தைரியமா வாங்கிப் போட்டுக்குங்க."

பாபு, பயம் நீங்காதவனாக பாம்பை மெதுவாகத் தொட்டுப் பார்த்தான்.



பேக்கரி ரொட்டியைத் தொட்டது போன்ற உணர்வு. ஆனால், நீர் நிறைந்த பி.வி.சி. பிளாஸ்டிக் குழாயைத் தூக்கு வது போன்ற கனம்! பாம்பு, சிறுவன் முதுகுக்கு ஏறி, பின்னால் தலையைத் தூக்கி, பாபுவைப் பார்த்தது. பிளந்த சிவந்த நாக்கை நீட்டியது.

பாபு பின்வாங்கினான்.

"தம்பி இந்தப் பாம்புக்கு எத்தனை வயது?"

"பதினெட்டு வயசாச்சு அண்ணா. எங்க தாத்தா கொல்லி மலைக்காட்டுல இருந்து இதனோட அம்மாவைப் புடிச் சிக்கிட்டு வந்தாராம். அது எழுபது முட்டை இட்டுதாம். ஐந்தை மட்டும் வைச்சுக்கிட்டு மீதியை விலைக்குக் கொடுத்துட்டாராம்."

"இது கடிச்சா விஷமா?"

"மலைப் பாம்புக்கு நச்சுப் பையோ, நச்சுப் பல்லோ கிடையாது. அதனால இது கடிச்சா விஷமே இல்லை. அதோட இது கடிக்காது. பசிக்கும் போது இரை கிடைச்சால் கழுத்தைச் சுற்றி இறுக்கி, மூச்சுத் திணற வைச்சு சாகடிக்கும். அப்படியே முழுங்கும். இது கூட இளமையா இருந்தப்போ ஒரு முழு மானையே முழுங்கி இருக்



காம். ஐந்து வருஷம் முன்னால இதுவே ஒரு காட்டுப் பன்றியை முழுங்கி டுச்சாம்."

"வீட்டுக்குப் போனதும் இதை எங்கே வைப்பே?"

"பெரிய மூங்கில் கூடை இருக்கு. அதுல போட்டு மூடி, கயத்தால கட்டி

வைப்போம்."

"இது சட்டை உரிக்குமா?"

"உரிக்கும். சட்டை உரிச்சதும் இதைப் பார்த்தா அப்படியே பளபள வென்று எண்ணெய் பூசிப் பாலீஷ் போட்ட மாதிரி இருக்கும்."

"நீங்களெல்லாம் தூங்கும் போது இது வெளியே வந்து உங்களையெல் லாம் சுற்றி இறுக்கிச் சாகடித்து விடாதா?"

"மலைப் பாம்புகளே சுத்த சோம் பேறிங்க. ஆனால், பசியெடுத்து இரை தேட ஆரம்பிச்சா அவ்வளவுதான். அதனால நாங்களே கூட இதுக்கு இரையைப் போட்டுட்டு, இது முழுங்கி யதும்தான் வெளியே எடுத்து விட்டுடு வோம். இது கம்பத்துல சுத்திக்கும். மரம் கூட ஏறும். நீந்தக் கூட நீந்தும்."

"இதன் வாய் சின்னதாகத்தானே இருக்கு? இதனாலே எப்படி மானை முழுங்க முடியும்!"

"இதன் தாடை எலும்புகள் மெல் லிய இழைகளால் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டதுங்க. மேல் தாடை யும் கீழ்த்தாடையும்கூட, இது மாதிரி யே பிணைக்கப்பட்டிருக்கு. இந்த இழைகளின் உதவியால் மெல்ல மெல்ல வாயை எத்தனை பெரிதாக வேண்டுமானாலும் விரிக்க முடியும். தலையணி உறைக்குள், தலையணை யைத் திணிப்பதில்லையா? அதே மாதிரித்தான் இது இரையை மெல்ல மெல்ல விழுங்கும்."

"எலும்புகள் போன்ற கடினமான உறுப்புகளும், தோலும், முடியும் எப்படி ஜீரணமாகும்?"

"இரையை இறுக்கும்போதே எலும்புகள் உடைந்து பொடிந்துவிடும். பிறகு மெதுவாக விழுங்கும். ரொம்ப வும் கடினமாக இருந்தால் மரக் கிளை களில் சுற்றிக் கொண்டு உடலை இறுக் கும். இப்படிச் செஞ்சால் முழுங்கின கடினமான பொருள் எல்லாமே பொடிந்துவிடும். கடினமான உறுப்பு

## அறிவியல் உண்மைகள் :

• மலைப் பாம்புகள்தான் உண்மையில் காட்டில் வாழும் பாம்புகளிலே விஷமற்றவை. இவை இரை இறுக்கிகள். (CONSTRICTORS)

• அதிக அளவு 6 மீட்டர் நீளம். ஆயுள் சுமார் 25 ஆண்டுகள்.

• தாடை எலும்புகளும் மேல் தாடையும் கீழ்த்தாடையும் மெல்லிய இழைகளால் இணைக்கப்பட்டவை. இதனால் மெதுவாக பெரிய இரை களையும் கூட விழுங்கும்.


• மலைப்பாம்பு சோம்பேறி. ஆனால், இரையைப் பார்த்துவிட்டால் பாய்ந்து உடலை இறுக்கி, குறிப்பாக கழுத்தைச் சுற்றி இறுக்கி, மூச்சுத் திணறி இறக்க வைத்து விழுங்கிவிடும்.

• விழுங்கிய பிறகு மயங்கிக் கிடக்கும். செரிக்கக் கடினமான இரைகளை விழுங்கினால் மரக்கிளைகளில் சுற்றிக் கொண்டு, உடலை இறுக்கி நொறுக்க வைத்து செரிக்க வைக்கும். பசி இல்லாத போது பொதுவாக இது தீங்கிழைப்ப தில்லை.

• குளிர்கால உறக்கம் உறங்கி உறக்கம் தெளிந்ததும் தாய்ப்பாம்பு சுமார் 70 முட்டைகளை இட்டு அவைகளைச் சுற்றி அடைகாக்கும். சுமார் 60 நாட்களில் முட்டைகள் பொரியும். 6 முதல் 8 அங்குல குட்டிகள் வெளி வரும்.

• தென் அமெரிக்காவில் உள்ள வண்ணாந்தை என்ற மலைப்பாம்பு மட்டுமே குட்டி போடும்.

• தோலுரிக்கும். நன்கு நீந்தும். மரமேறும்.



# யார்மீது கோபம்?

**கா**ந்தியடிகள் முதன் முதலாக பொது வாழ்வில் ஈடுபட்டிருந்த சமயம், நண்பர் ஒருவருடன் அவருடைய காரில் பயணம் செய்து கொண்டு இருந்தார். காந்தியடிகள் அந்தக் காரில் பயணம் செய்கிறார் என்பதை அறிந்த அவரைப் பிடிக்காத சிலர், மறைவாக இருந்து கொண்டு, கார் மீது சரமாரியாகக் கற்களை வீசினர்.

காந்தியடிகள் வண்டியை நிறுத்தச் சொன்னார். பிறகு காரியிலிருந்து இறங்கி, கார் மீது கல் வீசியவர்கள் இருந்த இடத்திற்குச் சென்றார்.

அவர்களை நோக்கி, "உங்களுக்கு கெல்லாம் என்மீது கோபம் என்று எனக்குத் தெரியும். நீங்கள் உங்கள் கோபத்தைக் காண்பிக்க என்மீது கல்வீசுவது தான் நியாயம். இந்தக் கார் என்னுடையதல்ல. என் நண்பருடையது. இந்தக் கார் மீது கல்லை வீசினால், அது என்னைப் பாதிக்காது. நண்பரின் கார்தான் சேதப்படும். அதனால், நான் தனியாக நிற்கிறேன். உங்கள் கோபம் தீரும்வரை என்மீது கல் வீசுங்கள். அப்புறம் இந்த இடத்தை விட்டுச் செல்லுகிறேன்,"என்றார்.

கல் எறிந்தவர்கள் வெட்கப்பட்டு, அவரை வணங்கிவிட்டுச் சென்றனர்.

- கி.சிவா, போரூர்.

---

களையும் ஜீரணம் செய்யும் அளவுக்கு இதன் இரைப்பை இருக்கு. ஆனால் முடி, நகம் போன்றவை மட்டும் ஜீரண மாகாது. மலத்துடன் வெளியே வந்து விடும். அதைப் பார்த்தே இது என்ன இரையை விழுங்கியிருக்கிறது என் பதை அறிந்து கொள்ளலாம்."

"இதற்குப் போடுவதற்கு இரை கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வீர்கள்?"

"எத்தனை பால் வைத்தாலும் குடிக் கும். ஆனால், அதெல்லாம் உடனே ஜீரணமாகி விடும். முயல், கோழி, புறா, ஆட்டுக் குட்டி போன்ற கடின இரை கிடைக்கும் வரை பிரச்னை தான். அதற்குப் பிறகுதான் மணிக் கணக்கில் மயங்கிக் கிடக்கும். அப் பொழுதுதான் நாங்கள் இதைப் போட்டுக் கொண்டு வருவோம்."

"இதற்குக் காது கேட்குமா?"

"காதும் கேட்காது. குரலும் இல்லை."

"பின் எதற்காக மகுடி ஊதறே?"

"மகுடி, பாம்புக்கு இல்லே அண்ணா. வீட்டில் இருப்பவர்களை யும், உங்களைப் போன்ற சின்னப் பிள்ளைகளையும் கவரத்தான்."

"இதுக்கு நோய் வருமா?"

"நமக்கு வரும் எல்லா வியாதிகளும் வரும். பாம்புப் பண்ணைக்கோ இல்லை விலங்கு வைத்தியரிடமோ போய் ஊசி போட்டுக் கொண்டு, மருந்து வாங்கிக் கொண்டு வருவோம்."

"உன் வீடு எங்கே இருக்கு?"

"ஊர்க் கோடியில, சாமியார் மடத்துக்குப் பக்கத்துல பூசணிக் கொடி படர்ந்த குடிசை இருக்கே, அது தான்."

"அப்ப இங்கயே இரு. நான் சைக் கிள்ள போய், இதை அடைத்து வைக் கும் மூங்கில் கூடையை வாங்கிக்கிட்டு வரேன். இதைக் கூடையில அடைச் சிட்டு அப்புறமா அப்பாகிட்டே நீ ஊசி போட்டுக்க" என்று சைக்கிளில் பறந்தான் பாபு.

சிறுவன் சிரித்தான். அவன் கழுத்தைச் சுற்றியிருந்த பாம்பும் சிரிப்பது போல வாயைப் பிளந் தது.

## கேட்கட்டுமா டாக்டர்?

* ஜே. மோகன் முத்து, வில்வாரணி.


**? காளான் சாப்பிடுவதால் நன்மையா, தீமையா? நன்மை என்றால் அதிலுள்ள சத்துப் பொருள்கள் என்னென்ன?**

! காளான் சாப்பிடுவதால் உடம்புக்கு நல்லதுதான். காளான் ஒரு முழுமையானப் புரதச் சத்துணவு. மற்ற தாவர உணவுகளில் உள்ளதை விடக் காளானில் தரத்தில் உயர்ந்த புரதச் சத்து நிறைந்துள்ளது. வைட்டமின் 'பி' சத்துகள் அனைத்துமே இதில் அடங்கியுள்ளன. ரத்த உற்பத்திக்குத் தேவையான ஃபோலிக் அமிலம் காளானில் அதிகமாக உள்ளது. இதில் கொழுப்புச் சத்து இல்லை. எனவே, இருதய நோயாளிகளுக்கு அதிகமாகப் பரிந்துரை செய்யப்படுகிறது. காளானில் மாவுச் சத்தும் குறைவு. அதனால் நீரிழிவு நோயாளிகளுக்கும் காளான் நல்லதொரு சத்துணவு.

* பழனி எஸ். சையது முகமது, எஸ். பேபி மற்றும் நண்பர்கள்.

**? நம் மூளையின் எடை என்ன? அதில் எத்தனை நரம்புகள் உள்ளன?**

! ஒரு சராசரி மனிதனுக்கு மூளையின் எடை 1,300 கிராம். மூளையிலிருந்து வரும் மத்திய நரம்புகள் மொத்தம் பதிமூன்று. மற்ற சிறு நரம்புகள் எண்ணிக்கையில் அடங்காது.






• அ. முஸ்தபா, தக்கோலம்.


? கண் அழுத்த நோய் என்றால் என்ன?

! கண்ணில் AQUEOUS HUMOUR என்ற திரவம் உள்ளது. இது கண்ணின் அழுத்தம் சீராக இருக்கவும், விழிலென்ஸுக்குத் தேவையான சத்துப் பொருளைக் கொடுக்கவும் பயன்படுகிறது. இந்த திரவத்தின் அழுத்தம் 15 முதல் 20 மி.மீ./ பாதரச அளவு என்று இருக்க வேண்டும். சில நோய் நிலைகளில் இந்த அழுத்தம் அதிகமாகும். அதன் காரணமாக கண்ணில் சில பாதிப்புகள் உண்டாகும். இதையே 'கண் அழுத்த நோய்' (GLAUCOMA) என்கிறோம். இந்த நோயின் அறிகுறிகள் சில : 1. அடிக்கடி கண்வலி வரும், 2. பார்வை மங்கலாகத் தெரியும், 3. தலைவலி அடிக்கடி வரும், 4. பக்கத்துப் பார்வை இருக்காது, 5. வெளிச்சத்தைப் பார்த்தால் வட்ட வட்ட வண்ண வளையங்கள் தெரியும். ஆரம்ப நிலையில் இந்த நோயை மருந்து, மாத்திரைகளால் குணப்படுத்தி விடலாம்; காலம் கடந்தால் அறுவை சிகிச்சை தேவைப்படும்.

• பி. கை. அன்புத்தம்பி, ந.கு. காலனி.

? குழந்தைகளின் பால் பற்களில் சொத்தை இருந்தால், அந்தப் பற்கள் விழுந்து நிலையான பற்கள் முளைக்கும் போதும் சொத்தை காணப்படுமா?

! காணப்படாது. காரணம் - பால் பற்கள் விழும்போது வேரோடு வந்து விடுவதால் சொத்தையும் சேர்ந்து வெளியே வந்து விடும். மேலும் நிலையான பற்கள் அந்த இடங்களில் முளைப்பதற்குச் சில மாதங்கள் ஆகலாம். அந்த இடைவெளிக் காலத்தில் சொத்தையை உண்டாக்கும் கிருமிகள் அழிந்து போகும். இதனால் நிலையான பற்கள் முளைத்து வரும் போது மீண்டும் சொத்தை காணப்படுவதற்கு வாய்ப்பில்லை.




• எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? சாதாரண இருமல், கக்குவான் இருமல் இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன? இவை ஏன் சிறுவர்களுக்கே வருகிறது?

! சாதாரண இருமல் காற்றில் கலந்து வரும் அசுத்தங்களினாலும், சுவாசமண்டலக் கோளாறுகளினாலும் வருகிறது. கக்குவான் இருமல் என்பது 'பார்டெட்டெல்லா பெர்டூசிஸ்' (BORDETELLA PERTUSSIS) என்ற பாக்டீரியா கிருமிகள் நுரையீரலைத் தாக்கும் போது வரு

டாக்டர். கு. கணேசன்

கிறது. சாதாரண இருமல் சில நாட்கள் தான் நீடிக்கும். கக்குவான் இருமல் இரண்டு மாதங்கள் வரை நீடிக்கலாம். மேலும் கக்குவான் இருமல் உள்ள குழந்தை தொடர்ச்சியாக மூச்சு விட முடியாமல் நீண்ட நேரம் இருமும். அப்படி இருமி முடித்ததும் வாந்தி வரும். சாதாரண இருமலில் இந்த கேவல் சத்தமும் வாந்தியும் இருக்காது. பொது வாக குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ள தாலும், முறைப்படி தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்ளாத நிலையிலும் கக்கு வான் இருமல் சிறுவர்களுக்கு வருவதற்கு அதிக வாய்ப்பு ஏற்படுகிறது.

• கி. சிவா, போரூர்.


**? மஞ்சள் காமாலையால் பாதிக்கப் பட்டு குணமான நோயாளிகள், ரத்த தானம் செய்யவே முடியாதா டாக்டர்?**

*! மஞ்சள் காமாலையால் பாதிக் கப்பட்டவர் குறைந்தது மூன்று ஆண்டு களுக்கு ரத்ததானம் செய்யக் கூடாது. அதற்குப் பிறகு செய்ய விரும்பினால் அவருடைய ரத்தத்தில் மஞ்சள் காமாலைக் கிருமிகள் இல்லை என்பதை முறைப்படி பரிசோதித்துப் பார்த்த பிறகே ரத்ததானம் செய்ய வேண்டும்!*

• சித. தங்கம் திருப்பதி, கரம்பக்குடி.

**? என் தொடைப் பகுதிகளில் அடிக்கடி அரிப்பு ஏற்படுகிறது. சொறிந்த பின்பு எரிச்சல் ஏற்படுகிறது. இது ஏன் டாக்டர்?**

! உன் தொடைப் பகுதிகளில் பூஞ்சக் காளான் கிருமித் தொற்று இருக்கலாம். அதனால்தான் அரிப்பும், எரிச்சலும் ஏற்படுகிறது. உடனே மருத்துவர் ஆலோ சனைப்படி காளான் கொல்லி மருந்தை அந்த இடத்தில் இரவிலும் காலையிலும் தடவ வேண்டும். குறைந்தது ஒரு மாதம் இந்த சிகிச்சையைத் தொடர வேண்டும். அத்துடன் சுயசுகாதாரம் பேண வேண் டும். தினமும் இரு வேளைகளில் வெந் நீரில் குளிக்க வேண்டும். சுத்தமான உள்ளாடைகளை அணிய வேண்டும். பிறர் உபயோகித்த துணிமணி, துவாலை, சோப்பு முதலியவற்றை உபயோகிக்கக் கூடாது.




**எறும்பு**

யானைபோல எட்டுமடங்கு கனத்தினை - நான்
எளிதினிலே தூக்கிச் சென்று விடுகிறேன்
எண்ணத்திலே திண்மை மட்டும் இருந்திடின் - நாம்
எண்ணியதை எளிதினிலே முடிக்கலாம்

**தேனீ**

எவ்வளவோ தூரம்பறந்து சென்று நான்- தேனை
எடுத்துவந்து கூட்டில் கொண்டு சேர்க்கிறேன்.
உள்ளத்திலே உண்மை ஆர்வம் இருந்திடின் - நாம்
உற்சாகமாய் எடுத்த செயல் முடிக்கலாம்.

**சேவல்**

பொழுது காலை புலரும் முன்னே விழிக்கிறேன்- இந்த பூ
மியெல்லாம் உதயத்தை இசைக்கிறேன்
கடமைசெய்யும் முனைப்பு நம்மில் இருந்திடின் - எந்தக்
காரியமும் நன்றாக ஆக்கலாம்.

சிற்றுயிர்கள் செயலில் சிறக்கக் காரணம் - தங்கள்
செயல்களிலே அவைகள் காட்டும் ஆர்வமே!
உண்மை இதை நாம் உணர்ந்து நடந்திடின் - நல்ல
ஒளிமயமாய் நமதுவாழ்வும் மாறுமே!

—ரா. பொன்ராசன்



# பரிசா பெரிசு?

குரு. சீனிவாசன்

“பள்ளி நிர்வாகம் ஏற்படுத்தியுள்ள அறக்கட்டளையின் சார்பாக இவ்வாண்டும் ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் திறமைமிக்க ஒரு மாணவருக்கு, முந்நூறு ரூபாய் பரிசுத் தொகையும், சான்றிதழும் வழங்கப்படும். அதற்கான பொது அறிவுப் போட்டித் தேர்வு அடுத்த வாரம் இதே கிழமையில் நடைபெறும். கலந்து கொள்ளும் மாணவர்கள் அந்தந்த வகுப்பாசிரியரிடம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்!”

பள்ளியின் சுற்றறிக்கையை எட்டாம் வகுப்பில் வாசித்து முடித்த ஆசிரியர், வெள்ளைத் தாள் ஒன்றை எடுத்து மாணவர் பெயர்களைப் பதிவு செய்வதற்கு ஆயத்தமானார்.

அநேக மாணவர்களின் பார்வையில் ஆர்வம் மின்னியது. ஆனாலும் ‘யார் முதலில் எழுந்து நிற்பது?’ என்ற தயக்கத்தில் பலரும் தத்தளிப்பதை ஆசிரியரால் அனுமானிக்க முடிந்தது.

“என்ன தயக்கம்? விருப்பம் உள்ளவர்கள் பெயர்களைக் கொடுக்கலாமே!” என்று உற்சாகப்படுத்திய ஆசிரியர், முதல் பெஞ்சில் அமர்ந்திருந்த கதிரேசனைப் பார்த்தார். சக மாணவர்களின் பார்வையும் அவன் மீதே படர்ந்தன. காரணம், கதிரேசன் வகுப்பில் முதல் ரேங்கில் நிற்பவன் என்பது மட்டுமல்ல, ஆறு ஏழாம் வகுப்புகளில் இதே அறக்கட்டளையின் பரிசுகளைத் தட்டிச் சென்றவனாயிற்றே!

அதே சமயம் வகுப்பின் முழுக் கவனத்தையும் தன் பக்கம் திருப்புவது போல அடுத்த பெஞ்சில் அமர்ந்திருந்த நந்தகுமார் எழுந்து நின்றான். படிப்பில் இரண்டாவது இடத்தை விடாமல் பிடித்துக் கொண்டிருந்தாலும், எந்தப் போட்டியிலும் சற்றும் சளைக்காமல் கலந்து கொள்பவன் அவன். ஆசிரியர் நந்தகுமாரின் பெயரைக் குறித்துக் கொண்டார். அவனைத் தொடர்ந்து ‘மளமள’வென்று பத்துப் பதினைந்து பேர் எழுந்து பதிவுக்குப் பெயர் கொடுத்தார்கள். கடைசியாக எழுந்து பெயர் கொடுத்தவன் கதிரேசன்.

“என்ன கதிரு, கடைசியாப் பேர் கொடுத்தா மொதல்ல வந்துடலாம் என்கிற வரிசைப் பொருத்தம் ஏதாவது வச்சிருக்கியா?” என்று கேட்டு விட்டுச் சிரித்த ஆசிரியர், அவன் பெயரையும் குறித்துக் கொண்டு போய் விட்டார்.

போட்டித் தேர்வு நடந்து கொண்டிருந்தது. வினாத்தாளை வாங்கி

மேலோட்டமாக நோட்டம் விட்ட நந்தகுமாரின் முகத்தில் வெற்றிப் புன்னகை விரிந்து படர்ந்தது. அறிவிப்பு வெளியான அந்த நிமிடமே முனைப்போடு அவன் செயல்படத் தொடங்கி விட்டான். எப்படியும் அவ்வாண்டின் பரிசையும் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற இலட்சிய வெறியில் இரவைப் பகலாக்கிப் பாடுபட்டிருந்தான் அவன். அதன் பலன் தான் இன்றையத் தேர்வின் வினாத்தாள் மிக மிக எளிதாகத் தோன்றி, அவனது கரங்களை உனக்கத்தோடு இயக்கிக் கொண்டிருந்தது.

வெள்ளைத் தாளில் வேகமாக விடைகளை விதைத்துக் கொண்டு போன நந்தகுமாரின் பேனா, ஒரு நிமிடம் நின்று தடுமாறியது. சரளமாகச் சென்று கொண்டிருந்த அவனது எழுத்தோட்டத்திற்குக் கணக்கு சம்பந்தமான அந்த ஒரு வினா மட்டும் சவாலாக அமைந்து முட்டுக்கட்டை போட முயன்றது!

வரை கணிதத்தில் உருளையின் கன அளவைக் கண்டறிவதற்கான சூத்திரம் பற்றிய கேள்வி அது. முதல் நாள் இரவு கூட நந்தகுமார் அதை முப்பது முறை உருப்போட்டு வைத்திருந்தானே! ஆனால், அவனது நினைவாற்றல் இப்படி நேரம் பார்த்துக் காலை வாரி விட்டால் என்ன செய்வான் பாவம்? வினாவிற்கான மதிப்பெண்களைக் கவனித்தான்; மூன்று மார்க்குகள் என்று தெரிந்ததும், ஒரு வரியில் விடையளித்து கனையாகப்




பெற வேண்டிய மதிப்பெண்களை, வீணாக இழக்கப் போகும் தவிப்பு அவனைப் பற்றிக் கொண்டு அலைக்கழிக்கலாயிற்று. அந்நிலையில்தான் அந்தப் பொல்லாத ஆசை அவன் மனத்தில் மெல்லத் தலைதூக்கியது.

அதே இருக்கையின் எதிர் முனையில் அமர்ந்து மும்முரமாக எழுதிக் கொண்டிருந்த கதிரேசன் மீது கடைக் கண் பார்வையை வீசினான் நந்தகுமார். தன்னைத் திக்குமுக்காட வைக்கும் அந்தச் சூத்திரத்தைக் கதிரேசன் துல்லியமாக எழுதியிருப்பான் என்பதில் நந்துவுக்குச் சந்தேகமே இல்லை. அவன்தான் 'கணக்கில் புலி' என்று பெயர் எடுத்தவன் ஆயிற்றே!

என்ன ஆச்சரியம்? நந்தகுமார் கள்ளத்தனமாக நோட்டம் விட்ட அந்த நேரம் பார்த்துத் தானா கதிரேசன் தனது விடைத்தாளைத் தூக்கித் திருப்பிப் பார்க்க வேண்டும்? நான்காம் பக்கத்தின் முதலாவது வரியில் இடம் பெற்றிருந்த அந்தச் சூத்திரம் குறித்த விடையை நந்து வால் நன்கு பார்க்க முடிந்தது. உடனே அவன் நினைவில் ஒரு 'பளிச்!' கவலைப் பட வைத்த கணக்கின் விடையை மின்னல் வெட்டும் நேரத்தில் கச்சிதமாகப் பேப்பரில் வடித்து விட்டது அவன் பேனா.

**ப**த்து நாட்கள் பறந்தோடி மறைந்தன. மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்






தாள்களை வழங்குவதற்குமுன் போட்டித் தேர்வின் முடிவைத் தன் வகுப்பு மாணவர்களுக்கு அறிவித்தார் ஆசிரியர்.

"இவ்வாண்டில் எட்டாம் வகுப்பிற்கான முதல் பரிசைப் பெறும் மாணவன் கதிரேசன். இவன் பெற்ற மதிப்பெண் தொண்ணூற்றி ஐந்து. தன்னை அடுத்து வந்துள்ள நந்தகுமாரை விட கதிரேசன் ஒரே ஒரு மதிப்பெண் அதிகம் பெற்றுள்ளான். பரிசு பெறும் கதிரேசனுக்குப் பாராட்டுகள்!"

அறிவிப்பைக் கேட்டதும் நந்தகுமாரின் முகம் வாடி வதங்கித் தரையை நோக்கியது. அதே சமயம் தன் விடைத்தாளுடன் ஆசிரியரை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் கதிரேசனை வியப்புடன் கவனித்தான் நந்தகுமார். ஒரு மார்க் வித்தியாசத்தில் பரிசைப் பறித்துக் கொண்டு போய் விட்ட அவனைப் பார்க்கவே ஆத்திரமும் எரிச்சலும் அளவின்றிப் படர்ந்து அவன் நெஞ்சில்.

விடைத்தாளை ஆசிரியரிடம் கொடுத்த கதிரேசன், அவரிடம் ஏதோ கூறினான். ஆசிரியரின் விழிகள் ஆச்சரியத்தால் விரிந்தன. கதிரேசனின் விடைத்தாளைப் பக்கம் பக்கமாகப் புரட்டி ஒன்றுக்கு இரண்டு முறை மதிப்பெண்களைக் கூட்டிப் பார்த்த ஆசிரியர், கதிரேசனை அருகில் அழைத்து, அன்புடன் தட்டிக் கொடுத்து விட்டு எழுந்து நின்றார்:

"மாணவர்களே, மதிப்பெண்களைக் கூட்டிப் போடுவதில் ஒரு சிறிய தவறு நேர்ந்து விட்டது. அந்தத் தவறுதல் காரணமாக கதிரேசனுக்கு இரண்டு மார்க்குகள் கூடி விட்டன. தவறு திருத்தப்பட்ட பிறகு கதிரேசனின் மார்க்குகள் தொண்ணூற்றி மூன்று. நந்தகுமார் தொண்ணூற்றி நான்கு பெற்றிருப்பதால், இவ்வாண்டுக்குரிய பரிசு நந்தகுமாரைத்தான் சேரும். இதிலென்ன சிறப்பு என்றால், தனக்குக் கிடைத்த பரிசை இழந்தாலும் பரவாயில்லை, உண்மையை மறைக்கக் கூடாது என்ற உயர்ந்த பண்போடு தானாகவே இங்கு வந்து அதைச் சுட்டிக் காட்டிய கதிரேசனைப் பாராட்ட வார்த்தைகளே கிடையாது. பரிசு பெரிதல்ல; பண்பு பெரிதென்று நடந்த கதிரேசனை நீங்கள் முன்னோடியாகக் கொள்ள வேண்டும்!"

நைந்து போய் அமர்ந்திருந்த நந்தகுமார் நிமிர்ந்து உட்கார்ந்தான். கதிரேசனைப் பாராட்டிக் கூறிய ஒவ்வொரு சொல்லும் அவனது உள்ளத்தில் ஆழமாகப் பாய்ந்து, அங்கே ஒரு பெரும் போராட்டத்திற்கு வித்திட்டது.


'ஆசிரியராகவே அதிகமாகப்

போட்டு விட்ட இரண்டு மார்க்குகளை வேண்டாமென்று வெறுத்துத் தள்ளி விட்டு, தனது வெற்றியை விட்டுத் தரும் கதிரேசன் எங்கே? எப்படியும் பரிசு பெற்றாக வேண்டும் என்பதற்காகத் திருட்டுத்தனமாக அவனது விடையைக் காப்பியடித்து மூன்று மதிப்பெண்களை முறையற்ற வழியில் தேடிய நான் எங்கே? இந்த வெற்றியும் ஒரு வெற்றிதானா?' - நந்தகுமாரின் மனச்சாட்சி சாட்டையாகி அவனைச் சொடுக்கியது.

அதற்கு மேல் அமைதியாக இருக்க முடியவில்லை நந்துவால். ஆசிரியரிடம் போய் நின்றான். தன் உள்ளத்தை உறுத்தும் அந்த உண்மையை மனம் விட்டுக் கொட்டி விடவே முயன்றான். உணர்ச்சி வசப்பட்டு நின்ற அவனது வாயினின்றும் வார்த்தைகள் வெளிவர மறுத்தன. கண்களில் திரண்ட நீர் கன்னங்களில் வழியத் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான். காரணம் புரியாத ஆசிரியர் அவனை அன்புடன் தட்டிக் கொடுத்து, சொல்ல வந்ததைப் பயப்படாமல் சொல்லுமாறு உற்சாகப்படுத்தினார்.

தன்னை மன்னித்து விடுமாறு முதலில் வேண்டிக் கொண்டே நந்தகுமார், அழுகைக்கிடையே பரீட்சையில் தான் கதிரேசனைப் பார்த்துக் காப்பி அடித்ததால் தனக்கு மூன்று மார்க் அதிகம் கிடைத்ததை மூடி மறைக்காமல் வெளியிட்டான். பரிசைப் பெறும் தகுதி கதிரேசனுக்குத்தான் உண்டென்பதை உறுதியான குரலில் கூறி முடித்தான்.

சற்று முன்னர் கதிரேசனின் பண்பைப் பார்த்து வியந்து நின்ற ஆசிரியர், இப்பொழுது நந்தகுமாரின் நேர்மையை எண்ணி வாயடைத்துப் போய் விட்டார். போட்டியிலும் புனிதம் காக்க முற்பட்டுப் பரிசைப் பெரிதாக மதிக்காத தன் மாணவச் செல்வங்களைப் பெருமையுடன் ஆரத் தழுவிக் கொண்டன ஆசிரியரின் அன்புக் கரங்கள்.




**சாதாரணமாக வருடத்திற்கு 365 நாட்கள் என்று கூறுகிறோம். இந்த சாதாரண வருடம் போல ஏழு விதமான வருடங்கள் உள்ளன என்பதும் அவை என்னென்ன என்பதும் தெரியுமா?**

1) லூனார் வருடம் - 954 நாட்கள்

2) லீப் வருடம் 366 நாட்கள்

3) ஜூலியன் வருடம் 356½ நாட்கள்.

4) சோலார் வருடம் 365 நாட்கள், 5 மணி நேரம், 48 நிமிடம், 9 நொடி

5) சைடீரில் வருடம் 368 நாட்கள், 6 மணி நேரம் 9 நிமிடம் 9 நொடி.

6) அனாமலிஸ்டிக் வருடம் 365 நாட்கள், 6 மணி நேரம் 13 நிமிடம், 19.3 நொடி.

7) கிரிகோரியன் வருடம் 965 நாட்கள், 5 மணி நேரம், 49 நிமிடம், 12 நொடி.

– தா.ஷேக் உசேன்

ஆதாரம்:
**வியப்பூட்டும் அறிவியல் செய்திகள்.**

கல்கத்தா நகரில் 'மோதிஜஈல்' பகுதியில் உள்ள சேரிப் பகுதி. சாக்கடையும் சகதியும் நிறைந்த சூழ்நிலை. சுற்றிலும் சிறுசிறு குடிசைகள். நடுவில் ஒரு திறந்த வெளி.

வெளிநாட்டிலிருந்து வந்த அந்தப் பெண் மணிக்குப் பதினெட்டு வயதுதான் இருக்கும். சேரிப்பகுதி மக்களின் அறியாமையைக் கண்டு வேதனையுற்ற பெண்மணி அங்கு ஒரு பள்ளியைத் துவக்கத் தீர்மானித்தார். பள்ளியைத் தொடங்கி நடத்தப் போதிய நிதி வசதி இல்லை. வெறும் கையால் முழம் போட முடியுமா? கல்கத்தா வந்தடைந்த போது, அவர்கையில் இருந்த ஆஸ்தி வெறும் ஐந்தே ருபாய்தான்!

என்றாலும், தன் முயற்சியிலிருந்து அவர் சிறிதும் பின்வாங்கவில்லை. உறுதியுடன் செயல்பட்டார். எது இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவருடன், எந்தவொரு நிமிடமும் கடவுள் கூடவே இருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அந்த அற்புதம் நடக்குமா?

என்ன அது?

யாரோ ஒருவர். எங்கிருந்தோ வந்தார். முன்பின் அறிமுகம் இல்லாதவர். பெயரைக் கூறிக் கூடத் தன்னை அவர் அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. "இந்தாருங்கள் பணம்....! பள்ளியை நடத்துங்கள்..." என்று அப்பெண்மணியிடம் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார். அதன் பிறகு, ஒரு போதும் எவர் கண்ணிலும் அவர் படவில்லை.

பணத்தைப் பார்த்ததும் அப்பெண்ணுக்குத் துணிவு வந்துவிட்டது. பள்ளியைத் துவக்கிவிட்டார். துவக்கப்பட்ட முதல் நாள். உட்கார நாற்காலி இல்லை. மேஜை இல்லை. கரும்பலகை இல்லை. எனினும் பின்வாங்கவில்லை. தரையின் ஈர மண்ணில் சிறு குச்சியைக் கொண்டு எழுத்துக்களை எழுதிப் பாடம் கற்பிக்கத் தொடங்கி விட்டார்.

அப்போது இன்னோர் அதிசயம் நிகழ்ந்தது.

நல்ல உள்ளம் கொண்ட ஒருவர், மறுநாள் அவரிடம் வந்தார். பள்ளிக்குத் தேவையான மேஜை, நாற்காலி, கரும் பலகை ஆகியவற்றை அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

அந்தப் பள்ளிதான், அப்பெண்மணி தொடங்கிய முதல் தொண்டு ஸ்தாபனம். அது முழு வெற்றியாக அமைந்துவிட்டது. அத்துடன் அவருடைய நீண்ட நாள் கனவும், இதன் மூலம் நனவாகிவிட்டது.

அது என்ன கனவு?

அப்போது அவளுக்கு 11 - 12 வயது. யுகோஸ்லாவியாவின் 'ஸ்கப்ஜே' நகரின் பள்ளி ஒன்றில் படித்துக் கொண்டிருந்தாள். ஒரு நாள் வகுப்பில் கட்டுரை ஒன்று படிக்கப்பட்டது. அதில், கல்கத்தா நகரில் பாதிரியார்களின் செயல் திட்டங்கள் பற்றி விவரிக்கப்பட்டது. அந்த விஷயங்கள் அப்பெண்ணின் மனத்தில் ஆழப் பதிந்துவிட்டன. தானும் அந்த நகரத்தில் அவர்களுடன் இருப்பதைப் போன்ற காட்சிகள் எல்லாம் அந்தப் பிஞ்சு உள்ளத்தில் தோன்றி மறைந்தன.

படிப்புக்குப் பின், அவள் இத்தாலி சென்றாள். அங்கு செயின்ட் மேரி பள்ளியில் முதலில் புவியியல் பாட ஆசிரியையாக இருந்தார். பின்னர் அப்பள்ளியின் தலைமைப் பொறுப்பில் சில காலம் இருந்தார். அதன் பிறகு 'லோரெடோ' பள்ளியின் ஆசிரியை ஆனார். அப்போது அங்கிருந்த கன்னிகா ஸ்திரீகளிடம் பழகிப் பழகி, 'டாட்டர்ஸ் ஆஃப் செயின்ட் ஆன்'

# உலகே வணங்கும் தொண்டுப் பழம்



காளிகட்டம் கோயிலுக்குப் பின்புறம் ஓர் ஒற்றை மாடிக் கட்டடம். வெளியில் பெயர்ப் பலகை - "நிர்மல் அனாதை இல்லம்!" ஆங்கிலத்திலும் வங்க மொழியிலும் அது எழுதப்பட்டிருந்தது.

அதைக் கண்டதும் பலர் பதறினார்கள். ஓர் இந்துக் கோயில். அதை ஒட்டி ஒரு கிறிஸ்துவ மதத் தொண்டு நிறுவனமா? அது எப்படி சாத்தியம்? அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எதிர்ப்புக் குரல் எழுப்பி விட்டனர். முதலில் வசவுகள், பிறகு தர்ணா, அடிதடி என்று விஷயம் வலுத்துவிட்டது.

அந்தப் பெண்மணி ஓடோடி வந்தார். அவர்களிடம் மன ஒருமைப்பாட்டோடு இருக்குமாறு பிரார்த்தித்தார். "கொல்ல விரும்பினால் என்னைக் கொன்று விடுங்கள். சாலையோர மக்களை அங்கு அனாதைகளாகச் சாகடிக்காதீர்கள். இறப்பை நெருங்கிக் கொண்டிருக்கும் அவர்களை இங்கு கொஞ்ச நேரம் நிம்மதியாக இருக்க விட்டுச் சாகவிடுங்கள்..." என்று உருக்கமாக வேண்டினார்.

அதற்கு நல்ல பலன் இருந்தது. அவரது குரல் அங்கு

என்ற தகுதியும் அவரை வந்தடைந்தது. அச்சமயம், கல்கத்தா பற்றிய அவருடைய மனத்தில் ஆழப் பதிந்திருந்த எண்ணங்கள், அங்கு சென்று அந்த மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற ஆவலைத் தூண்டின.

துவக்கத்தில், அந்தப் பெண்மணி கல்கத்தா நகரின் சாலையோர அனாதை ஏழை எளியவர்களுக்குச் சேவை செய்வதில்தான் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அப்போது, அந்த ஏழைகளை அழைத்துச் சென்று தங்க வைத்துக் கவனிக்கத் தனியான ஓர் இடம் இல்லையே என்று அவர் தவித்தார்.

அதற்கு ஏற்றாற்போல் ஒரு சம்பவம் நடந்தது. ஒருநாள் நல்ல மழை. அதில் சாலையோர ஏழை ஒருவன் இறந்து கிடந்தான். அதைப் பார்த்ததும் அப்பெண்மணி மிகவும் வேதனை அடைந்தாள். உடனே ஓர் உறுதி எடுத்துக் கொண்டாள். கூடிய விரைவில் எப்படியாவது சாலை ஓர ஏழைகளுக்கென்று ஒரு தனிப் பாதுகாப்பு இல்லத்தை ஏற்படுத்தி விட மனஉறுதி கொண்டார்.

இரண்டே மாதங்கள்தான். அவர் ஓர் இடத்தை நிச்சயித்து விட்டார்.

ஞானமணி

கடவுளின் குரலாக ஒலித்தது. அம்மக்கள் அமைதியடைந்து விட்டனர்.

அச்சமயம் இன்னொரு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

காளிகட்டம் கோயில் பூசாரிகளில் ஒருவருக்குக் கடுமையான காசநோய். செய்தியைக் கேள்விப்பட்டதும் அப்பெண்மணி அவரிடம் ஓடோடிச் சென்றார். அன்பு காட்டி அரவணைத்தார். அவரைத் தனது குழந்தையைப் போல் கவனித்துக் கொண்டார். உற்றார் உறவினராலும் கூட முடியாத அளவுக்கு, அவருக்குப் பணிவிடைகள் செய்து, அவரைப் பிழைக்க வைத்தார். அந்தக் கோயிலின் பூசாரிகள் எல்லோரும் அப்பெண்மணியின் பக்தர்கள் ஆகிவிட்டனர்.

இந்த அதிசயப் பெண்மணி யார் தெரியுமா? யுகோஸ்லாவியாவின் 'ஸ்கப்ஜே' நகரில் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் நாள் பிறந்து, நம் நாட்டுக்கு வந்து, ஏழை எளிய மக்களின் துயர் துடைப்பதற்காகத் தன்னை முற்றிலுமாக, அர்ப்பணித்துக் கொண்டு, தனது தொண்டு வாழ்க்கையைத் துவக்கிய அப்பெண்மணி தான் இன்று நம்மிடையே 84 வயதுத் தொண்டுப் பழமாக வாழ்ந்து கொண்டிருக்கும் அன்னை தெரசா!

உலக நாடுகள் அனைத்திலும் அவரது பல்வேறு தொண்டு நிறுவனங்கள் உள்ளன. அவை அனைத்தும் ஒரே அமைப்பின் கீழ் இணைந்துள்ளன. அதற்கு 'International Association of Co-workers of Mother Terasa' என்று பெயர். அதன் மூலம் அவர் ஆற்றிவரும் பல்வேறு தொண்டுகளுக்காக அவர் பெற்றுள்ள பரிசுகளும் விருதுகளும் ஏராளம்!

1962 - ல் பத்மஸ்ரீ விருது; அடுத்த ஆண்டே மக்சேசே விருது. 1971 இல் வாடிகன் நகரில் போப் ஜானின் அமைதிப் பரிசு. அதே ஆண்டு இன்னும் இரண்டு விருதுகள் - 'குட் செமேரிடன்' விருதும், 'ஜான் எஃப் கென்னடி இன்டர்நேஷனல்' விருதும், 1972 இல் 'ஜவாஹர்லால் நேரு சர்வதேசப் பரிவுணர்வு' விருது!உடனே 73 இல் 'டேம்ப்ல்டன்' விருது. 1974 இல் 'மேட்டர் அண்டு மேக்ரெஸ்ட்ரா' விருது - இப்படி 1975 இல் எஃப்.ஏ.ஓ. வழங்கிய பதக்கத்தின் ஒரு பக்கம் அன்னை தெரசாவின் உருவம். மற்றொரு புறம் பலவீனமான ஒரு குழந்தையை ஏந்திய ஒரு தேவியின் உருவம்... 1979 இல் அமைதிக்கான சிறப்பு 'நோபெல் பரிசு'! 1980 இல் 'பாரத ரத்னா!'

இப்படி அன்னை தெரசா பெற்ற பரிசுகளும் விருதுகளும் ஏராளம்... ஏராளம்!

பூத்துக் காய்த்துப் பழுத்துக் குலுங்கும் பசுமரம், பாரம் தாங்காது தலைகுனிந்து தரையில் குளிர்ந்த நிழல் பரப்பி நிற்பதைப் போன்று, தான் பெற்ற விருதுகளின் கனம் தாங்காமல் அன்னையும் இப்போது முதுமையால் கூனல் விழுந்து தொண்டுப் பழமாக ஏழை மக்களிடம் கருணையைப் பரப்பி நம்மிடையே வாழ்ந்து வருகிறார்.


அவர் வாழும் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்பதே நமக்குப் பெருமை தான்!

அவர் ஒரு சேவையின் திருவுரு. அவரை மனத்தால் நினைப்பதே நமக்கு ஒரு மங்களமயமான சுப ஆசீர்வாதம்தான் - கடவுளை நினைப்பதைப் போல!

"ஏன் உன் பையன் சோகமாக இருக்கான்?"

"அவன் எடுத்த படம் 25 நாள் கூட ஓடலையாம்!"

- பி. கல்யாணசுந்தர்,
பட்டீஸ்வரம்.





# இரண்டாவது சாவி

த.ஜானகி

**1.வந்தவன் யார்?**

பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கும் விளக்கிற்கு அருகில் உள்ள அருள் விநாயகர் படத்திற்கு வழக்கம்போல பூவைத்து, தோப்புக் கரணம் போட்டு, விழுந்து வணங்கினான் சந்தீப். பாட்டி ஏற்றி வைத்திருந்த ஊது பத்தியின் நறுமணமும், சுவாமி படங்களுக்குப் போடப் பட்டிருந்த பூக்களின் வாசனையும் அறை முழுதும் நிரம்பி வழிந்து நெஞ்சத்திற்கு இனிமை கலந்த புத்துணர்ச்சியை நல்கிக் கொண்டிருந்தது.

"சந்தீப்!..... சந்தீப்.. டேய்...சந்தீப்..."

பாட்டி மீனாட்சி அம்மாள்தான் சமையல் அறையிலிருந்து குரல் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"இதோ வந்து விட்டேன் பாட்டி"– கூறியபடி சமையல் அறையை நோக்கி விரைந்தான் சந்தீப்.

"என்ன பாட்டி! காலையிலேயே என்னை ஏலம் போட்டுக் கூப்பிட



"உங்க பசங்க முருகனும், கணபதியும் என்னையே சுற்றிச் சுற்றி வர்றாங்களே, ஏன்?"

"பையில் வச்சிருக்கிற மாம்பழத்தை எடுத்து ரெண்டு பேருக்கும் கொடுத்தீங்கன்னா, ஓடிப்போயிடுவாங்க!

– சீர்காழி வி.ரேவதி

ஆரம்பிச்சுட்டீங்க? என்ன விஷயம்?"

"இப்பத்தான் உப்புமா செய்து கீழே இறக்கி வெச்சிருக்கேன். ஆறிப் போனா. உங்க தாத்தாவுக்குப் பிடிக்காது. அவருக்குப் பேப்பரை எடுத்தா உலகமே தெரியாது. அவரைக் கூப்பிடு. இன்னிக்கு திங்கக் கிழமை. நீயும் சீக்கிரமா...கிளம்பற வழியப் பாரு... அப்புறம்...பள்ளிக் கூடத்துக்கு...நேரமாயிடுச்சுன்னு குதிப்பே."

குதித்தபடியேதான் அந்தப் பெரிய வீட்டின் வாசல் திண்ணைக்கு வந்தான் சந்தீப். பாட்டி சொன்னது பொய் யில்லை. தாத்தா மேஜர் தேவநாதன் தன்னையே மறந்தபடி பேப்பரில் மூழ்கி இருந்தார்.

"தாத்தா!"

பதில் இல்லை! அப்படி என்னதான் விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருக்கிறார்? மெதுவாக அவர் அமர்ந்து கொண்டிருந்த நாற்காலிக்குப் பின் பக்கமாகச் சென்று நின்று கொண்டான். கொட்டை எழுத்துக்களில் போடப் பட்டிருந்த செய்தி அவன் கவனத்தையும் ஈர்த்தது.

'வேலூர் சிறையிலிருந்து கைதி தப்பி ஓட்டம்!

பெரிய வங்கி கொள்ளையில் சம்பந்தப் பட்டிருந்த 'சக்ரவர்த்தி' என்ற கைதி சென்னையிலிருந்து வேலூர் சிறையில் வைக்கப்பட்டிருந்தான். கடந்த புதன் கிழமை அன்று இரவு இவன் சிறைப் பூட்டை உடைத்துத் தப்பிச் சென்று விட்டான். சக்ரவர்த்திக்கு வயது இருபத்தி ஐந்து. மாநிறம். ஒல்லியான தேகம். மூக்குக் கண்ணாடி அணியும் பழக்கமுள்ளவன். வாயில், முன் இரண்டு பற்கள் சற்றுந் தூக்கிய நிலையில் இருப்பதால் வாயைக் கூட அவனால் சரியாக மூட முடியாது. இடது தோள் பட்டையில் "சக்ரவர்த்தி" என்று பச்சை குத்தப் பட்டிருக்கும். அவனைக் கண்டு பிடித்துத் தருபவர்களுக்கோ... அல்லது... அவனுடைய இருப்பிடத்தைப் பற்றி அறிவிப்பவர்களுக்கோ ரூபாய் ஐம்பதாயிரம் பரிசு வழங்கப்படும், அவனைப் பற்றித் தெரிந்தால்...தெரிவிக்க வேண்டிய முகவரி...தொலைபேசி...எண் உள்பட வேலூர் காவல் நிலையத்தின் முகவரி கொடுக்கப்பட்டிருந்தது. அருகில்...தாடி. மீசை, தலை நிறைய முடி. முன்பல் வெளியே தெரிய மூக்குக் கண்ணாடி அணிந்த படி சக்ரவர்த்தி போட்டோவில் காட்சி அளித்தான். மீண்டும் அந்தப் புகைப் படத்தை உற்றுக் கவனித்தான். மார்பு அளவு சைஸ். போட்டோவில் சிறையில் இருந்து தப்பித்து விட்ட கைதி 'சக்ரவர்த்தி' மங்கலாகத் தென் பட்டான்.

"தாத்தாவும் பேரனும் சேர்ந்து கொண்டு என்ன செய்யறீங்க?"– கூறிய படியே வந்த மீனாட்சி அம்மாள் இருவர் கவனமும் பேப்பர் மீதே பதிந்திருப்பதைக் கண்டாள்.

சந்தீப்தான் முதலில் சுய உலகிற்கு வந்தான். பதில் கூற வாயெடுத்தான். அதற்குள் மீனாட்சி அம்மாள் மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

"சந்தீப்! நீ பேப்பர் படிச்சது போதும். மணி ஒன்பதாயிடுத்து. டிபன் சாப் பிடவா...இதோ..உன்னோட சிநேகிதப் பசங்க எல்லாம் தயாரா வந்துட்டாங்க."

பாட்டி கூறி முடிப்பதற்கும் "டிரிங்... டிரிங்..." என்று வாசலில் நான்கு சைக்கிள் மணி ஓசை மாறிமாறி ஒலிப்பதற்கும் சரியாக இருந்தது. பள்ளி யூனிபாரத்தில் பளிச்சென்று இருந்த நான்குபேரும் சைக்கிளை விட்டுக் கீழே இறங்கினர்.

நான்கு பேரையும் பார்த்த நாய்க் குட்டி டைகர் செல்லமாகக் குரைத்தது. வாலை அழகாக ஆட்டியது.

"சந்தீப்! என்ன.. இன்னுமா... கிளம் பலை? தினம் தயாராக இருப்பியே? இன்னிக்கு ஏன் லேட்டு?" என்று கேட்ட படி மயிலு என்று அழைக்கப்படும் மயில் சாமி உள்ளே நுழைய அவன் பின்னால் அகமது, டேவிட், முருகன் ஆகிய மூவரும் உள்ளே நுழைந்தனர்.

"சாரிடா..மயிலு..பேப்பர்லே ஒரு செய்தியைப் பார்த்துக் கொண்டே இருந்து விட்டேன். இதோ- பத்து நிமிஷத் துக்குள்ளே கிளம்பிடறேன் தாத்தா... நீங்களும் வாங்க. பாட்டி நாங்க ரெடி...'' என்றான் பரபரத்தபடி சந்தீப். மறு வினாடி வேகமாக டிபன் சாப்பிட மூவரும் உள்ளே சென்றனர்.

மேஜர் தேவநாதன் போட்டு விட்டுப் போன பேப்பரை எடுத்து நான்கு நண்பர் களும் படிக்க ஆரம்பித்தனர்.

திருடன் தப்பிச் சென்ற செய்திய்ய டேவிட் சத்தமாகப் படிக்கவே மற்ற மூன்று பேரும் அமைதியாகக் கேட்ட னர்.

"இந்தத் திருடன் மட்டும் என் கண் ணில் பட்டால், அப்படியே அவன் மேலே குபீர்னு பாய்ந்து, பிடிச்சு போலீசிலே கொடுத்து விடுவேன்'' என்றான் முருகன்.

''அடேயப்பா! ஐம்பதினாயிரம்.. .பரிசு...எனக்கு மட்டும் இந்த சான்ஸ் கிடைச்சா, பணத்தை நம்ப பள்ளிக் கூடத்துக்குக் கொடுத்துடுவேன்'' என்றான் மயிலு.

"நாம எப்படியாவது அவனைக் கண்டு பிடிக்கலாமா?"- இது அகமது.

"போடா, பெரிய சி.ஐ.டி... நீ! அவன் தப்பித்துக் கொண்டு போய் நாலு நாளைக்கு மேலே ஆயிடுச்சு. இப்ப.எந்த ஊர்லே எந்த மூலையில இருக்கானோ?" என்றான் டேவிட்.

"நீங்களும் அந்த செய்தியைப் பார்த் தீங்களா? வாங்க..நேர மாய்விட்டது. ப்ரேயர்லே இன்னிக்கு குறள் சொல்ற முறை என்னோடது" என்று கூறியபடி சந்தீப் புத்தகப்பை, வாட்டர் பேக்குடன்



வரவே, நான்கு பேரும் இருக்கையை விட்டு எழுந்தனர். சில வினாடிகளில் ஐந்து பேரும் அவரவர் சைக்கிளில் ஏறி அமர்ந்தனர்.


வழக்கம் போல டைகர் தன் முன்னங்கால்கள் இரண்டையும் உயர்த்தியபடி டாட்டா காண்பிக்க, ஐவரின் மிதி வண்டிகளும் பள்ளியை நோக்கிப் புறப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விராலிமலை என்றாலே அனைவருக்கும் அருள்மிகு முருகனின் எழில் கோலமும், வண்ண மயில்களின் அழகு நடனமும் தான் நினைவில் பளிச் சென்று மின்னும். சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமத்து மாணவ மாணவிகள் விராலி மலையில் உள்ள பாரதியார் உயர்நிலைப் பள்ளியில் தான் படித்து வருகின்றனர்.

சத்யா-ஒரே மகள். ஐந்து வயதிலிருந்தே சந்திப் அத்தியூர் கிராமத்தில் தன் தாத்தா பாட்டியிடம்தான் வளர்ந்து வருகிறான்.

தங்களுக்கு உதவியாகவும் அரசுப் பணியில் இருக்கும் மகனுக்கு அடிக்கடி மாற்றல் ஏற்படுவதாலும் பேரனை வளர்க்கும் பொறுப்பை மேஜர் தேவநாதனும், மீனாட்சி அம்மாளும் மன மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். தற்சமயம் சந்திப் ஒன்பதாம் வகுப்பு படிக்கிறான். சத்தியாவிற்கு வயது பத்து. அவள் பெற்றோரை விட்டுப் பிரிய விரும்பவில்லை. ஆறாவது படித்துக் கொண்டிருக்கும் அவள் விடுமுறை என்றால் கிராமத்திற்கு வந்து விடுவாள்.

தன் சொந்த கிராமத்தை முன்னேற்ற மேஜர் மிகவும் பாடு பட்டார். அவருடைய முயற்சியால் தான் அந்த சிறிய



இன்றைக்கு உங்க வீட்ல 'புடலங்காய்' சாம்பார் தானே...?

"ஆமாம்! உனக்கு எப்படித் தெரியும்?"

"எங்க 'வீட்டுக் கொல்லையில்' ரெண்டு புடலங்காய் குறையுதே..."

-சீர்காழி ஜே.பாலராமன்


அத்தியூர் என்ற கிராமம் விராலி மலையிலிருந்து கிழக்காக கிட்டத்தட்ட மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. விராலி மலையையும் அத்தியூரையும் இணைக்கும் ஒரே சாலையின் பெயர் காந்தி சாலை.

அத்தியூர் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய சிறு கிராமம். ஐந்து வகுப்புகள் வரை உள்ள ஆரம்பப் பள்ளி ஒன்றுதான் அந்தக் கிராமத்துக் குழந்தைகளுக்குக் கல்வி அறிவை ஊட்டிக் கொண்டிருக்கிறது. அந்த கிராமத்திலேயே ஓரளவு வசதி உள்ள பெரிய மனிதர் மேஜர் தேவநாதன்தான். இராணுவத்திலே சிறந்த முறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவருடைய ஒரே மகன் ராஜசேகரன்.

ராஜசேகரன் சென்னையில் வேலை செய்கிறார். அவருக்கு சந்திப்-ஒரேமகன்.

கிராமத்திற்கு ஆரம்பப் பள்ளிக் கூடமே கொண்டு வரப்பட்டது. பாழடைந்து கிடந்த கோவில் புதுப்பிக்கப்பட்டது. குடிதண்ணீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. டவுன் பஸ் கூட ஒரு நாளைக்கு இரண்டு முறை வந்து செல்லும்.

ஐந்தாவது தேர்ச்சி பெற்றதும் ஆறாம் வகுப்பில் சந்திப்பைச் சேர்க்கும் போது அவனுடன் படித்த நான்கு மாணவர்களையும் மேஜர் கட்டாயப்படுத்தி, தன்னால் முடிந்த உதவிகள் அனைத்தையும் செய்து சேர்த்தார். ஆனால் ஒன்பதாம் வகுப்பு வரும்போது ஆரம்பத்தில் சொன்ன நான்கு பேர்கள் மட்டுமே படிப்பைப் பாதியில் விட்டு விடாது சந்திப்புடன் தொடர்ந்து படித்துக் கொண்டு வருகின்றனர்.



**ந**ண்பர்கள் ஐவரும் பள்ளி வாயிலை அடைவதற்கும் முதல் மணி அடிப்பதற்கும் சரியாக இருந்தது. "சரியான நேரத்திற்கு வந்து விட்டோம்" என்று எண்ணியபடி ஐவருமே சைக்களை விட்டுக் கீழே இறங்கினர்.

பள்ளிக் கூடத்திற்கு எதிரே இருந்த பெட்டிக் கடையின் முன்பு பேப்பர் படிப்பதுபோல் பாவனை செய்து கொண்டிருந்த ஓர் இளைஞன் தன்னுடைய கூலிங்கிளாஸ் மூலம் ஐவரையும் பார்த்தான். பிறகு அவனுடைய பார்வை சந்தீப் மீது பதிந்தது. அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். சந்தீப் கண்களிலிருந்து மறையும் வரை பார்வை அவன் பின்னாடியே ஓடிச் சென்றது. பிறகு ஏதோ யோசனையில் ஆழ்ந்தபடி அவ்விடத்தை விட்டு மெதுவாக அகன்றான் அந்த இளைஞன். தனக்காக வலை விரிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியாத சந்தீப் தன் வகுப்பறையை நோக்கி விரைந்தான்.

**அ**ன்று மாலை ஏழாவது பாடப் பிரிவு. அறிவியல் ஆசிரியர் இரண்டு நாட்களுக்கு முன்பு, தான் வைத்திருந்த வாராந்திரத் தேர்வின் திருத்திய விடைத்தாள்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார். சந்தீப்தான் முதல் மதிப்பெண் பெற்றிருந்தான்.

அப்பொழுது பள்ளி பியூன் மெதுவாக வகுப்பறைக்குள் நுழைந்து, "ஸார்! சந்தீப்பைத் தேடிகிட்டு அவங்க சொந்தக்காரங்க யாரோ வந்திருக்காங்க. உடனேயே பார்க்கணுமாம். கூட்டிகிட்டு வரச் சொன்னாங்க" என்றான்.

ஆசிரியர் அனுமதி கொடுக்கவே சந்தீப் வகுப்பறையை விட்டு வேகமாக வந்தான்.

தன்னைத் தேடிக்கொண்டு யார் வந்திருப்பாங்க?

யோசித்தபடியே பள்ளியின் வாயிலை அடைந்தபொழுது–

ஒரு கறுப்பு நிற அம்பாசிடர் கார் பள்ளியின் வாசலில் நின்று கொண்டிருந்தது. டிரைவர் சீட்டில் கூலிங்கிளாஸ் அணிந்தபடி இவன் வருவதையே எதிர்பார்த்தபடி அமர்ந்திருந்த இளைஞனை சந்தீப் இதற்கு முன் பார்த்ததே கிடையாது.

"ஸார். நீங்க யார்? எங்கேயிருந்து வந்திருக்கீங்க? எதற்கு என்னைப் பார்க்க விரும்புறீங்க?" என்றான் படபட வென்று சந்தீப்.

"சந்தீப்! என்னை உனக்குத் தெரியாம இருக்கலாம். நான் உங்கப்பாவுக்குக் கீழே வேலை செய்யறேன். உன்னைப் பத்தி உங்கப்பா நிறையச் சொல்லியிருக்காரு. இப்ப நான் மெட்ராசுலேந்து வந்திருக்கேன். இன்னிக்கு விடியற் காலையிலே பைக்கிலே போகும்பேது உங்கப் பாவுக்கு அடிபட்டு ஆஸ்பத்திரியில சேர்த்திருக்காங்க. போன்ல சொன்னா பயப்படுவீங்கன்னு உங்கம்மாதான் என்னை அனுப்பியிருக் காங்க. அத்தியூர் போய் தாத்தா பாட்டி கிட்டே விஷயத்தைச் சொன்னேன். அப்படியே பதறி துடிச்சுப் போயிட்டாங்க.


'தம்பி! நீ போயி பள்ளிக் கூடத்திலேந்து சந்தீப்பைக் கூட்டிக் கொண்டு காரோட இங்கே வந்துடு அதுக்குள்ளே நாங்களும் கிளம்பத் தயாரா இருக்கோம். எல்லோரும் சேர்ந்து போகலாம்னு' உங்க பாட்டி சொன்னாங்க. அதனால சீக்கிரம் கிளம்பு" என்றான் கூலிங்கிளாஸ்.

"அப்பா அபாய நிலையில் இருக்கிறாரா! அப்பா...ஐயோ...அப்பா..." ஒரு வினாடி சந்தீப்பின் உள் மனது ஓல மிட்

"வலதுப் பக்கம் திருப்பி நடந்தா மவுண்ட் ரோடு வருமா தம்பி?

"அது வராது. நாமதான் போகணும் சார்"

–ஏ ஹரிகிருஷ்ணன்



# வருவாயே!

முருகா முருகா வருவாயே
முத்தம் எனக்குத் தருவாயே
உருகி நானும் பாடிடவே
உண்மை ஆற்றல் தருவாயே

மயிலின் மீது அமர்ந்திடவே
மகிழ்ந்து இடமும் அருள்வாயே
வயல்கள் மலைகள் சுற்றிடலாம்
வாழ்வில் இன்பம் பெற்றிடலாம்!

அரக்கர் இல்லா இடந்தனையே
அடைந்து ஓடி ஆடிடலாம்
இரக்கத் தாலே உலகினையே
என்றும் வசமாய் ஆக்கிடுவோம்

ஒருபழம் நானும் கொணர்வேனே
உனக்கும் பங்கு தருவேனே
அருமை அண்ணா கணபதியை
அழைத்து இணைந்து உண்போமே

ஆண்டிக் கோலம் வேண்டாமே
அழகாய் நகைகள் அணிவோமே
வேண்டித் துதித்தேன் வருவாயே
வேலுடன் மயிலுடன் வருவாயே!

- திருச்சி பாரதன்



டது. மறு வினாடி தன்னைச் சமாளித்தபடி, தன் உணர்ச்சிகளை வெளிக் காட்டிக் கொள்ளாது உதடுகளில் புன்னகையைத் தவழ விட்டபடி கறுப்புக் கண்ணாடியை உற்று நோக்கினான். அவனுடைய நெற்றியும், சப்பை மூக்கும், ஹிட்லர் மீசையும், அமாவாசை இருட்டு நிறமும் பார்த்த உடனேயே சந்தீப்புக்கு ஏனோ பிடிக்கவில்லை.

'உனக்குத் தெரியாதவங்க யாராவது எதையாவது திங்கக் கொடுத்தா வாங்கித் திங்காதே. முன்பின் தெரியாதவங்க ஏதாவது காரணம் சொல்லி உன்னைக் கூப்பிட்டா 'டக்குன்னு அவன் பின்னாடியே ஏமாந்து போயிடாதே. காலம் கெட்டுக் கிடக்கு. ஜாக்கிரதை"- என்று தாத்தா அடிக்கடி எச்சரித்தது சந்தீப்பின் காதில் எதிரொலித்தது.

உண்மையிலேயே அப்பாவுக்கு உடம்பு சரியில்லாமல் இருந்தால் தாத்தாவும் பாட்டியும் உடனேயே கிளம்பி நேராக பள்ளிக் கூடத்திற்கே வந்து என்னைக் கூட்டிக் கொண்டு கிளம்பியிருப்பாங்க. இந்தப் புதிய ஆளை நிச்சயம் அனுப்பியிருக்க மாட்டார்கள். சந்தீப்பின் மனம் விழித்துக் கொண்டது. சிந்தனையில் ஒரு மின்னல் பளிச்சிட்டது. இவன் போடும் தூண்டிலில் சிக்கிக் கொள்ளக் கூடாது.

"ஸார்! நீங்க தேடற சந்தீப் பையன் நான் இல்லை. நான் ஏ.சந்தீப். அவன் ஆர்.சந்தீப். அவனோட அப்பாவுக்குத் தான் மெட்ராகலே வேலை. எங்கப்பா இந்த ஸ்கூல்லே வாத்தியாராக இருக்கார். நீங்க தேடற ஆர். சந்திப் இன்னிக்கு மத்தியானம் ஸ்கூலுக்கு லீவு போட்டு விட்டு வீட்டிற்குப் போயிட்டான்! நான் வரேன்."

பட்டென்று சந்தீப் பதில் சொன்னான். தன் உள்ளத்தில் படபடப்பும், உடலில் இலேசான நடுக்கமும் இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், கூலிங் கிளாஸின் பதிலையும் எதிர்பார்க்காமல் தன் வகுப்பறையை நோக்கி விரைந்தான்.

கறுப்புக் கண்ணாடிக்காரன் யோசனையுடன் காரைக் கிளப்ப ஆரம்பித்தான்.

(தொடரும்)




• முதல் பரிசு பெற்றது
(டி.ரமேஷ்குமார்,
சென்னை-63.)

# கேமல் சேம்ப்




• 2வது பரிசு பெற்றது
வி.கார்த்தி, ஹரூர்.

இப்படியும் கூட வண்ணந்தீட்டி அழகு படுத்த முடியுமா என்று அதிசயப் படும் அளவுக்கு அசத்தி விட்டிருந்தார்கள் இதில் கலந்து கொண்டவர்கள். வாலில் உட்கார்ந்திருந்த குருவிக்கு மேல் சந்திரனையும் நட்சத்திரங்களையும் கூடக் காட்டியிருந்தார்கள்! வந்திருந்த நூற்றுக்கணக்கானவற்றை பிரபல ஓவியர் திருமதி லலிதா தியாகராஜன் அவர்கள் பரிசீலித்து பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுத்தார்.

*முதல் பரிசு:* டி.ரமேஷ்குமார், சென்னை-63. (கேமல் பம்பர் மேக்ஸி பேக்)

*இரண்டாவது பரிசு:* வி.கார்த்தி, ஹரூர். (கேமல் மிடி பேக்)


*மூன்றாவது பரிசு:* மூ.ப்ரீத்தி, புதுடில்லி-16. (கேமல் பொருள்கள்.

பரிசு பெற்றவை மூன்றும் இங்கு வெளியாகி உள்ளன. இவை தவிர நூறு ஆறுதல் பரிசுகளுக்கு உரியவைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு கேமல் சேம்ப் இலவச ஸ்டிக்கர் அனுப்பப்பட உள்ளன. கலந்து கொண்ட நூற்றுக் கணக்கானவர்களுக்கு நன்றி. பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்.

புகைப்படம்: பிரகாஷ்


# போட்டி-முடிவு!

* 3வது பரிசு,
மூ.ப்ரீத்தி, புதுடில்லி-16






* ஓவியர் திருமதி லலிதா தியாகராஜன்.
வந்த ஓவியங்களைப் பரிசீலிக்கிறார்.



## காசில்லாத ஏசி!

கோடை காலம் வந்தது
குளிரும் விட்டுப் போனது
ஆடை பருத்தி ஆனது
அதிக வெயில் காயுது

தாகம் அதிகம் எடுக்குது
தண்ணீர் கூடக் கொதிக்குது
முகத்தில் வழியும் வியர்வையை
முயன்று துடைத்து அலுக்குது!

கீத்துக் கொட்டகை போடலாம்
கயிற்றுக் கட்டிலில் சாயலாம்
காத்தைக் குளுமை ஆக்கலாம்
காசில்லாத ஏசிதான்!

- ஜெயதுரை பரந்தாமன்.

## பூங்கா

வண்ண பூக்களெல்லாம்
வரிசையாகச் சிரிக்குது
சின்ன, சின்ன பூக்களெல்லாம்
சிங்காரமாய் இருக்குது

சருக்கு மரம் நிற்குது
சறுக்கிடவே துடிக்குது
சிறிய குடை ராட்டினம்
சுற்றிச் சுற்றி வருகுது!

இங்கு மட்டும் வந்துவிட்டால்
இனிய பொழுது போகுது!
எங்க ஊரின் பூங்கா போல
எந்த ஊரில் இருக்குது?

- இரா.அ. தென்றல் நிலவன்.





## காற்றாடி

அண்ணன் செய்த காற்றாடி
அழகு மிக்க காற்றாடி
வண்ணக் காகிதக் காற்றாடி
வாலே இல்லாக் காற்றாடி.

காற்றில் மிதக்கும் காற்றாடி
கண்டோர் வியக்கும் காற்றாடி
சற்றும் அயராக் கற்றாடி
சண்டைக்கு அழைக்கும் காற்றாடி!

- சு. கண்ணகி.

## கற்றுக்கொள்

நலமாய் வாழக் கற்றுக்கொள்;
நன்மை செய்யக் கற்றுக்கொள்;
உண்மை பேசக் கற்றுக்கொள்;
உயர்ந்து வாழக் கற்றுக்கொள்;

துயரைப் போக்கக் கற்றுக்கொள்;
துணிந்து செயல்படக் கற்றுக்கொள்;
உழைத்து வாழக் கற்றுக்கொள்;
உலகை ஆளக் கற்றுக்கொள்.

இன்பம் பயக்கக் கற்றுக்கொள்;
இனிதாய்ப் பேசக் கற்றுக்கொள்;
துன்பம் வந்தால் வாழ்விலே;
தாங்கி ஏற்கக் கற்றுக்கொள்!

- ஜ. சுபத்ரா.






## பெரிய கோவில்

இராஜ இராஜன் எழுப்பியது
எல்லாம் கல்லால் கட்டியது
பாரில் இதற்கு நிகரில்லை
பார்த்தவர் இதனை மறப்பதில்லை!

கலைகள் கொஞ்சும் கோபுரமாம்
கண்ணைக் கவரும் திறமைகளாம்
மலையே இல்லாத் தஞ்சையிலே
மன்னன் எப்படிக் கட்டினனோ!

ஒரே கல்லில் உருவான
அழகு நந்தி இருக்கிறது
பாரில் இல்லை இதுபோல
பெரிய நந்தி உருவச்சிலை!

- பி. செந்தில்.

## பஞ்சு மிட்டாய்

பஞ்சு பஞ்சு மிட்டாயாம்
பாகாய் இனிக்கும் மிட்டாயாம்
அஞ்சி டாமல் எவருமே
ஆசை யாகத் தின்கலாம்!

பந்து போன்ற வடிவமாம்
பஞ்சு போன்ற மென்மையாம்
விந்தை இதன் வண்ணமாம்
விரும்பி எவரும் தின்பராம்!


வீதி ஓரம் விற்குமாம்
வாங்கித் தின்ன வைக்குமாம்
பாதி எனக்கு வேண்டாமாம்
பெரிதாய் முழுதாய் வேணுமாம்!

- பா. கணேஷ்!



சிராக்கஸ் நாட்டில் வாழ்ந்த ஆர்க்கிமிடீஸ் என்கிற விஞ்ஞானியைப் பற்றிக் கேள்விப் படாதவர்கள் இருக்க முடியாது. கிறிஸ்து பிறப்பதற்குமுன், அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் இந்த அறிவியல் அறிஞர்.

சிராக்கஸ் நாட்டை எதிரிக் கப்பல்கள் முற்றுகை இட்டன. அந்தக் காலத்துக் கப்பல்கள் பாய் மரக் கப்பல்கள். உணவுப் பொருள் வருவதைப் பகைவர்கள் தடுத்து விட்டார்கள். முற்றுகை நீடிக்கவே சிராக்கஸ் நாட்டு மக்கள் பட்டினியால் அவதிப்பட்டனர். முற்றுகையை முறியடிக்க ஆர்க்கிமிடீஸை அழைத்து மன்னன் யோசனை கேட்டான். ஆர்க்கிமிடீஸும் உடனடியாக உதவ திட்டம் போட்டு செயல்பட ஒப்புக் கொண்டார்.




ஆர்க்கிமிடீஸின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கியது. கடற்கரையில் கட்டப்பட்ட மதில் சுவரின் மீது அவர் பெரிய லென்சுகளை எடுத்துக் கொண்டு ஏறி அமர்ந்தார். காலையில் கிழக்கே உதிக்கும் சூரியனின் ஒளிக் கதிர்களை லென்ஸ் வழியாக கடற்கரைப் பகுதியிலுள்ள பகைவர்களின் பாய் மரங்களின் மீது குவியச் செய்தார்.

இப்போதும்கூட சூரியனின் ஒளிக் கற்றைகளை 'லென்ஸ்' வழியாக ஒரு காகிதத்தின் மீது குவியச் செய்தால், குவிந்த இடம் சற்று நேரத்தில் தீப்பிடித்துக் கொள்ளுவதைக் காணலாம்.

இதே முறையைத் தான் ஆர்க்கிமிடீஸ் அன்று கையாண்டார். கப்பலின் பாய் மரங்கள் திடீரென்று தீப் பிடித்து எரிந்தன. எதிரிப் படைகளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ மந்திர சக்தியால் கப்பல்கள் திடீரென்று தீப்படித்து எரிவதாக எண்ணி கப்பல்களை அப்புறப் படுத்தத் தொடங்கினர்.


அது போலவே, மதில் சுவர்களில் மிகவும் நீளமான நெம்புகோல்களைப் பொருத்தி வெளியே கடற் பக்கம் உள்ள எதிரிகளின் கப்பல்களை கொக்கியில் மாட்டி கடலிலிருந்து மேலே தூக்க ஆரம்பித்தார். இதுவும் ஏதோ குட்டிச் சாத்தான் வேலைதான் எண்ணிய எதிரிகள் பயந்து ஓடத் தொடங்கினார்கள்.


ஆர்க்கிமிடீஸின் விஞ்ஞான அறிவு தாய்நாடான சிராக்கஸ் நாட்டை எதிரிகளின் முற்றுகையிலிருந்து மீட்டது.


– சிவரஞ்சன்


# உலகம் சுற்றிய மாவீரன்!

கதை: ஆனந்தி
படம்: [signature]






வாட்டசாட்டமாக வளர்ந்தான் ஃபிரான்சிஸ். இங்கிலாந்தின் தென்-கோடியில் பிளைமவுத் துறைமுகம்...
டேய், வாங்கடா கப்பல் பார்க்-கலாம்!
நம்ம கிராமம் இந்த துறை-முகப்பட்டினத்-துக்குப் பக்கத்தில் இருப்பது நல்லதாச்சு!
கப்பல் ஏறி தூர தூர தேசங்-களுக்குப் போவேன்!
இப்போதைக்குப் படகு ஓட்டிப் பழகலாம்...
ஜாக்கிரதை! முரட்டு அலைகள்! கவிழ்த்துடும்...
வீடு திரும்பிய போது...
ஃபிரான்சிஸ்! பெரியவங்க துணை இல்லாம கடல்ல போனீங்-களாமே!
இன்னிக்குப் படகு, நாளை கப்பல்!
நீ, என்னைப் போல் மத குருவாக விளங்குவாய் என்று எதிர்-பார்த்தேன்...
என்னுடைய பாதையில் போக விடுங்கள்; நாட்டுக்குப் பெருமை சேர்ப்பேன்!



நாளடைவில்...
உங்கள் வியாபார கப்பலில் உதவியாளனாக என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள். நன்றியுடன் இருப்பேன்...
கடுமையாக உழைக்கணுமே...
கடல் பயணங்களில்...
கப்பல் செலுத்துவதின் எல்லா நுணுக்-கங்களையும் கற்பேன்...
பாய் மரங்களில் பணியாற்றியது போதும்; நாளை முதல் சுக்கானைப் பிடி!
ஒரு சமயம் அந்தக் கப்பல் தலைவன் நோய்வாய்ப் பட...
நன்றாகப் பயிற்சி பெற்றாய்... உன்னிடம் கப்பலை ஒப்படைக்கிறேன்!
தலைமைப் பொறுப்பு ஏற்றான் ஃபிரான்சிஸ் ஓர் உதவியாளன்...
ஸ்பானிஷ் கப்பல்கள் ரொம்பப் பெரிசு! அரண்மனைகள்! மிதக்கும் ஒரு பெரிய நாடு மேற்கே இருக்காமே, அங்கே போய்...
...தங்கமும் வெள்ளியுமா கொள்ளை-யடிச்சுக் கொண்டு வராங்க!
அவங்க கப்பல் பெரிசா இருக்கலாம். ஆனா நம் சிறிய கப்பல்களுக்குத்தான் வேகம் அதிகம்!



ஸ்பானிஷ் கப்பல்கள் கொள்ளையடிச்சுட்டு வரதை நாம சுலபமா அவங்ககிட்டே-யிருந்து பறிச்சுட-லாம்!
அதுதான் நடக்குது; அதோ பாரு!
ஸ்பெயின் தேசம் கத்தோலிக்க மதத்தைத் தழுவியது. இங்கிலாந்தில் பிராட்டெஸ்டண்ட் பிரிவின் ஆட்சி. அதனால் மதச்சார்பான பகைமை இருந்தது. அது, கடல் கொள்ளைகளை நியாயப் படுத்தியது...
ஸ்பானிஷ் கப்பல்கள் அடிமை வியாபாரத்தில் ஈடுபடுவதையும் பார்த்தான்...
சே! கேவலம். ஸ்பெயின் நாட்டினர் இனி என் ஜென்மப் பகைவர்கள்!
ஃபிரான்சிஸ் தன் உறவினர் ஹாக்கின்ஸை சந்தித்தான்...
என் சிறிய கடற்-படையில் ஒரு கப்பலுக்கு உன்னைத் தலைவனாக்கு-கிறேன்...
நன்றி ஹாக்கின்ஸ்!
ஃபிரான்சிஸ் டிரேக் பல-முறை அட்லாண்டிக் கடலைக் கடந்து ஸ்பெயின் தேசக் கப்பல்களின் நடவடிக்கை-களை ஆராய்ந்தான்...
மெக்ஸிகோ, பெருவில் கொள்ளை அடிப்பதை பனாமாவில் சேர்த்து வைக்கிறார்-கள்...
வட அமெரிக்கா
பனாமா
தென் அமெரிக்கா
பெரு


டிரேக்கின் அண்ணன் ஜான்...
ஸ்பானிஷ் கப்பல்கள் வந்து கொண்டு போகும் வரை, செல்வத்தை பனாமாவில் நாம்பரே துறைமுகத்தில் தான் குவிக்கிறார்கள்...
நாம் துணிச்சலுடன் செயலாற்றினால் ஸ்பானிஷ் கப்பல்கள் வருமுன்னரே நாம்பரேயைத் தாக்கி, அந்தச் செல்வங்களையெல்லாம் கொள்ளையடித்து நம் கப்பல்களில் ஏற்றி வந்து விடலாம்!
இதற்கிடையில் ஃபிரான்சிஸ் டிரேக்குக்குத் திருமணம் ஆகியிருந்தது...
ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு என்னை வருடக் கணக்கில் விட்டுப் போய் விடுகிறீர்கள்...
என்னைக் கல்யாணம் செய்து கொள்ளும் போதே ஆபத்தையும் சேர்த்துத்தான் மணந்து கொண்டாய்! போய் வருகிறேன்!
இரண்டே கப்பல்களில் எழுபத்து மூன்று வீரர்களுடன் நாம்பரே துறைமுகத்தைத் தாக்கினார் டிரேக்...
டமார்...
டிரேக் வந்துட்டான்! ஓடுங்க! ஓடுங்க!



கவர்னர் மாளிகையில் நுழைந்து கஜானாவை உடைத்து...
அத்தனையும் வெள்ளி! அள்ளிக்குங்க!
அதற்குள் ஸ்பானிஷ் வீரர்கள் தைரியத்தைத் திரட்டிக் கொண்டு சூழ்ந்து தாக்கினார்கள்...
தப்பி ஓடுங்கள்! கப்பலில் சந்திப்போம்!
டிரேக் சுடப்பட்டு விழ...
ஆ!
ஐயோ...
டிரேக்கை நால்வர் தூக்கிக் கொண்டு ஓடினார்கள்...
சீக்கிரம்! கப்பலில் வைத்தியர் இருக்கிறார்...
டிரேக் குணமடைய...
என் உயிர் காத்த தோழர்களே, நன்றி!


அதோ, போர்ட்டோ ரிகோ துறைமுகம்! தாக்குவோம்!
டூம்...
இங்கு பல கப்பல்கள் டிரேக் வசமாயின...
ஆ!
டுமீல்...
தாக்கு!
விடாதே!
அண்ணா! நாம் கைப்பற்றிய கப்பல்கள் இரண்டில் கொள்ளையடிக்கப்பட்ட தங்கம், வெள்ளியை ஏற்றி இங்கிலாந்துக்குக் கொண்டு போ! நான் பயணத்தைத் தொடர்கிறேன்...
பனாமா பூசந்தியில் ஒதுக்குப்புறமாக இறங்கினான் டிரேக். ஓர் அமெரிக்க (சிவப்பு) இந்தியன்...
அந்தக் குன்றின் மேல் ஏறிப் பார்த்தால் இன்னொரு கடல்!
ஆச்சரியமடைந்த டிரேக் குன்றில் மரம் ஏறி...
அட! எனக்குப் பின்புறமும் கடல்! முன்புறமும் கடல்!



இன்று பசிஃபிக் என்று அழைக்கப் படும் மாகடலை முதன் முதலில் பார்த்தார் டிரேக்...
அந்தக் கடலில் பயணம் செய்ய வேண்டும். அப்படியே போய் உலகைச் சுற்றி வந்து விடலாம்!
மாலுமிகள் களைத்திருந்த-தால் ஊர் திரும்பினார் டிரேக்...
ஃபிரான்-சிஸ் டிரேக் வாழ்க!
அடுத்து உலகைச் சுற்றி வரத் திட்டம் வைத்திருக் கிறேன்!
மனைவி மேரி...
திரும்பி வந்த உடனேயே அடுத்த பயணம் பற்றித்தான் சிந்தனையா?
திடகாத்திரனாக இருக்கும் நாட்-களில் சாதனைகள் புரிய ஆசை!
1577ம் ஆண்டு ஐந்து கப்பல்களில் புறப்பட்டார் டிரேக். அவர் சென்ற பாதை...
வட அமெரிக்கா
ஐரோப்பா
ஆசியா
ஆப்பிரிக்கா
பசிஃபிக் சமுத்திரம்
தென் அமெரிக்கா
இந்து மகா சமுத்திரம்
ஆஸ்தி-ரேலியா





தென் அமெரிக்காவின் தெற்குமுனையில் மகெல்லான் ஜலசந்தியை அடைந்த போது...
இனி அதிக கடலில் முன் அனுபவம் அற்ற பயணம். அதனால் இரு கப்பல்களை இங்கேயே விட்டுச் செல்வோம்...
டிரேக் எதிர்பார்த்தவாறே பயங்கரப் புயலில் கலங்கள் தத்தளித்தன...
பதினாறு நாட்கள் படாதபாடு பட்டு விட்டோம். ஒரு கப்பல் சென்ற இடம் தெரியவில்லை. திரும்பி விடலாமா?
அந்தப் பேச்சுக்கே இடமில்லை!
ஒரு கப்பலைத் திருப்பி அனுப்பி விட்டு கோல்டன் ஹைண்ட் மட்டுமே பயணத்தைத் தொடர...
அதோ, ஒரு ஸ்பானிஷ் கப்பல்! துரத்திப் பிடிப்போம்!...
தென் அமெரிக்கக் கடற்கரையோரம்...
ஸ்பானிஷ் வீரர்கள் அசந்து தூங்குகிறார்கள்...
கொள்ளையடிக்க சரியான சந்தர்ப்பம்!...



கடலிலும், கரையிலும் கொள்ளை-யடித்தபடி வட-அமெரிக்கா சென்று, பின்னர் மேற்கே திரும்பி ...
அறுபத்தெட்டு நாட்கள் ஆகிவிட்டன ...
பயப்-படாதே! பூமிக்கு எல்லை கிடையாது ...
இந்தோனேஷியக் கடற்-கரை தெரிய ...
ஆ! நிலம் ...
கப்பலை விடுவிக்க எடையைக் குறைத்-தனர் ...
ஐயோ! கப்பல், கடல் பாறைகளில் உரசி நின்று விட்டதே! ...
லவங்க மூட்டைகள், துப்பாக்கிகள் எல்லாம் போச்சு! ...
கப்பலைப் பழுதுபார்க்கக் கொண்டட ...
நன்றாக ஓய்வெடுங்கள். இந்து மகா-சமுத்திரத்தைக் கடப்பது லேசுப் பட்ட காரிய-மல்ல!
ஆப்ரிக்காவின் தென்முனையைக் கடந்து, வடக்கே ஐரோப்பா நோக்கிப் பயணப்பட்டனர் ...


1580, செப்டம்பர் 26ம் தேதி கோல்டன் ஹைண்ட் இங்கி-லாந்தின் தென் முனையில் பிளைமவுத் துறை முகத்தை அடைந்தது...
மேரி, உனக்காக நிறைய செல்வங்கள் கொண்டு வந்திருக்கேன்...
தேம்ஸ் நதியின் முகத்துவாரத்தில் கப்பலை நிறுத்த, அரசி எலிஸபெத் விஜயம்...
பேரரசிக்கு என் எளிய காணிக்கை...
மகாராணி டிரேக்குக்கு 'ஸர்' பட்டம் கொடுத்தார்
ஸ்பெயின் நாட்டுக்கு நம் பலத்தை உணர்த்திய ஸர் ஃபிரான்ஸிஸ் டிரேக், வாழ்க!
இருபத்தைந்து கப்பல்களின் தலைவன் ஆனார் டிரேக். ஸ்பானிஷ் மாலுமிகள் அவர் பெயரைக் கேட்டே நடுங்கினார்...
ஒரு நாள்...
டிரேபோ! ஏராளமான எதிரிக் கப்பல்கள் தாக்க வருகின்றன!
இந்த ஆட்டத்தை


ஆடும் போதே திட்டம் வகுத்துக் கொண்ட டிரேக்...
124 கப்பல்கள்...
பயப்பட வேண்டாம்...
டிரேக்கின் திட்டப்படி சிறிய பிரிட்டிஷ் கப்பல்கள் சிலவற்றில் விறகும், எண்ணெய்யும், வெடிமருந்தும் ஏற்றப்பட்டன... இரவு...
ஐயோ! கொள்ளி வாய்ப் பிசாசுகள் வருகின்றன!...
பிரிட்டிஷ் கப்பல்களைக் காற்றோடு மிதக்க விட்டு மாலுமிகள் தப்ப...
ஆ! ஐயோ!
நமது சில கப்பல்களைக் காவு கொடுக்க நேர்ந்தாலும் ஸ்பானிஷ் கடற்படை அடியோடு ஒழிந்தது!
போரில் வெற்றிகள் குவித்த டிரேக், மக்களுக்கு நிரந்தர நன்மை புரியவும் விரும்பினார். 25 மைல் தொலைவில் ஓடும் நதியிலிருந்து பிளைமவுத்துக்கு கால்வாய் வெட்டி...
குடிநீர் பிரச்னை தீர்த்த டிரேக் வாழ்க! வாழ்க!
முற்றும்.


"இளங்கோவடிகள் காலத்திலேயே 'ஞாயிற்றுக் கிழமை' லீவு நாளா இருந்திருக்கும் போலிருக்கு!"
"எப்படி?"
"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்'னு பாடியிருக்காங்களே..."
- ஜூனியர் தேஜ்
"உங்க பையன் டாக்டர் ஆயிடுவான்னு தோணுது சார்."
"படிப்பை வச்சுத்தானே சொல்றீங்க?"
"ஊஹூம்; எழுத்தை வச்சு!"
- சீர்காழி. வி. ரேவதி
"கொட்டினால் அள்ள முடியாதது எது?"
"தெரியலையே?"
"தேள்தான்!"
"ஒரு வருடத்திற்கு எத்தனை மாதங்கள்?"
"தமிழ் மாதமா? இங்கிலீஷ் மாதமா ஸார்?"
- தேனி முருகேசன்
"ரெண்டு தடவை தேள் கொட்டிடிச்சு டாக்டர்."
"அப்ப, ரெண்டு தடவை ஃபீஸ் தரணுமே!"





## எந்த வீடு யாருக்கு? போட்டி

உங்களுக்கு நன்கு அறிமுகமான சில உயிரினங்களும் அவை வாழ்கின்ற இடங்களும் இங்கே தரப்பட்டுள்ளன. எவை எதில் வாழும் என்பதைக் கண்டு பிடித்து அவைகளுக்கு உரிய எண்களை மட்டும் குறிப்பிட்டு கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்புங்கள். கூப்பனில்லாது வருபவை கவனிக்கப்படமாட்டா. ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. அயல் நாட்டு வாசகர்கள் இந்தியாவில் உள்ள உறவினர் அல்லது நண்பரின் முகவரியைத் தர வேண்டும்.

### எந்த வீடு யாருக்கு? போட்டி

பெயர் ..........................................

வயது ..........................................


முகவரி ..........................................


..........................................

..........................................

பின்கோடு ..........................................

முடிவு தேதி 31.8.94





# எமனையே ஏப்பம் விடுவார்!



சென்னை நண்பர் புயாவை யோசனையுடன் நோக்கினார்.

"ஜுராங் பறவைகள் பூங்கா, முதலைப் பண்ணை, ஹௌபார் வில்லா, சன்டோசா இப்படிப் பல இடங்களைப் பார்த்தோமே தவிர அறிவியல் தொடர்பாக எதையுமே பார்க்கலையே?"

"பறவைகள் பூங்கா, முதலைப் பண்ணை எல்லாம் அறிவியலின் உயிரியல் பிரிவு தானே?" என்று திருப்பிக் கேட்ட புயா, "இயற்பியல் என்ற Physics தொடர்பானவை எதையும் பார்க்கவில்லை என்றுதானே கேட்கிறீர்கள்? இன்று நாம் போகப் போவது சிங்கப்பூர் சயின்ஸ் சென்டர் (அறிவியல் மையம்)," என்றார்.

ஜுராங் வட்டாரத்தில் எழில்மிக்க மூன்று மாடிக் கட்டடத்தில் அமைந்திருந்தது சயின்ஸ் சென்டர். அருகே நெருங்கியதுமே தானாகத் திறந்து கொள்ளும் கண்ணாடிக் கதவுகள். முழுக்க குளிர்ப்பதனம். தூய்மை கொஞ்சியது. சுமார் 300 அற்புதமான பொருள்கள் சுச்சிதமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

மனிதன் பறக்க முயன்று வெற்றி கண்ட வரலாற்றை 'வெப்ப பலூன்' காலத்தில் இருந்து தொடங்கி, ராகேஷ் சர்மா பங்கு கொண்ட விண்வெளி ராக்கெட் நிகழ்ச்சிவரை காட்சியாக, சுவைபடக் கண்டு களிக்கும் வகையில் வைத்திருந்தார்கள். ஏரோப்பிளேன், ராக்கெட் எல்லாம் எப்படி இயங்குகின்றன என்பதை அவைகளின் மாடல்களைக் கொண்டு காட்டினார்கள். குழந்தைகளே ஏறி இயக்கிப் பார்த்து மகிழலாம்! கோள்களைப் பற்றியும் விண்வெளி பற்றியும் அறிய தனியாக விரிவான ஓர் அழகுக் கூடம் இருந் தது. ஹாலி வால் நட்சத்திரத்தைப் பற்றி அருமையான 20 நிமிட வீடியோ படத்தைத் தொடர்ந்து காட்டுகிறார். இவை தவிர, ஒளிச் சிதறல்கள், உருளைகளின் மகத்தான சக்தி எல்லாமே பார்த்தவுடன் மனத்தில் பதியும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தன. கம்ப்யூட்டர் பிரிவு தனியாக இருந்தது. போன மாதம் கண்டுபிடிக்கப்பட்ட கம்ப்யூட்டர் மாற்றங்களைச் செயலாக்கி பார்வைக்கு வைத்திருந்தார்கள். மாணவ மாணவியரை இவைகளை இயக்கிப் பார்க்க அனுமதித்தார்கள். இவை குறித்து எழும் சந்தேகங்களை அங்கே உள்ள தொலை பேசியில் கூறி விளக்கங்களை அறியும் வசதியும் இருந்தது.

சயின்ஸ் சென்டருக்கு அருகிலேயே தனியான அழகுக் கட்டடத்தில் ஒரு மினி திரையரங்கம் இருந்தது.

"கோளரங்கம் என்ற பிளேனடேரியம் இதுதான்," என்று புயா நண்பரை டிக்கெட் வாங்கி உள்ளே அழைத்துச் சென்றார்.

அரங்கம் உருண்டை வடிவில் இருந்தது. அப்படியே வானவெளிக்கு அலக்காகத் தூக்கிச் சென்று, நட்சத்திரங்களுக்கு மிக மிக அருகில் இடிப்பது போல் நெருங்க வைத்து, கோள்களை வலம்வர வைத்து, மெய்மறக்க வைத்தார்கள். "உட்கார்ந்திருந்த நாற்காலியோடு பறந்து போவது போன்ற



உணர்வு ஏற்பட்டது!" என்று வியந்தார் நண்பர்.

"இருங்கள். இங்கே ஆம்னி மேக்ஸ் (OMNI MAX) என்ற புதிய கண்டுபிடிப்பு முறையில் தயாரிக்கப்பட்ட ஒரு திரைப்படத்தையும் போடுகிறார்கள். 20,000 வாட் சக்தியில், ஆறு சேனல்களில் ஒளியும் ஒலியும் நம்மைச் சுற்றி ஓடுகிறது. பூமியில் இருந்து நிலவைப் பற்றி எடுக்கப்பட்ட பல படங்களைப் பார்த்திருக்கிறோம். இங்கு புதுமையாக சந்திரனில் இருந்து பூமியைப் பற்றி எடுக்கப்பட்ட படத்தைப் பார்க்கப் போகிறோம்" என்று அழைத்துக் கொண்டு போனார் புயா.

படம் தொடங்குமுன், "படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது உங்களுக்குப் பயமாகவோ, மயக்கம் வருவது போலவோ இருந்தால் கவலை வேண்டாம். உட்கார்ந்திருக்கும் நாற்காலியின் கைகளைப் பிடித்துக் கொண்டு நன்கு சாய்ந்து, கண்களை இறுக மூடிக் கொள்ளவும். ஒன்றும் ஏற்படாது" என்ற அறிவிப்பைப் போட்டார்கள்.

"இப்படியெல்லாம் கூட ஏற்படுமா என்ன! ரொம்பத்தான் அலட்டிக்கிறாங்க!" என்று கூறினார் நண்பர். புயா சிரித்துக் கொண்டார்.

படம் தொடங்கியது. நாற்காலியில் உட்கார்ந்து படம் பார்க்கிறோம் என்ற எண்ணமே போய்விட்டது. விண்வெளி வீரர்களோடு நண்பர் பறந்தார். இப்படியும் அப்படியும் ஆடி விண்வெளி வீரர்களுக்குப் பின்னாலேயே பயணித்தார். நிலவின் விளிம்பில் நின்று கொண்டு கால்பந்து அளவிலான பூமியைக் கண்டபோது என்னமோ பண்ணியது. புயாவைப் பிடித்துக் கொண்டார். "பயமில்லை. அப்படித்தான் இருக்கும். பின்னால் சாய்ந்து கொண்டு படத்தைத் தொடர்ந்து பாருங்கள்" என்றார் புயா.

"பசிபிக் பெருங்கடல் நம்ம ஊர் சாக்கடை மாதிரி இத்தனை சிறிதா இருக்கே! இமயமலை கோணா மாணா பூரி உப்பின மாதிரி இருக்கே!" என்று தொடர்ந்து படத்தைப் பார்த்து வியந்தார் நண்பர்.

"ஆசியாவில் அமைந்துள்ள ஆறு அதிசயத் திரையரங்குகளில் இதுவும் ஒன்று" என்று பெருமையடித்துக் கொண்டார் புயா.

நண்பர் மறுக்கவில்லை.

சிங்கப்பூரில் தனித்தனியாகப் பெட்டிக் கடைகள் கிடையாது. எல்லாம் பெரிய வணிக வளாகங்களில்தான் இருந்தன. தெரு ஓரக்கடைகளே கிடையாது. காய்கறிகளில் இருந்து நகைகள் வரை எல்லாமே ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அடுக்கு மாடிக் கட்டடங்களில்தான்.

திடீரென்று ஏதோ வாசனை! "நம்ம ஊர் முலாம் பழ வாசனை வருதே!" என்று கேட்டார் நண்பர்.

"இது 'டூரியான்' பழம். மலேஷியாவின் தேசியக் கனி. பலாப்பழம் மாதிரியே மேலே முள். கால்பந்து அளவுக்கு இருக்கும். பாடுபட்டால்தான் சுளையைக் காணலாம். இதன் 'ஜூஸ்' அருமையாக இருக்கும்" என்று விளக்கினார் புயா.

நாற்சந்திகள் அமைந்துள்ள தெருக்களில் அலங்காரப் பந்தல் போட்டு, மேடை கட்டி, கண்கவர் தோரணங்கள் அமைத்து இருப்பதைப் பார்த்த நண்பர், புயாவிடம் கேட்டார்.

"இங்கே சிங்கப்பூரில் அதிக அளவுக்கு சீன மக்கள் வாழ்கிறார்கள். அதன் காரணமாக சீனப் பண்டிகைகளும் கொண்டாடப்படுகின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கது. "Festival of Hungry Ghosts" என்பது. பசிக்கும் பேய்களுக்கான பண்டிகை என்பது பொருள். ஆகஸ்ட் மூன்றாவது வாரத்தில் இருந்து செப்டெம்பர் மூன்றாவது வாரம் வரை இதைக் கொண்டாடுகிறார்கள். அமைதி இல்லாமல் அலைந்து திரியும் பேய்கள், குறிப்பாக உறவினர்களால் கைவிடப்படுபவர்களின் ஆவிகள் இந்த மாதத்தில் நிம்மதி இன்றி அலைவதாக நம்புகிறார்கள். அவை

களை மகிழ்விக்கவே இந்தப் பண்டிகை. இந்த நடுத்தெரு மேடைகளில் இரவு முழுக்க சீனாவின் பிரபலமான WAYONG என்ற இசை நாடக, நடன நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டுவார்கள். பெரும்பாலும் எல்லோரும் நின்று கொண்டேதான் பார்ப்பார்கள். பெரிய அளவில் விருந்து, வாசனைப் பொடிப் புகை எல்லாம் இருக்கும். காகித ரூபாய்களை (கரென்சி) எரிப்பார்கள். பரிசுப் பொருள்களைப் பேய்களுக்குத் தருவார்கள். பெரும்பாலும் அலங்கார பீங்கான் பொருட்களே. கடைசி நாளில் இவைகளை ஏலம் விடுவார்கள். நல்ல விலைக்குப் போகும். இவைகளை வாங்கி வீட்டில் வைத்துக் கொண்டால் நல்லது என்பது இவர்கள் நம்பிக்கை. இன்று இரவு நாமும் ஏதாவது ஒரு 'வேயாங்' நிகழ்ச்சிக்குப் போகலாம்" என்றார் புயா.



மறுநாள் காலை புயா குளித்துக் கொண்டிருக்கும் போது தொலைபேசியில் யாரோ அழைத்தார்கள். புயாவின் அனுமதியின் பேரில் நண்பரே விஷயத்தைக் கேட்டார்.

"யாரோ ஒரு வெளிநாட்டு பளுதூக்கிக் கலைஞன், நகரும் பொருள் எதுவாக இருந்தாலும் தலைக்குமேல் தூக்கிக் காட்டுகிறேன் என்று சவால் விடுகிறானாம். எதைத் தூக்கிக் காட்ட வேண்டும் என்று கூறுங்கள். நீங்கள் தோற்று விட்டால் ஐந்நூறு வெள்ளி டாலர் தாருங்கள். நான் தோற்றாலும் தருகிறேன் என்று தொல்லைப்படுத்துகிறான். இவன் பர்மாவில் ஒரு குட்டி யானையை இப்படித் தூக்கிக் காட்டிப் பரிசு பெற்றவனாம். இவனை ஏதாவது ஒரு தந்திரம் பண்ணித்தான் தோற்கடிக்க முடியும். அதுதான் புயாவிடம் கேட்கிறேன்" என்று விளக்கினார் தொலைபேசி நண்பர்.

இதற்குள் புயாவே வந்து விட்டார். விஷயத்தை விளக்கி விட்டு நண்பர் குளிக்கப் போனார். இருவரும் வெளியே சென்று விட்டுத் திரும்பும்போது இரவு வெகுநேரமாகி விட்டது.

தொலைபேசி அழைத்தது. புயாவின் நண்பர்தான் பேசினார்.


"புயாவுக்கு நன்றி கூறுங்கள். அவர் சொல்லிக் கொடுத்த தந்திரத்தைக் கொண்டு அகம்பாவம் பிடித்த அந்த பளு தூக்கும் பயில்வானைத் தோற்கடித்து விட்டோம். ஐந்நூறு வெள்ளி பரிசு வேறு."

"புயா என்ன தந்திரம் சொன்னார்?"

" 'நகரும் பொருள் எதுவாக இருந்தாலும் துக்குவேன் என்றுதானே சவால் விட்டான்? உன்னையே உன் இரண்டு கைகளாலும் தூக்கிக் காட்டு. நீயும் ஒரு நகரும் பொருள் தானே?' என்று கேட்கச் சொன்னார். எமனையே விழுங்கி ஏப்பம் விடக் கூடியவராச்சே புயா! நாளைக்கு விருந்து. புயாவோடு நீங்களும் வாருங்கள்" என்று முடித்தார் நண்பர்.

சென்னை நண்பர் திகைத்து நின்றார்.

நன்றி - புகைப்படங்கள் :
**சிங்கப்பூர் சுற்றுலா கார்ப்பரேஷன்**



# கேளுங்கள்




## சப்பாத்தியை யார் கண்டு பிடித்தார்கள்?

• டெல்டியாலஜிஸ்ட்ஸ் (Deltiologist) என்பவர்கள் யார்? - வா. பெரியநாயகி, சாத்தூர்.

படம் போட்ட கார்டுகளை (Picture Post Cards) சேர்க்கும் பொழுது போக்கு உடையவர்களே டெல்டியாலஜிஸ்ட் என்கிறார்கள்.

• முதல் பேசும் Talkie திரைப்படம் எந்த ஆண்டு எங்கு திரையிடப்பட்டது. - வா. ரமணன், திருக்கோயிலூர்.

அமெரிக்காவில் உள்ள நியூயார்க் வார்னர் தியேட்டரில்தான் 1926 ஆம் ஆண்டு அகஸ்ட் 5 ஆம் நாள் பேசும் திரைப்படம் திரையிடப்பட்டது. இந்த வார்னர் தியேட்டர்களின் உரிமையாளர் புகழ் பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர்களான "வார்னர் பிரதர்ஸ்."

• லவுட்ஸ்பிக்கரைக் கண்டு பிடித்தவர் யார்? - வொ. பிச்சாண்டி, ஓமலூர்.

ரைஸ் கெல்லாக் என்ற அமெரிக்க அறிவியலார்தான் முதன் முதலாக ஒலி பெருக்கியைக் கண்டு பிடித்தார். கண்டு பிடித்த ஆண்டு 1924.

• பூமியின் வயதைக் கடல் நீரில் கலந்துள்ள உப்புத் தன்மையைக் கொண்டு கணக்கிடலாம் என்பதை அறிந்து சொன்ன விஞ்ஞானியின் பெயர் என்ன? - வெ. மாதேஸ்வரன், தருமபுரி.

எட்மண்ட் ஹாலி (Edmunt Halley) என்ற அறிவியல் அறிஞர்தான் பூமியின் வயதைக் கண்டு பிடிக்க, கடல் நீரின் உப்புத் தன்மையைக் கொண்டு கணக்கிடலாம் என்று கூறினார்.

• அமெரிக்காவில் உள்ள சுதந்தர தேவியின் சிலை அமைந்துள்ள தீவின் பெயர் பெட்லாஸ் ஐலண்ட் (Bedloes Island) என்றிருக்கிறது ஒரு புத்தகத்தில். இன்னொன்றில் லிபர்டி ஐலண்ட் என்றிருக்கிறது. இதில் எது சரி? - மு. வசந்தா, தேனி.

இரண்டுமே சரிதான்! இந்தத் தீவின் பழைய பெயர்தான் பெட்லாஸ் ஐலண்ட். இது ஒரு டச்சுக்காரருக்குச் சொந்தமானது. அமெரிக்க அரசாங்கம் இதன் பெயரை 1956 ஆம் ஆண்டில் லிபர்டி ஐலண்ட் என்று மாற்றியது.

• இன்று நாம் உண்ணும் கோதுமை

# சொல்லப்படும்!




**மாவு சப்பாத்தியை முதலில் கண்டு பிடித்தவர்கள் அரேபியர்கள்தானே? - மு. பாசுமணி, பாளையம்கோட்டை.**

முதலில் கண்டு பிடித்தவர்கள் யார் என்று இப்பொழுது கூறுவது இயலாது. ஆனால், சப்பாத்தி நமது நாட்டுக்குப் புதியது அல்ல. ரிக் வேத காலத்தில் (கி.மு. 300) இருந்தே இது இந்தியர்களால் சாப்பிடப்பட்டு வந்திருக்கிறது. இதைப் பற்றிய குறிப்புகள் ரிக் வேதத்தில் உள்ளன. ரிக் வேதத்தில் இதன் பெயர் "ஆ ஆபூப்" என்பதாகும். எகிப்தியர்களின் முக்கிய உணவாகவும் கூட சப்பாத்தி இருந்திருக்கிறது. 3500 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தியர்களால் தயாரிக்கப்பட்ட சப்பாத்திகள் நியூயார்க் அருங்காட்சியக த்தில் உள்ளன. எகிப்திய மக்களுக்கு, அரசர்கள் சப்பாத்திகளையே சம்பளமாகத் தந்துள்ளனர்!

• **கடிகாரங்களில் ஜுவல் (Jewel) என்று குறிப்பிட்டுகிறார்களே, இவை உண்மையாகவே வைரம்தானா? இவைகளை எதற்காகக் கடிகாரங்களில் வைக்கிறார்கள்? சு, பலராமன், ராணிப் பேட்டை.**

இவை வைரம் (Jewel) என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் உண்மையில் இவை ரூபி அல்லது சபையர்தான். கைக் கடிகாரங்களில் இடைவிடாமல் இயங்கும் சுமார் 150 நுண்ணிய பாகங்கள் இருக்கிறன்றனன. இவை வெகுவிரைவில் தேயும். இதன் காரணமகக் கைக்கடிகாரங்கள் அடிக்கடி பழுதுபடும். இதைத் தடுக்கவே, தேயும் முனைகளில் இவை பொருத்தப்படுகின்றன. இந்த Jewel ஐ நகைகளில் பதித்துக் கொள்ள முடியாது.

• **பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ் என்பது எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது? இது வெள்ளைக் களிமண் (பீங்கான்) போன்றதுதானா? - கு. விருத்தகிரி, விருத்தாசலம் - 2.**

இதற்கும் பீங்கானுக்கும் சம்பந்தம் இல்லை. ஜிப்சம் (Gypsum) என்ற ஒரு கனிமப் பொருளில் இருந்து பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ் தயாரிக்கப்படகிறது.

• **சமையல் காஸ், உற்பத்தியாகும் போதே இப்படித்தான் குடலைப் புரட்டும்படி நாற்றம் அடிக்குமா? - அ. சுக்கூர் பாஷா, வாணியம்பாடி.**

இல்லை. சமையல் காஸைப் பயன் படுத்துவோர், காஸ் கசிவு இல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம். கசிவு ஏதேனும் இருந்தால் அதை உடனடியாக உணர வேண்டும் என்பதற்காகவே சமையல் காஸோடு 'மெர்காப்டன்ஸ்' என்ற பயங்கரமான நாற்றம் வீசும் பொருளைக் கலந்து சிலிண்டரில் அடைக்கிறார்கள். கசிவு இருந்தால், அது நாற்றம் எடுத்து நம்மை எச்சரிக்கிறது.

**சேரநம்பி**


HAVE YOU EVER VISITED A ZOO?
GOKULAM
The monthly magazine for children
AUGUST '94 ISSUE!
BUY YOURSELF A COPY TODAY!
96 pages for just Rs. 3/-
GOKULAM, EKKADUTHANGAL, MADRAS - 97.

# பவளவல்லி

**சின்னபாபு**

மன்னன் மேகவர்மனின் முகத்தில் கலக்கம் நிறைந்தது. அவர் வேட்டை யாட வந்திருந்தார். காட்டுக்குள் நீண்ட தூரம் வந்து வழியைத் தவற விட்டிருந்தார். பரிவாரங்கள் பிரிந்து விட்டன. திடீரென்று காட்டுத் தீ பற்றிக் கொண்டு சூழ்ந்து கொள்ளவே மன்னர் கலங்கிப் போனார். இந்தப் பேராபத்தில் இருந்து தன்னைக் காக்க வேண்டும் என்று தனது குல தெய்வத்தை மனமுருக வேண்டிக் கொண்டார்.

'தொப்'பென்று ஏதோ சப்தம் கேட்டது. மன்னருக்கு முன்னால் தரையில் மிகப் பெரிய உள்ளங்கை ஒன்று விரிந்து இருந்தது.



இரண்டு யானைகள் நிற்கக்கூடிய அளவுக்கு அது பெரிதாக இருந்தது! மன்னர் திகைத்துப் போனார்.

"பயப்பட வேண்டாம் மன்னவா. நான் வேண்டுமென்றுதான் என்னுடைய முழு உருவத்தையும் காட்டாது மறைத்துக் கொண்டிருக்கிறேன். பார்த்தால் நீங்கள் பயப்படுவீர்கள். தோற்றத்தில்தான் நான் அரக்கனே தவிர நானும் மனிதப் பிறவி தான். கையில் ஏறிக் கொள்ளுங்கள். தீ, நம்மைச் சுற்றி நெருங்கிக் கொண்டிருக்கிறது" என்று ஒரு முரட்டுக் குரல் கேட்டுக் கொண்டது.

இனியும் தயங்குவது புத்திசாலித் தனம் அல்ல என்று முடிவு செய்த மன்னர், அந்த பிரும்மாண்டமான உள்ளங் கையில் ஏறி அமர்ந்து கொண்டார். கை உயர்ந்தது. காடு மலைகளையெல்லாம் கடந்து மன்னரின் கோட்டைக்கு அருகே பத்திரமாகத் தரை இறக்கியது. மன்னர் இறங்கிக் கொண்டார்.

"நல்ல மனமுடைய நீதி தவறாத

மன்னர் ஒருவரைக் காக்க எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்'' என்று விடைபெற முயன்றது முரட்டுக் குரல்.

"நில்லுங்கள். உங்கள் உருவம் எனக்குத் தெரியவில்லை. என் உயிரைக் காத்த உத்தமனுக்கு நான் என் நன்றியைக் காட்ட வேண்டாமா? உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்கள்?" என்றார் மன்னர்.

உருவம் சிரித்தது.

"நான் அரக்க உருவம் படைத்தவன். அதனால் நான் கேட்பதை யாராலும் தர முடியாது. நீங்கள் சென்று வாருங்கள்."

"போகாதீர்கள். நீங்கள் கேட்பது எதுவாக இருந்தாலும் என்னால் தர முடியும். கேளுங்கள். நீங்கள் எதைக் கேட்டாலும் நான் தருகிறேன். இது உறுதி."

"என்னைக் கட்டாயப்படுத்துவதால் கூறுகிறேன். உங்களுக்கு மூன்று பெண்கள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களில் யாராவது ஒருத்தி என்னைத் திருமணம் செய்ய மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ள வேண்டும். அவள் சம்மதித்ததும் அவளுடைய இரண்டு காதுகளும் மறைந்து விடும். காது கேட்காது. அவளை இங்கே இந்த வேல மரத்தடியில் கொண்டு வந்து விட்டு விட வேண்டும். பிறகு நான் அழைத்துச் சென்று விடுவேன். முடியுமா உங்களால்?"

மன்னர் திகைத்துப் போய் நின்றார்.

"கலங்க வேண்டாம் மன்னா, இப்படிச் செய்ய யாருமே முன் வர மாட்டார்கள் என்பது உறுதி. அதனால்தான் ஆரம்பத்திலேயே கேட்க மறுத்தேன். ஆனால் ஒன்று மட்டும் உறுதி. என்னை மணந்து கொள்ளும் தியாக மனம் கொண்ட பெண்ணை, நான் தின்று விட மாட்டேன். அரக்க உருவம் படைத்தவன் என்றாலும் நானும் மனிதனே'' என்றது குரல்.

**ம**ன்னர் கவலையுடன் அரண்மனைக்குத் திரும்பினார். மன்னரைக் கண்டதும் எல்லோருக்கும் அளவிலாத மகிழ்ச்சி. மன்னரின் முகத்தில் பழைய மகிழ்ச்சி இல்லாததை மூன்று அரசகுமாரிகளும் கவனித்து விட்டனர். காரணம் கேட்டனர். மன்னர் தயங்கித் தயங்கி நடந்தவற்றைக் கூறினார்.

''உங்களைக் காப்பாற்றியவர் என்பதற்காக, நான் என்னுடைய காதுகளை இழக்கவோ, அந்த அரக்க உருவை மணக்கவோ தயாராக இல்லை. என் காதுக்கு வைர ஜிமிக்கி எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது என்று எல்லோரும் புகழ்கிறார்கள் தெரியுமா? அப்படிப்பட்ட என் காதுகளையா நான் இழப்பேன். முடியவே முடியாது" என்று எழுந்து உள்ளே ஓடி விட்டாள் மூத்த பெண்.

"எங்களைக் கேட்காது நீங்கள் ஒப்புக் கொண்டிருக்கக் கூடாது. ஊரெல்லாம் என்னைச் செவி இல்லாத சுந்தரி என்று கேலி பேசுவார்கள். காது இல்லையென்றால் பாடலையும் இசையையும் கேட்டு அனுபவிக்க முடியுமா? நான் அந்த உருவத்தை மணக்க விரும்ப





வில்லை" என்று கூறி உள்ளே சென்று விட்டாள் இரண்டாவது பெண்.

மன்னர் தயக்கத்துடன் கடைசிப் பெண்ணைப் பார்த்தார்.

"அப்பா, நீங்கள் நீதி நெறி தவறாது, குடிமக்களை ஒரு தந்தைக்குரிய அன்புடனும் அக்கறையுடனும் பாதுகாத்து ஆட்சி புரிந்து வருகிறீர்கள். நீங்கள் மட்டும் காட்டுத் தீக்கு இரையாகி இருந்தால், இந்த நாட்டு மக்களுக்கு உங்களைப் போன்ற ஒரு நீதிமான் கிடைப்பாரா என்பது சந்தேகமே. அதோடு, நான் உங்கள் அன்பு மகள். தாயில்லாத எங்களை மறுமணம் கூடப் புரிந்து கொள்ளாது அன்பைக் கொட்டி வளர்த்திருக்கிறீர்களே? இதற்காகவாவது நான் எனது நன்றிக் கடனைக் கழிக்க வேண்டாமா? உங்கள் உயிரைக் காத்த அந்த உத்தமரை மணக்கவும், எனது காதுகளை இழக்கவும் நான் தயாராக இருக்கிறேன். உடனே புறப் படுங்கள்" என்றாள் கடைசிப் பெண் பவளவல்லி.

கண்ணீர் விட்டபடி பவளவல்லியை அழைத்துக் கொண்டு கோட்டைக்கு வெளியே இருந்த வேல மரத்தடிக்கு வந்தார் மன்னர்.

"பவளவல்லி, உன் தந்தையின் வாக்கைக் காக்க வேண்டுமே என்பதற்காக உன் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ளாதே. பார்த்து மகிழக்கூடிய உருவம் இல்லை என்னுடையது. நன்றாக மீண்டும் யோசனை செய்" என்றது குரல்.

"அப்பாவாகக் கேட்ட பிறகுதானே நீங்கள் இதைக் கேட்டீர்கள்? ஆபத்தில் சிக்கிய மனிதரைக் காக்க வேண்டும் என்று விரைந்து வந்த தாங்கள், கண்டிப்பாக சிறந்த குணம் படைத்த இளைஞராகத்தான் இருக்க முடியும். என் தந்தையைக் காத்த நீங்கள், உங்கள் மனைவியாகப் போகும் என்னைப் பாதுகாப்பீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது" என்றாள் பவளவல்லி.

திருமணமான அடுத்த நொடியே பவளவல்லியின் இரு காதுகளும் மறைந்தன. அவளைக் கையில் தாங்கிக் கொண்டு கணவன் கிளம்பினான். இருவரும் ஒரு புதிய நகரத்திற்கு வந்தனர். அங்கே மரம் செடி கொடிகள், மனிதர்கள், விலங்குகள் எல்லாமே கல்லாகிக் கிடந்தன.

"இதென்ன அதிசயமாக இருக்கிறது!" என்று திகைப்புடன் கேட்டாள் பவளவல்லி.

பவளவல்லிக்குக் கேட்காது என்பதால் கணவன் பதிலை எழுதிக் காட்டி

## குழந்தைக் கவிஞர் விருது!

பெரியவர்களுக்காக எத்தனையோ இலக்கியப் பரிசுகள் ஆண்டுதோறும் பெரிய பெரிய நிறுவனங்களால் வழங்கப் படுகின்றன. ஆனால் சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களுக்கு இத்தகைய பரிசுகள் ஒன்றிரண்டுதான் வழங்கப்படுகின்றன.



இவற்றுள் குறிப்பிடத்தக்கது இந்தியன் வங்கி வழங்கும் குழந்தைக் கவிஞர் விருது (ரூ. 5000/-) குறிப்பிட்ட ஒரு நூலுக்காக என்று கொள்ளாது, சிறுவர் இலக்கியத் திற்கு ஆற்றியுள்ள தொண்டின் அடிப் படையில் இது வழங்கப்படுகிறது. இது வழங்கப்பட வேண்டும் என்பதற்காக விடாது முயன்ற குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் திரு. நெ. சி. தெய்வ சிகாமணியை எத்தனை பாராட்டினாலும் தகும். இந்த ஆண்டு இந்த விருது டாக்டர் பூவண்ணன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கோகு லம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான இவர், சிறுவர் இலக்கியத்தின் படைப்புப் பிரிவுக்கு மட்டும் இன்றி சிறுவர் இலக்கி யத்தின் படைப்பு இயல் பிரிவுக்கும் பெருந்தொண்டாற்றியிருக்கிறார் என்பதை எண்ணும்போது விருது மேலும் சிறப்படை கிறது. பரிசு பெற்ற ஆசிரியரைப் பாராட்டுவ தோடு, பரிசு வழங்கி சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களையும் ஊக்குவிக்கும் இந்தியன் வங்கியையும் குறிப்பாக இதன் தலைவர் உயர்திரு கோபாலகிருஷ்ணன் அவர்களையும் பாராட்டுகிறோம்.

னான்.

"இது பெருமைமிக்க காந்த நகரம். மன்னர் உங்க அப்பாவைப் போலவே நல்லவர். காந்த மலையில் ஒரு மந்திர வாதி. அவனுக்குப் பார்வை கிடையாது. முரட்டு குணமுடைய அவனுடைய மகன், மற்றவர்கள் எத்தனை தடுத்தும் கேளாது முதலைகள் நிறைந்த ஆற்றில் இறங்கிக் குளித்து பலியானான். கோபம் கொண்ட மந்திராவதி இளவரசனை சபித்தான். அத்துடன் தன்னிடம் இருந்த மந்திர மகுடியை வாசித்தான். அதன் அற்புதமான இனிய இசையைக் கேட்ட வர்கள் அனைவருமே உடனே கல்லாக மாறினர். இரவும் பகலும் அந்த மகுடியை அவன் வாசித்தபடி இருக்கிறான். இந்த வழியாகப் போகும் உயிரினங்கள் எல் லாமே அதைக் கேட்டதும் கல்லாகி விடும். நீ அந்த மகுடியை உடைத்து விட்டால் இவர்களுக்குப் பழைய உருவம் கிடைத்து விடும். ஆனால், இசையைக் கேட்காது. மந்திரவாதியை யாராலும் நெருங்கக் கூட முடியாதே?"

"ஏன் முடியாது? எனக்குத்தான் கேட் கும் சக்தி மறைந்து விட்டதே? மந்திர வாதிக்கோ பார்வையும் இல்லை. என் னால்தான் இந்த நல்ல காரியம் முடி யும்."

பவளவல்லி காந்த மலையை நோக்கி விரைந்தாள். மந்திரவாதியின் மகுடி இசை அவளுக்குக் கேட்கவில்லை. அத னால் எந்த பாதிப்பும் இன்றி அவள் அவன் அருகே சென்று மகுடியைப் பிடுங்கித் தரையில் அடித்தாள். மகுடி சுக்கல் சுக்கலாகச் சிதறியது. கல்லாகிக் கிடந்தவர்கள் அனைவரும் உயிரோடு எழுந்தனர். பவளவல்லிக்குக் கூட காது கள் வந்து விட்டன!

"பவளவல்லி" என்று அழைத்தபடி ஒரு அழகான அரசகுமாரன் அவளருகே வந்தான்.

பவளவல்லி புரியாமல் விழித்தாள்.

"இன்னுமா என்னைத் தெரிய வில்லை! மந்திரவாதியின் சாபத்திற்கு இலக்கான அரசகுமாரன் நான்தான். உன்னுடைய தியாகத்தால்தான் இந்த நாட்டு மக்களும், நானும் சுய உருவம் பெற்றோம்" என்றான் அரச குமாரன்.

தியாகத்திற்கு முன் எந்த ஈனச் செய லும் நிலைக்காது!



# பல்லி பெரிசா? யானை பெரிசா?

சுகுமாரன்

சோபியாவுக்கு பல்லி என்றால் ரொம்பப் பயம். அறைக்குள் பல்லி இருந்தால் போதும். "ஊய்...ய்" என்று ஓரேயடியாக அலறுவாள்! ஓடிப் போவாள். அப்பாவைக் கூப்பிடுவாள். அம்மாவை அழைப்பாள். "அக்கா வாயேன்" என்று அக்காவை வரச் சொல்லுவாள். அவர்கள் யாராவது வந்து பல்லியை விரட்டி விட்ட பிறகுதான் உள்ளே நுழைவாள்.

சோபியாவின் பல்லி பயம் எல்லோருக்கும் பெரிய தொல்லையாக இருந்தது. நேரம் கெட்ட நேரத்தில் எல்லாம் அலறுவாள். அவள் அலறும் போதெல்லாம் உடனே யாராவது போக முடியுமா? சோபியா பாத்ரூம் போவதாக இருந்தால் முதலில் யாராவது பாத்ரூமுக்குள் போய் பல்லி இருக்கிறதா என்று சோதனை செய்ய வேண்டும். "பல்லியே இல்லை" என்று உறுதியாகச் சொன்ன பிறகுதான் அவள் பாத்ரூமுக்குள் போவாள்.

இப்படிப் பல்லி பார்க்கும் வேலை பெரும்பாலும் அக்காவின் தலையில் தான் விழும். பாதி படித்துக் கொண்டிருக்கும் போது எழுந்து வந்து பல்லியை விரட்டுவது எத்தனை கஷ்டம்? அதனால் அக்கா மிகவும் எரிச்சலடைந்தாள். தன்னைத் தொந்தரவு செய்யாதிருக்கவாவது சோபியாவுக்கு இருந்த பல்லி பயத்தைப் போக்குவது அவசியம் என்று அக்கா நினைத்தாள்.

"ஓர் சாணளவு கூட இல்லாத பல்லியைப் பார்த்து இப்படி பயப்படறியே? 'சூ' என்று சப்தம் போட்டால், இல்லே சுவற்றில் தட்டினால் கூட அது ஓடி விடுமே? எதுக்காக இப்படிக் கத்தி அமர்க்களம் பண்ணி எல்லோரையும் கலவரப்படுத் தறே?" என்று தங்கையைத் தேற்ற முயன்றாள் அக்கா.

"பல்லியின் உடம்பைப் பார்த்தாலே பயமா இருக்கே அக்கா?" என்றாள் சோபியா.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே. உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்ற மகாகவி பாரதியின் பாட்டைப் பாடு. பயம் தானாகப் போய் விடும்" என்றாள் அக்கா.

"வானிடிந்து விழுந்தால் கூடத் தாங்கிக்கலாம் அக்கா. ஆனா, பல்லி மேலே விழுந்தாலே எனக்கு உயிர் போயிடுமே?" என்று கேட்டாள் சோபியா



பரிதாபமாக.

எப்படியாவது தங்கைக்குப் பல்லியைப் பற்றி இருக்கும் பயத்தை உடனடியாகப் போக்கியே ஆக வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள் அக்கா.

சோபியாவுக்கு பல்லி மீது பயம் ஏற்பட்டதற்கு ஒரு வகையில் அக்காதான் காரணம். ஒருமுறை தங்கையைப் பயமுறுத்த பிளாஸ்டிக் பல்லி ஒன்றை மடக்கிச் சுருட்டி சோபியாவின் பென்சில் பெட்டிக்குள் போட்டு வைத்தாள். டப்பாவைத் திறந்ததும், பொம்மைப் பல்லி குதித்தது. அவ்வளவுதான். சோபியா அலறி விட்டாள். அவளுக்கு ஜுரமே வந்து விட்டது. அன்றைக்குப் பிடித்த பயம்தான். அதனால், தங்கையின் பயத்தைப் போக்க, தான்தான் உடனடியாக முயல வேண்டும் என்று அக்கா நினைத்தாள். அதற்கான வாய்ப்பும் வந்தது.

பெரிய கோயிலில் திருவிழா வந்தது. விழாவிற்காக யானை வந்திருந்தது. யானையைப் பார்க்கக் குழந்தைகள் கூட்டம் நெருக்கியடித்தது. யானை குழந்தைகளிடமிருந்து பழம், தேங்காய், காசு வாங்கிக் கொண்டது. பதிலுக்கு துதிக்கையைத் தலையில் வைத்து ஆசீர்வாதம் செய்தது. சில குழந்தைகள் யானை மேல் அமர்ந்தனர்.

அக்காவும் சோபியாவும் பெற்றோருடன் கோயிலுக்கு வந்திருந்தனர். சோபியாவுக்கு அன்று பிறந்த நாள். அம்மா சோபியாவை யானையிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொள்ளச் சொன்னாள். யானை துதிக்கையால் சோபியாவின் தலையைத் தொட்டது. முதலில் சோபியாவுக்கு பயமாக இருந்தது. அம்மாவிடம் காசு வாங்கி யானையிடம் கொடுத்த போது அந்தப் பயம் கூடப் போய் விட்டது. மற்ற குழந்தைகள் போல் அவளுக்கும் யானை மீது சவாரி செய்யும் ஆசை ஏற்பட்டது.

அப்பா உற்சாகப்படுத்தினார். யானை மண்டியிட சோபியா யானை மீது ஏறி அமர்ந்தாள். யானை நடந்த போது ஊஞ்சலில் ஆடுவது போலிருந்தது.

வீட்டிற்குத் திரும்பும் போது,

சோபியா அக்காவிடம் யானை மீது சவாரி செய்ததைப் பெருமையாகக் கூறினாள்.

"இத்துனூண்டு பல்லிக்குப் பயப் படுகிற உன்னால், எப்படி யானை மீது சவாரி செய்ய முடிந்தது!" என்று அக்கா வியப்புடன் கேட்டாள்.

சோபியா யோசித்தாள். அவளுக்கும் அது அதிசயமாகத்தான் தோன்றியது.

"என்ன சோபி, பல்லி பெரிசா? யானை பெரிசா?" என்று அக்கா மறுபடி கேட்டாள்.

"யானை" என்றாள் சோபியா.

"பெரிய யானை மீதே பயப்படாமல் ஏறி விட்ட நீ, இனிமேல் பல்லிக்குப் பயப்படவே கூடாது" என்றாள் அக்கா.

சோபியாவுக்கு வியப்பாக இருந்தது. அக்கா, எத்தனை பெரிய ஓர் அதிசயத் தைக் கூறுகிறாள். இத்துனூண்டு பல்லி என்றாலே பயந்து அலறும் அவள், அத்தனை பெரிய யானையின் மேல் எப்படிப் பயமே சிறிதும் இல்லாமல் உட்கார்ந்து சவாரி செய்தாள்! எனவே, பயம் என்பது நாமாக ஏற்படுத்திக் கொள்ளும் உணர்ச்சிதான். அதற்கு நாம் இனி இடம் தரக் கூடாது என்று முடிவு செய்து கொண்டாள்.

"இனிமே நான் பல்லிக்குப் பயப் படவே மாட்டேன் அக்கா" என்றாள் சோபியா.

அன்றிரவு பாத்ரூம் போகும் போது சோபியா யாரையும் கூப்பிடவில்லை. இத்தனைக்கும் பாத்ரூம் சுவரில் ஒரு பல்லி வேறு இருந்தது. "யானை மேலேயே சவாரி பண்ணினவளுக்கு இந்தப் பல்லி எந்த மூலைக்கு!" என்று மனதிற்குள் சொல்லி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, 'சூ' என்று சுவற்றில் தட்டி அதை விரட்டினாள். அது பயந்து ஓடுவதைப் பார்த்து கை தட்டினாள் சோபியா.

## குற்றாலம்


குற்றால மலைக்கு வாருங்க
குளுகுளு அருவியில் குளியுங்க
எத்தனை குளித்தும் அலுக்காத
இன்பத்தை இங்கே காணுங்க!

உச்சி மலையினில் மேகங்கள்
ஒன்றாய்க் கூடி இடிஇடிக்கும்
அஞ்சம் இன்றிப் பறவைகள்
அழகு வட்டம் போட்டுவரும்!

சாரல் மழையின் தூரல்இழை
சாலம் புரிந்து இறங்கிடவே
தூறல் தெளிக்க மந்திகளும்
துள்ளிக் குதித்து ஓடிடுமே!

கொட்டும் அருவியில் நின்றாலே
கொள்ளும் மகிழ்ச்சி தனி தாங்க
பாடி ஆடிடத் தோன்றிடுங்க
பறந்து மகிழ்ந்திடத் தோன்றிடுங்க.

-கு.காளிமுத்து



# எங்கள் ஊரில் நடந்தது

## நீளமான கயிறு

நானும் நண்பனும் கடைக்குப் போயிருந்தோம். லிஸ்டைக் கொடுத்து சாமான் கட்டச் சொன்னோம். ஒருவர் படுவேகமாக ஓடி வந்து, "தம்பி தம்பி கொஞ்சம் அவசரம்" என்றார். நாங்க விலகிக் கொண்டு "வாங்கிக்கிங்க" என்றோம்.

"கயறு நீளமாக வேணுங்க" என்றார் வந்தவர் கடைக்காரரிடம்.

"இதுக்கு என்னங்க இந்தனை அவசரம்?" என்று கேட்டார் கடைக்காரர்.

"ஐயோ, பஸ் கிளம்பிடுங்க" என்றார் அவர் பதறிக் கொண்டே.

"ஐயோ. என் கடையில் அந்தனை நீளமான பலமான கயிறு இல்லீங்களே!" என்றார் கடைக்காரர்.

எல்லோரும் சிரித்தோம், கயறு கேட்டவர் உட்பட!

- சி. பெருமாள், கொண்டரசம்பாளையம்.




## நிறுத்தாதே!

குடும்பத்தோடு மேட்டூர் அணை போயிருந்தோம். அழகான பூங்கா. "இங்கே மிதிவண்டியை நிறுத்தாதீர்!" என்று எழுதப்பட்ட ஒரு போர்டு. ஒரு சிறுவன் சைக்கிளில் வந்து இறங்கினான். போர்டைப் பார்த்தான். முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. சிறிது யோசித்தான். சைக்கிளை உள்ளே கொண்டு வந்து புல்தரையில் படுக்க வைத்து விட்டுச் சென்று விட்டான்.

'தம்பி, போர்டைப் பார்க்கவில்லை? படித்த பிள்ளைதானே?" என்று காவலாளி கடுமையாகக் கேட்டார்.

"படிச்சேங்க. சைக்கிளை நிறுத்தாதீர்னு தானே போட்டிருக்கீங்க? நான் நிறுத்தலையே? படுக்கத்தானே வைச்சிருக்கேன்?" என்றான் சிறுவன் அமைதியாக.

நாங்கள் மட்டுமில்லை. காவலாளியும் கோபத்தை மறந்து சிரித்தார்.

- சி. கிருஷ்ணன், சித்தம்பூண்டி.

## பெட்டிக் கடை

எங்கள் ஊரில் சமூகநலத் தொண்டர் ஒருவருக்குப் பாராட்டு விழா நடந்தது. விழாவில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளும் கலந்து கொண்டார். உள்ளூர் பிரபலங்களும் கலந்து கொண்டனர். அப்படிக் கலந்து கொண்டவர்களுள் ஒருவர், தான் பேசுகையில் வாரியார் சுவாமிகள் அதிக நேரம் பேச வேண்டும் என்பதற்காகத் தனது பேச்சைக் குறைத்துக் கொள்வதாகக் கூறினார். வாரியார் குறுக்கிட்டு, "அப்படிக் குறைக்காதீர்கள். உங்கள் நகைச்சுவையை அள்ளி வீசுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். அதற்கு அந்த அன்பர் "பெரிய கடைக்குப் பக்கத்தில் பெட்டிக் கடை திறக்கக் கூடாது" என்று அவை அடக்கமாகக் கூறினார். வாரியார் தான் பேசும் போது "கற்கண்டு என்பது எங்கு விற்றாலும் இனிக்கவே செய்யும். பெரிய கடையில் விற்றால்தான் இனிக்கும். பெட்டிக் கடையில் விற்றால் கசக்கும் என்பது இல்லை" என்று கூறினார். எல்லோருக்கும் மகிழ்ச்சி. சிரித்தனர்.

- எஸ். தட்சிணாமூர்த்தி, நாகலூர்.

## ஓட்டைப் பாட்டில்

எங்க அக்கா மகன் படுசுட்டி. நன்றாக 'வெடுக் வெடுக்'கென்று பேசுவான். ஒரு சமயம் என் பெரியப்பா அவனிடம், "நீ






பால பாடசாலைக் (மான்டிசரி பள்ளி)க்குப் போகும் போது உனக்கு பை, புக்ஸ், வாட்டர் பாட்டில் எல்லாம் வாங்கித் தரேன்" என்றார். அவனுக்கு வாட்டர் பாட்டில் என்பது ஓட்டை பாட்டில் என்று காதில் பட்டு விட்டது. "எனக்கு ஓட்ட பாட்டில் வேண்டாம். தண்ணீர் எல்லாம் ஒழுகிடும். நல்ல பாட்டில்தான் வேண்டும்" என்று கூறினான். எங்களுக்கெல்லாம் சிரிப்பான சிரிப்பு.

- பர்ஸானா முகமது, நீர்கொழும்பு.
(இந்தியாவில் உறவினர் அல்லது நண்பர் முகவரி தரப்படவில்லை)

## நீலச் சட்டை போட்டவன்!

கோடை விடுமுறைக்கு பாட்டி வீட்டுக்குப் போவோம். சித்தி பையன்கள், பெரியம்மா பிள்ளைகள் எல்லோரும் வருவாங்க. ரொம்ப வேடிக்கையாகவும், ஒரே கலகலப்பாகவும் இருக்கும். சித்தி பையன்கள் ராமுவும், லட்சுமணனும் இரட்டைகள். வித்தியாசம் கண்டுபிடிப்பது பழகியவர்களுக்குக் கூட கஷ்டம்தான். மாடியில் எல்லோரும் செஸ், கேரம் ஆடிக் கொண்டிருந்தோம். லட்சுமணன் மட்டும் தண்ணி குடிக்கக் கீழே வந்தான். பக்கத்து பிளாட் பாட்டி அதிரசம் பண்ணிக் கொண்டிருந்தாள். இவனைப் பார்த்ததும் ஒரு அதிரசத்தைத் தந்தாள். அவன் தின்று விட்டு மாடிக்குப் போனான். சிறிது நேரத்தில் ராம் வந்து, "பாட்டி எனக்கு அதிரசம்" என்று ஒன்று கேட்டு வாங்கிக் கொண்டு போனான். சிறிது நேரம் கழித்து மறுபடி ராம் வந்து கேட்டிருக்கிறான். "என்னடா இது! இப்பத்தானே நீலசட்டை

போட்டவனுக்குத் தந்தேன்?" என்று பாட்டி மறுத்து விட்டாள். எங்களுக்கு ஏதோ சந்தேகம் வந்து விசாரித்தோம். முதலில் அதிரசம் வாங்கிக் கொண்டு போன லட்சுமணன், மேலே வந்து ராம் போட்டிருந்த நீலச் சட்டையை வாங்கிப் போட்டுக் கொண்டு போய், சட்டையைத் திருப்பிக் கழற்றித் தந்து விட்டிருக்கிறான். பாவம் ராம். சட்டையைப் போட்டுக் கொண்டு வந்து பாட்டியிடம் கேட்டிருக்கிறான். பாட்டி எப்படிக் கொடுப்பாள்? லட்சுமணனின் போக்கிரித்தனத்தைக் கண்டுபிடித்து எல்லோரும் கவனமாக இருந்தோம்.

- ஸ்ரீநிவாஸ் பிரபு, சென்னை - 90.

## வங்க மொழிப் பாடல்

பாட்டு வகுப்பு நடந்து கொண்டிருந்தது. பாட்டு ஆசிரியை "யாருக்காவது தமிழைத் தவிர வேறு மொழிப் பாடல் ஏதாவது தெரியுமா?" என்று கேட்டார். நாங்களெல்லாம் பேசாமல் இருந்தோம். சத்தியமூர்த்தி என்ற துடுக்கு மாணவன் எழுந்து, "எனக்கு வங்க மொழிப் பாடல் தெரியும்" என்றான். எங்களுக்கெல்லாம் திகைப்பு. ஆசிரியைக்கும் வியப்பு. "எங்கே பாடு" என்று கேட்டார். உடனே சத்தியமூர்த்தி எழுந்து "ஜன கண மன" பாடலைப் பாடினான்!

- ப. கணேஷ், சென்னை - 19.

## ஆம்மாம் டாக்டர்

என் தங்கைக்கு உடம்பு சரியில்லை. டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போனோம்.




அவள் எங்கே அழுது விடுவாளோ என்ற சந்தேகத்தில் டாக்டர் அவளிடம் பேச்சுக் கொடுத்தார்.

"பரீட்சை எழுதிட்டயாம்மா?"

"ஆமாம் டாக்டர்" என்றாள் தங்கை.

"நன்றாகப் பார்த்து எழுதினியா?"

"ஆமாம் டாக்டர்"

"யாரைப் பார்த்தும்மா எழுதினே?"

தங்கை அப்பொழுதுதான் தன் பதிலால் சிக்கிக் கொண்டதை உணர்ந்து பதில் கூறத் தெரியாது தவித்தாள்.

எல்லோருக்கும் சிரிப்புதான்!

- ஜெ. அலெக்சாண்டர், பெருந்துறை.

## மெழுகுவர்த்தி

இரவு நேரம், திடீரென்று மின்சாரம் போய் விட்டது. ஒரே இருட்டு. மெழுகுவர்த்தியை எளிதில் கண்டுபிடிக்க முடியவில்லை. "ஆறு இருக்கும் புது பாக்கெட்டை, இரண்டு நாள் முன்னால்தான் வாங்கிக் கொண்டு வந்தேன்" என்றார் அப்பா. நான் சலிக்காமல் தேடினேன். கிடைத்து விட்டது. பிரித்தேன். ஏற்ற தீப் பெட்டியைக் காணோம்! மறுபடி தேடல்தான். இதற்குள் மின்சாரம் வந்து விட்டது. வெளிச்சத்தில் பார்த்தால் என் கையில் இருந்தது மெழுகுவர்த்தி அல்ல! லட்சுமி வெடி! தீப்பெட்டி மட்டும் கிடைத்து நானும் அதைக் கொளுத்தியிருந்தால் என்ன ஆகியிருக்கும்?

- இ. ரமேஷ்குமார், சென்னை - 63.

## ரயிலுக்கு தாகம்!

குடும்பத்துடன் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தோம். எதிர் சீட்டில் ஒரு துடுக்குச் சிறுவன், பெற்றோருடன் பயணம் செய்து கொண்டிருந்தான். இயற்கைக் காட்சிகளை ரசித்தபடி, வியந்தபடி அவன் விடாமல் கேள்வி கேட்டபடி இருந்தான். நானும் சளைக்காது பதில் கூறியபடி வந்தேன். நல்ல வெயில் நேரம். சிறுவன் அயர்ந்து தூங்கி விட்டான். அவன் மறுபடி கண் விழித்த போது ரயில் ஏதோ ஒரு ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்தது. "ஏன் ரயில் நிக்குது?" என்று கேட்டான்.

"ரயில் தண்ணி குடிக்குது" என்றேன் குறும்பாக.

சிறிது யோசித்த சிறுவன் "பாவம், எத்தனை நேரமா இந்த ரயில் ஓடிக்கிட்டே இருக்கு? கண்டிப்பா தண்ணி தாகம் எடுக்கத்தான் செய்யும். நல்லா குடிக்கட்டும்" என்றான்.

எல்லோரும் சிரித்தோம்.

- எஸ். நாகராஜன், மேலப்பாதி.

## சாமி என்னைப் பார்ப்பாரே?

குடும்பத்துடன் கோவிலுக்குப் போயிருந்தோம். கூட்டமான கூட்டம். திருப்பதி என்றால் கூட்டத்திற்கா பஞ்சம்? கால் வலிக்கக் க்யூவில் நின்று காத்திருந்து ஒரு வழியாக உள்ளே போனோம். எங்களுக்கு முன்னால் ஒரு வயதானவர். பார்வை இல்லை. ஐந்து வயதுப் பேரனுடன் வந்திருந்தார். திடீரென்று பேரன் தாத்தாவிடம் கேட்டான், "தாத்தா உங்களுக்குத்தான் கண் தெரியாதே? ஏன் க்யூவில் நின்று அவஸ்தைப் படறீங்க? சாமியைப் பார்க்க முடியாதே?"

தாத்தா திணறிப் போனார். ஆனால் அடுத்த நொடியே, "என்னால் சாமியைப் பார்க்க முடியாதுங்கறது உண்மைதான். அதனால் என்ன? என்னால் சாமியைப் பார்க்க முடியாமல் போனாலும், சாமி என்னைப் பார்ப்பாரே? எனக்கு அது போதுமே?" என்றார். எல்லோரும் நெகிழ்ந்து போனோம்.

- வசந்தா மகாதேவன், டில்லி.




## ஆ(க்)டோபஸ்!

ஆண்டுத் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்தேன். 'ஆக்டோபஸுக்கு எட்டுக் கால்கள்'' என்று படித்தேன். உடனே என் தம்பி, "எட்டுக்கால் எப்படி? ஏழு கால் தானே?'' என்று கேட்டான். "எப்படிடா ஏழு கால்?'' என்றேன். "ஆட்டோவுக்கு மூன்று கால், பஸ்ஸுக்கு நாலு கால். மொத்தம் ஏழுதானே?'' என்றான் அவன். பிறகுதான் 'ஆக்டோபஸ்' என்று படித்ததை, அவன் தவறுதலாக 'ஆட்டோபஸ்' என்று எண்ணிக் கொண்டு விட்டான் என்பது தெரிந்தது.

எல்லோரும் சிரித்தோம். தம்பி மட்டும் விழித்தான்!

- வி. மணி, தாதம்பட்டி.

குழந்தைக் கவிஞர்

# அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி - 1994

## பரிசு ரூ. 1000/-

சிறுவர் இலக்கியம் செழிக்கத் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் நினைவாக இந்தச் சிறுவர் சிறுகதைப் போட்டியை அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவர்கள் (இவ்வாண்டு (1993) +2 எழுதுகிறவர்கள் உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம். ஆசிரியர் அல்லது பெற்றோரின் கையொப்பமிட்ட சான்று இணைக்கப்பட வேண்டும்.

2. சிறுகதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என்று எதைப் பற்றியதாக வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழியுடன் அனுப்புதல் வேண்டும். கோகுலத்தில் 3 முதல் 4 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும். தட்டச்சு செய்தும் அனுப்பலாம். ஆனால் கட்டாயம் இல்லை.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையைக் கதைகளுடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எவ்விதக் கடிதப்போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

5. இதில் கலந்து கொள்ளக் கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக உறுதிமொழி இருக்க வேண்டும்.

6. முதல் பரிசு ரூ. 300/- (ஒரு கதைக்கு) இரண்டாவது பரிசு ரூ. 200/- வீதம் இரண்டு கதைகளுக்கு, மூன்றாவது பரிசு ரூ. 100/- வீதம் மூன்று கதைகளுக்கு. ஆக மொத்தம் ரூ. 1000 பரிசாக வழங்கப்படும்.

7. தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ 50/- சன்மானம் பெறும். கதைகளை முதல் முறை வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.

8. முடிவு தேதி 30.9.94. இதற்கு மேல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட



மாட்டா. தபாலில் ஏற்படும் தாமதத்திற்கு கோகுலம் பொறுப்பேற்காது. நடுவர் குழு பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

9. அயல்நாட்டு வாசகர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தர வேண்டும்.

10. கதைகளை, "ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் "அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி" என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.


11. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்சனைகளுக்கும், சந்தேகங்களுக்கும் கோகுலம் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவாகும்.

# கொம்புகள்

ஆழி



பொதுவாக, இரட்டைக் குளம்புள்ள ஆடு, மாடு, மான் முதலிய விலங்குகளின் தலையிலிருந்து முளைக்கின்ற வளர்ச்சிதான் கொம்பு எனப்படுகிறது. இவை எண்ணிக்கையில் இணையான இரண்டாகவும், சிலவற்றிற்கு முன்னும் பின்னுமான இரண்டாகவும், சிலவற்றிற்கு ஒன்றாகவும் இருப்பதுண்டு. கொம்புகள் எல்லாம் அமைப்பிலும், ரசாயனத் தன்மையிலும் பண்பிலும் ஒரேமாதிரியானவை அல்ல.




வளரும் மான் கொம்பு

1. எலும்பு, 2. தோல்
3. எலும்பு உள்ளுறிஞ்சப் படும் பாகம்.
4. எலும்பின் அடர்த்தியான பாகம்.


வளர்ந்த மான் கொம்பு




மாட்டுக் கொம்பு
1. எலும்பு
2. தோல்
3. தோலின் மேலடுக்கு
4. கொம்புப் பொருள்



நவீன விலங்கியல் ஆராய்ச்சியின்படி மானின் தலையில் இருப்பது கொம்புகள் என்று கூறப்பட்டாலும் அவை எலும்புகளே என்கிறார்கள். தலையின் எலும்பு வெளியே நீண்டுவளரும் ஒரே பிராணி மான்தான்!




மானின் கொம்புகள் ஆண்டுதோறும் விழுந்து புதிதாக முளைக்கும். முதல் ஆண்டில் கிளை இல்லாமல் இருக்கும். பிறகு, ஆண்டுதோறும் விழுந்து புதிய கிளைகளுடன் முளைக்கும். மானின் வயது அதிகமாகும் போது கிளைகளும் அதிகமாகும்!



கொம்பு விழுந்தமான், புதுக் கொம்புகள் முளைக்கும் வரை எதிரிகளின் பார்வையில் படாமல், காட்டில் மறைந்தே வாழும்.

ஆயுர்வேத மருந்து களில், மானின் கொம்புகள் பயன் படுத்தப் படுகின்றன.





மானின் கொம்புகள் ஆண்டு தோறும் விழுந்து முளைக்கின்றன என்றாலும், 'ப்ரோங் ஹார்ன்' என்னும் மானின் கொம்புகள் வித்தியாசமானவை. பழைய கொம்பு இருக்கும் போதே, அதன் கீழிருந்து புதிய கொம்பு முளைக்கத் தொடங்கிவிடும். பழைய கொம்பு விழுந்தவுடனே புதிய கொம்பு வளர்ந்து வெளியே தெரியும்!

ஓரிக்ஸ் மானின் கொம்புகள் 130 செ.மீ. வரை நீளம் இருக்கும். அது தன் கூர்மையான கொம்புகளால் ஒரு சிங்கத்தைக் கூட குத்திக் கொன்றுவிடும்!






புள்ளிமானின் கொம்புகள், அதிக பட்சம் 100 செ.மீ. இருக்கும்.



உலகில் மிகவும் அகல மான பெரிய கொம்புகளை உடையது 'மூஸ்' என்னும் மான். இதன் கொம்பில் ஓர் ஆள் படுத்துக் கொள்ள லாம்! கொம்பு 190 செ.மீ. நீளமும் 95 செ.மீ. அகலமும் கூட இருப்பதுண்டு!


பொதுவாக ஆண் மானுக்கே கொம்பு உண்டு.



ஆனால், 'ரெயின் டீர்' என்னும் பனி மான்களில், ஆண், பெண் இரண்டுக்கும் கொம்புகள் உண்டு.




மான் இனத்தைச் சேர்ந்த 'சேபில்' என்னும் விலங்கின் கொம்புகள் அரைவட்டமாக இருக்கும்!



'லெஸர் குடு' என்னும் மானின் கொம்புகள் இரண்டு பக்கமும் ஒரே மாதிரியாக முறுக்கிக் கொண்டு மிக அழகாக இருக்கும்!

பாதுகாப்புக்காக உள்ள கொம்புகளே சிலசமயம் ஆபத்தாகவும் ஆகிவிடும். ஆண்கலை மான்களுக்குள் சண்டை வந்துவிட்டால், இரண்டின் கொம்புகளும் சிக்கிக் கொள்ளும்; பிரிக்க முடியாது. இரை தின்ன முடியாமல், நீர் அருந்த முடியாமல் பட்டினியால் இரண்டுமே இறந்துவிடும்!



சில சமயம் ஆடுகள் நான்கு கொம்புகளுடன் அதிசயமாகப் பிறப்பதுண்டு!



உலகில் நான்கு கொம்புகள் உள்ள ஒரே விலங்கினம் 'ஜீனஸ் டெட்ரா செரோஸ்' என்னும் மான். இதற்குத் தலையின் உச்சியில் இரண்டும், நெற்றியில் இரண்டுமாக நான்கு கொம்புகள் உண்டு.



இது இந்தியாவில், குஜராத்தில்...



இது ரஷ்யாவில், செர்பெஷ்தியில்...



வித்தியாசமான அமைப்பில் உள்ளது 'மார்கோ போலோ' செம்மறியாட்டின் கொம்புகள். கொம்புகள் திருகிக்கொண்டு பயங்கரமான தோற்றத்தில் இருக்கும்.




ஆடுகளில் மிகவும் பெரிய கொம்புகளை உடையது சைபீரியன் மலை ஆடு.




ஒட்டைச்சிவிங்கிகளுக்கு – ஆணுக்கும் பெண்ணுக்கும் – கொம்பு உண்டு. இதன் கொம்புகள் எலும்பு முடிச்சாகவும், மேலே தோலும் மூடியிருக்கும் என்றாலும், இதை கொம்பின் வகையில் சேர்ப்பது இல்லை. இதன் கொம்புகளால் இதற்கு எந்தப் பயனும் இல்லை.

காண்டா மிருகத்தின் மூக்கின் நடுக்கோட்டில், ஒன்று, அல்லது இரண்டு கொம்புகள் முளைக்கும். இதன் கொம்பு கெட்டியான 'கெரட்டின்' என்ற நார்ப்பொருளால் ஆனது. சுமார் 100 செ.மீ. நீளம் கூட இருக்கும்.
காண்டா மிருகத்தின் கொம்புகளின் எண்ணிக்கை அதன் இனத்துக்கு இனம் மாறுபடும்.



இது ஒற்றைக் கொம்பு காண்டா மிருகம். இந்தியா, ஜாவா இனம்.




இது இரட்டைக் கொம்பு காண்டா மிருகம். ஆசியா, சுமத்ரா ஆப்பிரிக்கா இனம்.

காண்டா மிருகத்தின் கொம்பிலிருந்து தயாரிக்கப்படும் கிண்ணத்திற்கு விஷத்தை முறிக்கக் கூடிய தன்மை உண்டு என்று கருதப்படுகிறது. எனவே, காண்டா மிருகத்தின் ஒரு கொம்பின் மதிப்பு அதன் எடைக்கு உ மடங்கு தங்கம் என்று மதிப்பிடப் படுகிறது. ஆனால், ரசாயனப் பரிசோதனையில், அதன் கொம்புக்கு எந்த வித சக்தியும் கிடையாது என்று கண்டறியப்பட்டுள்ளது.



10 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பனியுகத்தில் வாழ்ந்த மான் இனத்தைச் சேர்ந்த 'செர்வஸ் மெகா செரஸ்' என்னும் பிராணியின் கொம்புகள் தாம் மிகவும் பெரியவை. அதன் உடலில் உள்ள எல்லா எலும்புகளின் எடையை விட அதன் கொம்புகளின் எடைதான் அதிகம்!






# ஐஸ் குச்சி மயில்

வெ.குப்புராஜ்

***தேவையான பொருள்கள்:***

1) ஐஸ் குச்சிகள். இவை கடைகளில் கிடைக்கும். இல்லை ஐஸ் கம்பெனிகளில் கிடைக்கும்.

2) வீணாகும் அட்டை

3) வண்ணக் காகிதம் அல்லது துணி. இது கறுப்பாக இருந்தால் நல்லது.

4) பற்குச்சி (TOOTH PIK) இதுவும் கடையில் கிடைக்கும்.

5) பிளாஸ்டிக் மணிகள்,' வளைத் துண்டுகள், பஞ்சிங் மிஷின் (ஓட்டை. போட்ட) வண்ணப் பொட்டுகள். அல்லது வண்ண ஸ்டிக்கர் பொட்டுகள்.

6) கத்தரிக்கோல், பிளேடு, ஊசிநூல்


7) பெவிகால்


8) 16½ ×13 அங்குல அளவில் ஒரு பழைய அட்டை (இது BASE க்காக)

9) 6 அங்குல மெல்லிய வண்ண நூல் கயறு.

***செய்யும் முறை***


1) முதலில் Base ஐச் செய்து கொள்ளவும். 16½× 13 அங்குல அட்டையில், கறுப்புத் துணி அல்லது காகிதத்தை சுருக்க மில்லாது ஒட்டி பின் பக்கம் மடக்கி விடவும். பின் பக்கம் மடக்குமுன், தலைப் பக்கத்தில் 6 அங்குல மெல்லிய நூல் கயிறை ஓட்டை போட்டுப் பின்னால் முடிச்சுப் போட்டு, அந்த




முடிச்சை அட்டை யோடு சேர்த்து ஒட்டி விட வும். ஆணியில் மாட்டும் அளவுக்குக் கயிறு வெளியே இருந்தால் போதுமானது.

2) மயிலையும், முதல் வரிசைத் தோகையையும், Baseல், சென்டர் பண்ணி மெலிசாக வரைந்து கொள் ளவும். வரைய முடியாதவர்கள் இதை அப்படியே Xerox பண்ணிக் கொள்ளலாம். ஐஸ் குச்சியின் தலையை ஒரே அளவாக நீக்கி, பெவிகால் தடவி ஒட்டிவிடவும். Tooth Pik பற் குச்சியையும் இதேபோல் ஒட்டிவிடவும். இப்பொழுது முதல் வரிசைத் தோகை தயார். கட்டுரையின் தலைப்பில் உள்ள படத்தைப் பாருங்கள். இதில் மூன்று வரிசைத் தோகை தெரிகிறது. நீங்கள் முதல் வரிசையை ஏற்கனவே செய்து விட்டீர் கள். இதை சென்டர் பண்ணி ஒட்டியபின் இதற்கு மேல் சென்டர் பண்ணி நீங்களே எத்தனை வரிசை வேண்டுமானாலும் தோகையை அமைக்கலாம். இதற்கு பற்குச்சி வேண்டாம். ஆனால் 16½x13 அளவு Baseக்கு



மூன்று வரிசைத் தோகையே போதுமானது. இப்பொழுது Baseல் தோகை தயார்.

3) காம்பு ஒடிக்காத ஒரு முழு ஐஸ் குச்சியை எடுங்கள். சாப்பிடும் பகுதியுடன் சேர்த்து (B)படத்தில் உள்ளதுபோல் முதல் வரிசை தோகைக்கு நடுவே ஒட்டி விடவும். மயிலின் உடம்பு தயார்.

4) ஒரு ஐஸ் குச்சியின் தலைப் பாகத்தை நீண்ட வடிவில் இரண்டாக்கிக் கொள்ளவும். இவைகளை ஆடும் மயிலின் சிறகாக இரு பக்கமும் ஒட்டிவிடவும். படத்தில் (C) (D)பகுதிகள்.

5) ஒரு பற்குச்சியை இரண்டாக்கி மயிலுக்குக் கால் வைக்கவும். கால்களின் இரு பக்கமும் பற்குச்சிகளின் மிகச் சிறிய துண்டுகளை வைத்து ஒட்டி விடவும். இதே போல் மூக்கையும் ஐஸ் குச்சித் துண்டால் வெட்டி ஒட்டி விடவும். (படத்தைப் பார்க்க)

6) மயிலுக்குக் கறுப்பு இங்க்கால் கண் வைக்கவும். ஸ்டிக்கர் பொட்டும் பொருத்தமா இருக்கும்.

7) தோகைகளின் நடுவே ஜிகினா காகிதத்தில் (பஞ்சிங் மிஷினால்) ஓட்டை போட்ட பொட்டுகளை அல்லது ஸ்டிக்கர் பொட்டுகளை ஒட்டி அழகு செய்யவும்.

8) மயிலின் உடலுக்கும், இரண்டு சிறகுகளுக்கும் கோந்து தடவி, மேலே ஜிகினா தூளைத் தூவி விடவும்.

9) இந்த மயிலுக்கு வளைத் துண்டுகள், வண்ணப் பொட்டுகள், பாசிமணிகளால் எத்தனை வேணுமாலும் உங்கள் கற்பனைக்கு ஏற்ப, குறிப்பாக தோகையின் கண்களுக்கு அலங்காரம் செய்யலாம்.


10) இந்த மயிலை உங்கள் வீட்டு வரவேற்பு அறை, அல்லது கூடத்தில் மாட்டினால் பாராட்டுப் பெறும் என்பது உறுதி.

### எனக்குத் தெரியாது எடுத்த புகைப்படம்!





• இனியவன்



• கோபி

நான் திருச்சியில் வசிக்கிறேன். திருச்சிக்கு அடிக்கடி உறவினர்களோ நண்பர்களோ வந்தால் நான்தான் அவர்களுக்கு ஊரைச் சுற்றிக் காட்டுவேன். அப்படித்தான் போன வருடம் வந்திருந்த உறவினர் ஒருவருக்கு உச்சிப் பிள்ளையாரைக் காட்ட மலைக்கோட்டையில் ஏறிக் கொண்டிருந்தேன். எனக்கு அருகில் வயதான வடஇந்திய தம்பதியர், மூச்சு இறைக்க ஏறிக் கொண்டிருந்தனர். பார்க்க மனதை என்னவோ பண்ணினாலும், என்னால் எந்த உதவியும் செய்ய முடியவில்லை. அந்தப் பெண்மணி தோளில் மிருதங்க வடிவிலான ஒரு 'ரவுண்டப்' பையை மாட்டியிருந்தார். திடீரென்று அதன் வார் அறுந்தது. பையில் நிறையத் திணித்திருந்தார்கள். அதனால், நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அது படிகளில் உருண்டு, உருண்டு, அடிவாரம் வரை போய் விட்டது! தம்பதியர் இருவரும் என்ன செய்வது என்று தோன்றாது திகைத்துப் போய் பரிதாபமாக நின்று விட்டனர்.

"கவலைப் படாதீர்கள். நான் போய் உங்கள் பையை எடுத்து வருகிறேன்" என்று அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு படிகளில் இறங்கி, விரைந்தேன்.

பையைக் கொண்டு வந்து கொடுத்ததும் அவர்கள் இருவரும் என் கைகளைப் பற்றிக் கொண்டு நன்றிப் பெருக்குடன் கண் கலங்கியதை என்னால் என்றுமே மறக்க முடியாது. மீதிப் படிக்கட்டுகளையும் ஏறி, மேலே வந்து உச்சிப் பிள்ளையாரையும் தரிசனம் செய்து கொண்டு அவர்கள் இறங்கினார்கள். கீழே வந்ததும், என்னை அழைத்துக் கொண்டு அருகே இருந்த ஒரு 'போட்டோ லேபு'க்குள் இருவரும் நுழைந்தனர். பத்து நிமிடங்கள் ஓடின. பெரியவர், என்னிடம் ஒரு போட்டோவை நீட்டிய போது நான் திகைத்தேன். அது என் போட்டோ!

# என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்!



• லட்சுமி நாராயணன்

"எனக்குத் தெரியாமல் என்னை எப்ப புகைப்படம் எடுத்தீர்கள்?" என்று கேட்டேன்.

"தம்பி, நீ கீழே இறங்கிச் சென்று எங்கள் பையை மேலே எடுத்து வந்தாய் அல்லவா? அப்பத்தான் மேலே இருந்து நான் இதை எடுத்தேன்" என்று சிரித்தார் பெரியவர்.

"தம்பி, நீ இன்னும் அதிக உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ வேண்டும்" என்று தலையைத் தொட்டுக் கண்ணீர் மல்க ஆசிர்வாதம் செய்தார் அந்தப் பெண்மணி.

என் போட்டோவின் இன்னொரு காப்பியின் பின்னால்

எனது பெயர், முகவரியைக் கேட்டு எழுதிக் கொண்டு மறுபடி வாழ்த்திப் பிரியாவிடை பெற்றனர். இன்னும் என்னிடம், எனக்குத் தெரியாது அவர் எடுத்த புகைப்படம் இருக்கிறது.

- *தா. கிரிதரன், திருவரங்கம்.*

## ஜப்பானியர் எடுத்த புகைப்படம்


**எ**ங்கள் ஊர் மேலவாசலுக்கு ஜப்பானியர் ஒருவர் வந்திருந்தார். அவர் பல்கலைக் கழக மாணவராம். தட்டைப் பயிரைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக இந்தியா வந்துள்ளவராம். இந்தியாவுக்கு வந்து ஆறு மாதம் ஆகிறதாம். இதையெல்லாம் அவர்தான் என்னிடம் கூறினார். எனக்குத் தெரிந்த Spoken English ல் நான் அவரோடு பேசி இதையெல்லாம் அறிந்து கொண்டேன்.

"இந்தியா ஈஸ் எ புவர் கன்ட்ரி. பட் ப்யூட்டிபுல் கன்ட்ரி" என்றார் அவர். எங்கள் வீட்டில் அவராகவே ஒரு நாள் தங்கினார். அன்று எங்கள் வீட்டில் அவருக்காக மீன் (குழம்பு) வைத்தார்கள். அதைச் சுவைத்துச் சாப்பிட்டு விட்டு 'பென்டாஸ்டிக்' (மிக அற்புதம்!) என்று பாராட்டினார். போகும் போது என்னை, என் தாத்தா, அப்பா எல்லோரையும் சேர்த்து நிற்க வைத்து ஒரு குருப் போட்டோ எடுத்துக் கொண்டார்.


- *சி.பூ. இனியவன், மேலவாசல்.*

## ஜெர்மானியர் எடுத்த புகைப்படம்

**நா**ன் சீர்காழியில் படித்து வருகிறேன். சென்ற வருடம் பூம்புகாரிலிருக்கும் என் பாட்டி வீட்டுக்குச் சென்றிருந்தேன். பூம்புகார் சீர்காழியிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. மயிலாடுதுறையிலிருந்து போனால் 20 கிலோ மீட்டர். பூம்புகார் கடற்கரை அழகுமிகுந்தது. கண்ணகியின் பத்தினிக் கோட்டம், சுற்றுலா மாளிகை, இலஞ்சி மன்றம், கலைக்கூடம் எல்லாமே பார்க்கப் பார்க்கப் பிரமிப்பூட்டும். அன்று மாலை என் சகோதரியுடன் கடற்கரைக்குச் சென்றேன். நிறைய சுற்றுலா பேருந்துகள் கார்கள், நிறுத்த இடமின்றித் தவித்தபடி இருந்தன. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் மொய்த்திருந்தனர். நானும் என் சகோதரியும் கடற்கரை ஓரமாக நீரில் நடந்து சென்று கொண்டிருந்தோம். திடீரென்று என் காலில் ஏதோ தட்டுப் பட்டது. எடுத்துப் பார்த்தேன். கனமான பர்ஸ். கைக்குட்டையால் நீரையும் மண்ணையும் தட்டிவிட்டு யாருடையதாக இருக்கும் என யோசனை செய்தேன். எனக்கு முன்னால் ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு தம்பதியர் சென்று கொண்டிருப்பதைக் கவனித்து விரைவாக நடந்து அவர்களைப் பிடித்தோம். பர்சை அவர்களிடம் காட்டி "Is it yours?" என்று எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் கேட்க, அவர்களும் "Yes yes" எனக் கூறி "Indian people are always honest" (இந்தியர்கள் நாணயமானவர்கள்) எனச் சொல்லி, தம் கையில் வைத்



• காமாட்சி



• ரமேஷ்



• தெய்வானை

திருந்த காமிராவால் என்னையும் என் சகோதரியையும் நிற்க வைத்து ஒரு போட்டோ எடுத்துக் கொண்டார்கள்.

- *எஸ். காமாட்சி, சீர்காழி.*

## பரிசு வாங்கினேன் படமெடுத்தார்கள்!

எங்கள் பள்ளி (மதுரவாயல்) சாரண சங்கத்தின் சார்பில் காஞ்சிபுரம் பச்சையப்பன் மேல் நிலைப் பள்ளியில் நான்கு நாட்கள் முகாம். முகாமில் பங்கு கொள்ள சிறந்த எட்டு மாணவர்களைத் தேர்தெடுத்து அழைத்துச் சென்றனர். அதில் நானும் ஒருவன். பல பள்ளிகளைச் சேர்ந்தவர்கள் வந்திருந்தனர். முகாமில் சாரண சங்கத்தைப் பற்றி ஓர் கட்டுரைப் போட்டி வைத்தார்கள். எங்கள் பள்ளியின் சார்பில் நான் கலந்து கொண்டேன். சாரண சங்கத்தைப் பற்றி எனக்குத் தெரிந்த எல்லாத் தகவல்களையும் கட்டுரையில் எழுதினேன். நிறைவு விழாவில் போட்டி முடிவுகளை அறிவித்தனர். முதல் பரிசு எனக்குக் கிடைத்ததைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். என் ஆசிரியரும், நண்பர்களும் என்னைப் பாராட்டினர். விழாத் தலைவர் முதல் பரிசுக்கான பரிசையும், சான்றிதழையும் எனக்கு வழங்கிய போது என்னையும் நிற்கவைத்துப் போட்டோ எடுத்தனர். அந்த போட்டோ இன்றும் என்னிடம் பத்திரமாக உள்ளது.

*- ஜி. லட்சுமி நாராயணன்,*
*மதுரவாயல்.*

## பத்திரிகைக்காரர்கள் எடுத்த புகைப்படம்

நான் கோவையில் வசிக்கிறேன். கோவை மாவட்டத்தின் சார்பில், தமிழ் நாடு அரசின் விளையாட்டுக் கழகம் போன ஆண்டு கோவையில் 15 நாள் பயிற்சி தந்தது. என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். அதனால் நானும் பயிற்சியில் பங்கு கொண்டேன். ஒரு நாள் "யாரோ பத்திரிகைக்காரர்கள் வந்து பயிற்சி பெறும் உங்களையெல்லாம் போட்டோ எடுக்கப் போகிறார்கள்" என்று பயிற்சி ஆசிரியர் கூறினார். எங்களுக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. பத்திரிகைக்காரர்கள் வந்தார்கள். எங்கள் எல்லோருக்கும் காப்பி, டீ எல்லாம் தந்தார்கள். புகைப்படம் எடுத்தார்கள். குரூப்பாகவும் தனித் தனியாகவும் புகைப் படம் எடுத்தார்கள். எனக்குப் பெருமை தானே?

*- ஆர். ரமேஷ், கோவை - 12.*

## சோழனாக புகைப்படம்

நான் மிட்டூர் உயர் நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பில் படித்து வருகிறேன். பள்ளியில் ஆண்டுதோறும் ஆண்டு விழா நடைபெறும். கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி என்று எல்லாப் போட்டிகளும் நடைபெறும். மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இருக்கும். அப்போது பரிசு பெற்றவர்களுக்குப் பரிசளிப்பார்கள்.

சென்ற ஆண்டு ஆண்டு விழாவில், நானும் என் தோழிகள் ரீனாவும், கீதாவும், 'கோப்பெருஞ் சோழன் அவையில் கண்ணகி வழக்குரைத்ததை, நாடகமாக நடித்தோம். நான் கோப்பெருஞ் சோழன், ரீனா கண்ணகி, கீதா கோப்பெருந்தேவி. நாங்கள் நடித்த போது எங்களைப் புகைப் படம் எடுத்தார்கள்.

எங்கள் நடிப்புத் திறமையை பார்த்து எல்லோரும் பாராட்டினர்.



"நீ ஏன் "ஹோம்" வொர்க் செய்யலே?"

"நான் ஹாஸ்டல்ல இருக்கேன் சார்!"

- கு. சுரேஷ்

# சுண்டெலி!



எங்கள் வீட்டில் சுண்டெலி
ஏரா ளம்மாய் வாழுது
எங்கும் சுற்றி அஞ்சாமல்
ஏகத் தாளம் போடுது

தறியின் மேலே ஓடுது
துணியைக் கடித்துக் குதறுது
பொறியால் பிடிக்க முடியல்லே
பொந்தின் உள்ளே மறையுது.

பண்டம் எல்லாம் தின்னுது
பானை சட்டி உருட்டுது
அண்டிச் சென்றால் கையினில்
அகப்ப டாமல் மறையுது

தாவிப் பிடிக்க முடியல்லே
தந்தி ரம்மாய்த் தப்புது
பாவி எலிகள் வீட்டிலே
படுத்தும் தொல்லை தாங்கலே!

- தெ. தமிழ்க்குமரன்

---

இந்த ஆண்டு, ஆண்டு விழாவில், நான் ஓவியப் போட்டியில் பங்கு பெற்று பாரதியாரை வரைந்தேன். 2 ஆம் பரிசாக ஓர் அழகிய பேனாவும், நற்சான்றிதழும் பெற்றேன். அப்போதும் என்னைப் புகைப்படம் எடுத்தார்கள். இதெல்லாம் எனக்குப் பெருமைதானே? நீங்களே கூறுங்கள்?

*- மு. தெய்வானை, மிட்டூர்.*

## பாராட்டி எடுத்தார்கள்!

எங்கள் பள்ளியில் "விவேகானந்தா சங்கம்" என்ற அமைப்பு உள்ளது. அதன் சார்பில் ஆண்டுதோறும் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி நடத்திப் பரிசளிப்பார்கள். ஒவ்வொரு வருடமும் நானும், என் நண்பன் ஒருவனும் கட்டுரைப் போட்டியில் முதல், இரண்டு பரிசுகள் பெறுவோம். இந்த ஆண்டும் "பாரதியின் தேசபக்தி" என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடத்த இருப்பதாக அறிவித்தனர். என்னிடமிருந்த பாரதியார் வாழ்க்கை பற்றிய புத்தகங்களைப் புரட்டி கட்டுரைப் போட்டிக்குத் தயாரானேன்.

ஆனால், என் நண்பனோ வெளியூர் சென்றிருந்தான். போட்டி நடப்பதற்கு முதல் நாள்தான் பள்ளிக்கு வந்தான். விஷயத்தை அவனிடம் தெரிவித்தேன். அவனுக்கு ஒரே பதட்டமாய் இருந்தது. அவனிடம் பாரதியார் புத்தகங்கள் இல்லை. யாரிடம் சென்று புத்தகம் கேட்பது என்பது தெரியாமல் விழித்தான். என்னிடம் யோசனை கேட்டான். நான் போட்டிக்குத் தயாராகிவிட்டதால், என்னிடமிருந்த புத்தகங்களை அவனிடம் கொடுத்தேன். அவனும் தயாரானான்.

வழக்கம்போல முதல், இரண்டு இடங்கள் எங்களுக்கே கிடைத்தன. நண்பன் என்னை அவனுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்று பெற்றோரிடம் அறிமுகம் செய்து வைத்தான். எனது பெருந்தன்மையைப் புகழ்ந்து பாராட்டிய தோடு நண்பனின் அப்பா என்னையும், அவனையும் நிற்க வைத்து புகைப்படம் எடுத்து எனக்கும் ஒரு பிரதி கொடுத்தார்.

*- எஸ். கோபி, சுந்தரபவனம்.*

# எடுத்துக்காட்டான நாவல்...

**சங்ககால வள்ளல் கதைகள், மூ. அண்ணாமலை, பக். 92, ரூ. 12.50, வசந்தா பிரசுரம், 6, ஜெயசங்கர் தெரு, மே. மாம்பலம், சென்னை - 33.**

சங்க இலக்கியங்கள் புகழ்ந்து கூறும் பேகன், குமணன், பறம்புமலைப் பாரி, தகடூர் அதியமான், சோழன் கிள்ளிவளவன், சேரமான் இரும்பொறை, நாஞ்சில் வள்ளுவன், கொல்லிமலை ஓரி ஆகிய வள்ளல்களின் வரலாற்றை இது சுருக்கமாகத் தருகிறது. புதிய தகவல்களுடன் தொகுத்துத் தரப்பட்டுள்ளது பாராட்டத்தக்கது. அதோடு, கதை போல் சுவையாக எழுதப்பட்டுள்ள நடை சிறுவரால் பெரிதும் விரும்பப்படும்.

**பஞ்ச தந்திரக் கதைகள், கெம்பு ஆறுமுகம், பக் 64 ரூ 8/- D.S. புத்தக மாளிகை, 6, ஜெய்சங்கர் தெரு, மே. மாம்பலம், சென்னை - 33.**

இந்திய நாட்டின் பழம்பெருமைமிக்க பஞ்சதந்திரக் கதைகள் எல்லாமே சிறுவர்க்கானவை அல்ல. எவை சிறுவர் படிக்கக் கூடியவை என்பதைக் கவனமாகப் பார்த்து எடுத்துத் தொகுக்க வேண்டும். இந்தப் பணியை ஆசிரியர் நன்கு செய்திருக்கிறார். பறவைகளும் விலங்குகளும் கதாபாத்திரங்களாக மாறி கதையை நடத்திச் செல்வதை விரும்பாத சிறுவரும் உண்டா? சிறுவர் விரும்பத்தக்க தொகுப்பு.




**சிறுவர் கதைகள், ஆர்.வி. பதி, பக். 64 ரூ.10/- அபராஜிதா பதிப்பகம், 23 வாணியர் தெரு, கரையான் சாவடி, பூவிருந்தவல்லி - 600 056.**

சிறுவர்க்காக எழுதி வெற்றிக் கொடி நாட்டி வரும் ஆசிரியரின் மணியான சிறு கதைகளின் தொகுப்பு இது. கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமாகி வரும் இவரது படைப்புகள் எல்லா வயதினராலும் சுவைக்கக்கூடியவை. இத் தொகுப்பில் உள்ள கதைகளில் பெரும்பாலனவை கோகுலத்தில் வெளிவந்தவை என்ற ஒன்றே இதன் சிறப்புக்குப் போதுமானது. கதைகளைப் படிக்கும் போது எதிரே நின்று கதையைக் கூறுவது போல் அமைந்துள்ளது. சிறுவர் நூலுக்கு ஓரிரு படங்களும் தேவை என்பதை மறந்து விட்டார்களே!

**அதிசய அன்னம், புவனை கலைச் செழியன், பக். 136, ரூ. 19/- குழந்தை இலக்கியக் கழகம், 72, கிருஷ்ணா நகர், சென்னை - 91.**

கதாநாயகனான சிறுவன் நடேசன், தனது நண்பனைத் திருத்த எடுக்கும் முயற்சிகளின் விளைவாக எதிர்கொள்ளும் தடைகள், துன்பங்கள், அவற்றைப் பொறுமையுடன் தாங்கித் தன் இலட்சியத்தை அடையும் நிகழ்ச்சிகள் நாவலை வேகமாக நகர்த்தி சுவையூட்டுகின்றன. தெ.ஆ. மாவட்டத்தின் இயற்கை எழிலை கதையின் ஊடே ஆசிரியர் அறிமுகப்படுத்தியிருப்பது நல்ல முயற்சி. ஆசிரியரின் பண்பட்ட நடை கதைக்கு வேகம் கொடுக்கிறது. ஓரிரு படங்களாவது இருந்திருந்தால் நூலுக்கு மேலும் சுவை கூடியிருக்கும்.

**நச்சுமலைக் காடு, டாக்டர் பூவண்ணன், பக். 160 ரூ 30/- குழந்தை இலக் கியக் கழகம், 72, கிருஷ்ணா நகர், (முவரசம்பட்டு அருகே), சென்னை - 91.**

நாற்பத்தைந்து ஆண்டுகளாகச் சிறுவர் இலக்கியம் படைத்துச் சாதனை புரிந்து வரும் ஆசிரியர், தொடக்க காலத்தில் (54-55) எழுதிய நாவலின் மறுபதிப்பு இது. நல்லவரான அமைச்சர் ஒருவருக்கு பொல்லாதவர்கள் சிலரால் ஏற்படும் பழியை இளவரசனும் அவனுடைய நண்பனும் நீக்கி வைத்து, பொல்லாதவர்களின் வஞ்சத்தைக் காட்டிக் கொடுப்பது தான் நாவலின் சுருக்கம். 40 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது இன்றும் படிக்கச் சுவைகுன்றாது இருப்பது மிகப் பெரிய அதிசயம். ஒன்றிரண்டு படங்களையாவது சேர்த்திருந்தால் நூலுக்கு மேலும் சிறப்பாக இருந்திருக்கும். சிறுவர் இலக்கியத்திற்கான மிக உயர்ந்த விருதைப் பெற்றுள்ள ஆசிரியரின் திறமைக்கு இந்த நாவல் ஓர் எடுத்துக்காட்டு.

சிறுவர் நூல்களும், அறிவியல் பொது நூல்களும் மட்டுமே இப் பகுதியில் மதிப்புரை செய்யப்படும். இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 97 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டணம் இல்லை.

# நானும் போனேன்!

- பூவை அமுதன்

**கோ**டை விடுமுறைக்குப் பின் பள்ளி திறந்த முதல் நாள். ஏழாம் வகுப்பு 'ஆ' பிரிவில் மாணவர்கள் சிலர் முன்னதாகவே வகுப்புக்கு வந்திருந் தனர். ஒவ்வொருவரும் அந்த விடுமுறை யின் போது எங்கெங்கே சென்றிருந்தார் கள் என்பதைக் கதை கதையாகச் சொல்லி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

மணி, தான் மாமல்லபுரத்துக்கு மட் டுமே போக முடிந்தது என்று சற்று மனக் குறையோடு சொன்னான். தாஜ் மகாலுக்கே அழைத்துப் போவதாக அவன் தந்தை சொல்லியிருந்தாராம்.



அவருக்குக் கம்பெனியில் லீவு கிடைக்கவில்லையாம்.

ஹரி பிரசாந்த் தன் பெற்றோரோடு மதுரை, திருச்சி வேளாங்கண்ணி, நாகூர் ஆகிய ஊர்களுக்குச் சென்றதையும் பல மதத்துக் கடவுள்களையும் தொழுது விட்டு வந்ததையும் பெருமை பொங்கக் கூறினான்.

குணபதி, தான் அப்பா அம்மா அண்ணன் அக்காவோடு ஊட்டிக்குப் போனதையும், ஊட்டியில் நடைபெற்ற மலர்க் கண்காட்சியைக் கண்டு மகிழ்ந்த தையும் நீண்டு முழக்கிச் சொன்னான். தொட்ட பெட்டா சிகரத்துக்குளிர் தன்னை ஒன்றுமே செய்யவில்லை; மற்ற வர்களையெல்லாம் நடுநடுங்க வைத்து விட்டது என்றான். 'மலர்க் கண்காட்சி யில் எத்தனை விதமான ரோஜாக்களைப் பார்த்தேன் தெரியுமா? என்று தன் பெரிய விழிகளை அகலத் திறந்து ஆச்சரியம் காட்டினான்.

"பத்து நாள் தங்கியிருந்தோம்; நிறைய செலவு செய்தோம்; அங்கே நான் பார்க் காத இடமே இல்லை, பிளம், வால்பேரி, நீலகிரி ஆப்பிள் என்று பழங்களாகவே நிறைய நிறையத் தின்று தீர்த்தேன்!" என்று மற்றவர்கள் நாவில் நீர் ஊறும் அளவுக்கு, அப்போதுதான் ரசித்து ருசித் துத் தின்பதைப் போல நாக்கைத் தட்டிச் சுவைத்துச் சுவைத்துப் பேசினான் குணபதி.

அமர்ந்திருந்த நால்வரில் தன் விடுமுறை அனுப வத்தைச் சொல்லாமல் இருந்தவன் கௌதமன்தான்.

"என்னடா, கௌதம்? நீ எங்கேயும் போகவில்லையா? ஐயோ, பாவம்! ஏழைப் பையன்! நீ எங்கே போயிருக்கப் போகி றாய்? நீ உன் அப்பாவோடு போய் ஏதா வது எடுபிடி வேலை செய்து, அரை ரூபாய் ஒரு ரூபாய் என்று ஏதோ கொஞ்

சம் சில்லறை சம்பாதித்துக் கொண்டு இருந்திருப்பாய்!'' என்று அவனைப் பார்த்துக் கேலியாகச் சொன்னான் குணபதி.

"நீ சொன்னால் எப்படி? அதை அவன் சொல்லட்டும்!'' என்று உகப் பினான் மணி.

"ஆளுக்கு ஆள், நீங்களே பேசினால் எப்படி? அவனைச் சொல்ல விடுங்க ளேன்?'' என்றான் ஹரி பிரசாந்த்.

அவர்கள் மூவரையும் ஒருமுறை பார்த்தவிட்டுச் சிரித்தான் கௌதமன்.

''சொல்லேண்டா, எங்கேடா போயிருந்தாய்?'' என்று அதட்டலாகக் கேட்டான் குணபதி.

"எனக்கே சிரிப்பாக இருக்கிறது; நம்ப முடியாமலும் இருக்கிறது. நானும் ஊட்டிக்குப் போயிருந்தேன்!'' என்றான் கௌதமன்.


"ஊட்டிக்கு... நீ..... போனியா? டேய்! இவன் புருடா விடறான் டோய்!'' என்று அவன் முதுகில் ஓங்கித் தட்டி, நக்கலாகச் சிரித்தான் குணபதி.

"உண்மைதான் குணபதி! நானும் ஊட்டிக்குப் போனேன்!" என்று அழுத்த மாகச் சொன்னான் கௌதமன்.

"நான் நம்பமாட்டேன்!'' என்று மணி யும் குணபதியும் ஒரே நேரத்தில் சொன் னார்கள்.

"கௌதம்! நீ சொல்லு...'' என்று அவனை மேலே பேசும்படிக் கேட்டான் பிரசாந்த்.

"என்னத்தை அவன் சொல்வான்? போயிருந்தால் தானே? சும்மாயிருந்த



வனைச் சொல்லு சொல்லு என்று தொந்தரவு பண்ணினால், அவன் ஏதோ வாய்க்கு வந்ததைக் கப்ஸா விடறான். ஆளை விடுங்க!" என்று எழுந்து கொண்டான் குணபதி.

"ஏண்டா கௌதம்! நீ ஏழைப் பையனாச்சே! நீ போய், ஊட்டி கொடைக்கானல், டில்லி ஆக்ராவெல்லாம் போக முடியுமா? எங்குமே போகல்லேன்னு உண்மையைச் சொல்லிட வேண்டியது தானே!" என்று எரிச்சலாகப் பேசினான் மணி.

கௌதமனின் கண்கள் கலங்கி விட்டன. பிரசாந்த்தும் அவனை அதற்கு மேல் ஒன்றும் கேட்கவில்லை.

"பிரசாந்த்! நீயாவது நம்பு. நான் பொய் பேச மாட்டேன். உனக்குத் தெரியும் இல்லையா?" என்று அவன் முக வாயைப் பிடித்துக் கொண்டு கெஞ்சும் பாவனையில் கூறினான் கௌதமன்.



பிரசாந்த் மற்றவர்கள் முகங்களை மாறி மாறிப் பார்த்தானே தவிர, கௌதமன் முகத்தைப் பார்த்து ஏதும் சொல்லவில்லை.

"பிரசாந்த்! நீயாவது என்னை நம்பு... அவர்கள் யாரும் நம்பாவிட்டாலும் பரவாயில்லை. நான் சொல்வது உண்மை. ஊட்டிக்குப் போயிருந்தோம். மூன்று நாள் அங்கேயிருந்து பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம்..."

கௌதமன் கலங்கிய கண்களோடு சொல்லிக் கொண்டேயிருந்தான். மற்ற இருவரும் ஆளுக்கொரு கையைப் பிடித்து இழுத்துப் பிரசாந்த்தை அங்கிருந்து அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள். அதற்குள் நிறைய மாணவர்கள் வகுப்புக்குள் நுழைந்து விட்டார்கள். கௌதமன் பரபரப்போடு கண்களைத் துடைத்துக் கொள்ள முயன்றான் என்றாலும் முடிய வில்லை. அடக்க முடியாமல் அவனுக்கு அழுகை அழுகையாக வந்து விட்டது.


சில நிமிடங்களுக்குள் பள்ளி முதல் மணி ஒலித்தது. வெளியேயிருந்த மாணவர்கள் எல்லோரும் வகுப்புக்குள் வந்து, இருக்கையில் அமர்ந்து கொண்டார்கள்.

வகுப்பு ஆசிரியர் உள்ளே வந்தார். மாணவர்கள் எழுந்து நின்று வணக்கம் கூறினார்கள். பிள்ளைகளை அமரச் சொல்லி விட்டுத் தாம் மேசையருகே நின்றபடி எல்லோருடைய முகங்களையும் பார்த்தார் ஆசிரியர்.

அனைவருடைய முகங்களிலும் மகிழ்ச்சி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. ஆறாம் வகுப்பிலிருந்து தேர்ச்சி பெற்ற ஆனந்தம் மாணவர்களின் நடையுடை பாவனையில் பொங்கி வழிந்து கொண் டிருந்தது. ஆனால், கௌதமன் மட்டும் வாடிய முகத்தோடு இருந்ததை ஆசிரியர் கவனித்து விட்டார்.

ஆசிரியர் அவன் அருகே வந்தார். அவன் எழுந்து தலை குனிந்து நின்றான்.

"கௌதம்! என்ன ஆச்சு உனக்கு? உடல் நலம் சரியில்லையா? ஏன் எப்படியோ இருக்கே?" என்று பரிவோடு



# சூரியனை அறிய புதிய முறை

நிலவை அறிய மனிதன் தானே வானவெளியில் பயணம் செய்து நிலவில் இறங்கி ஆராய்ச்சி செய்தான். ஆனால் சூரியனை ஆராய இப்படிச் செய்ய முடியாது தடுப்பவை சூரியனில் இருந்து வெளிப்படும் வெப்பமும் பயணம் செய்ய வேண்டிய தொலைவும். சூரியனுக்குச் சென்று வராமலேயே பூமியில் இருந்த படியே சூரியனை ஆராய இயலும் என்பதை அமெரிக்க விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். இந்தப் புதிய முறைக்குப் பெயர் HELIOSOIS MOLOGY. இந்த முறையால் சூரியனுக்கு, உள்ளே 691,000 கிலோ மீட்டர் ஆழத்திற்குச் (தொலைவுக்கு) சென்று ஆய்வுகளைச் செய்து பல புதுமைகளைக் கண்டறிய முடியும்.

சூரியனுக்குள் பூமியில் ஏற்படுவது போலவே பூகம்பங்கள் ஏற்படுகின்றன என்பதை இந்த HELIOSOIS MOLOGY முறைதான் உறுதிப்படுத்தியுள்ளது. சூரியனில் காந்த மண்டலங்கள் எப்படிப் பாதிக்கின்றன என்பதை அறியவும் இந்தப் புதிய முறை உதவியாக உள்ளது. இந்த முறையால் ஒரே நாட்டில் இருந்து ஆய்வு செய்வதை விட, உலகின் பல பாகங்களில் இருந்தும் ஒரே நேரத்தில் சூரிய ஆய்வை மேற்கொண்டால்தான் இந்தப் புதிய ஆய்வுமுறையின் முழுப் பயனும் கிடைக்கும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். அமெரிக்காவின் தேசிய சூர்ய ஆய்வு மையம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று அமைக்கத் தகவல் அறிக்கை கூறுகிறது.

கேட்டார் ஆசிரியர்.

கௌதமன் பதில் ஏதும் சொல்ல வில்லை. அவன் கண்களிலிருந்து குபுகுபு வெனக் கண்ணீர் பொங்கியது.

"ஏன் கௌதம் அழுகிறான்?" என்று புரியாமல் ஆசிரியர் பொதுவாகக் கேட்டார்.

ஹரி பிரசாந்த் எழுந்து நின்று குண பதியும் மணியும் அவன் சொன்னதை நம்பாமல் கிண்டல் செய்ததைச் சொன்னான்.

ஆசிரியர் குணபதியின் பக்கம் திரும் பினார்.

"என்ன குணா! நீ இந்த லீவில் ஊட்டிக்கா போயிருந்தாய்?"

"ஆமாம் சார்!" - அவன் தலையாட்டி னான்.

"என்னென்ன பார்த்தாய்?" ஆசிரியர் தான் கேட்டார்.

"தொட்ட பெட்டா போனோம். ஊட்டி ஏரியிலே படகிலே... மோட்டார் படகிலேதான்... எல்லோரும் போனோம்...!"

"ஓஹோ...! சரி... அங்கே சில்ட்ரன்ஸ் பார்க்குக்குப் போனாயா?"

"ஓ... போனேனே... பொட்டானிகல் கார்டனுக்குக் கூடப் போனேன்."

"அதிருக்கட்டும். அந்தக் குழந்தைகள் பூங்கா எங்கேயிருக்கு? ஊட்டியிலே குழந் தைகள் பூங்கா இருக்கா? என்ன கட்டணம்? தெரியுமா?"

ஆசிரியர் மடக்கி மடக்கிக் கேட்ட கேள்விக்குக் குணபதியால் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை. அந்தக் கேள்வியை அவன் வேறு விதமாகப் புரிந்து கொண்டான்.

"சார்! ஊட்டியிலே ஏது சார்... சில்ட்ரன்ஸ் பார்க்கு?"

ஆசிரியருக்கு உண்மை புரிந்து விட்டது. அவன் முகத்தையே உற்று நோக்கினார்.

"குணபதி! நீ லீவிலே பத்து நாள் காய்ச்சலாகப் படுத்த படுக்கையாக இருந்ததாக உன் அப்பா, காலையிலே தானே என்னைப் பார்த்துப் பேசினார். அதனாலேதான் விடுமுறையிலே அவனை வெளியூருக்குக் கூட்டிக் கொண்டு போக முடியாமல் போச்சுது

என்றும் சொன்னாரே?"

ஆசிரியர் சொல்லச் சொல்ல குணபதிக்கு அவமானமாகப் போய் விட்டது. அவன் ஓரக் கண்ணால் கௌதமனைப் பார்த்தான். அப்போதும் கௌதமன் தன் கண்களில் துளிர்த்த கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக் கொண்டுதான் இருந்தான்.


ஆசிரியர் கௌதமனையும் பார்த்தார். பிறகு மாணவர்கள் எல்லோரையும் பொதுவாகப் பார்த்துச் சொன்னார்.

"பார்த்தீர்களா, பிள்ளைகளே! பொய் பேசியவன் வருத்தப்படவில்லை; உண்மை பேசுகிறவன் வருத்தப்படுகிறான். ஏன்...? கௌதமன் ஏழைப் பையன் என்பதால், அவன் சொல்வதை நம்பக் கூடாதா? அவன் சொன்னது பொய்யா?" என்று கேட்டு விட்டு, "கௌதம்! நீ சொல்! குழந்தைகள் பூங்கா ஊட்டியில் எந்த இடத்தில் இருக்கிறது?" என்று கேட்டார்.

கௌதமன் மெதுவாக எழுந்து நின்று, "ஏரிக்குப் பக்கத்திலேயே இருக்கிறது சார்! உதகமண்டலம் இரயில்வே ஸ்டேஷனில் இறங்கினால், முதலில் சில்ட்ரன்ஸ் பார்க்கைப் பார்க்கலாம். அந்த வழியே போனால், அந்தப் பார்க்கை அடுத்து இருக்கு ஸார் ஊட்டிலேக்!" என்றான் கௌதமன்.

"கரெக்ட்! சரி... நீ யாரோடு ஊட்டிக்குப் போனாய்?" என்றார் ஆசிரியர்.

"என்னையும், இன்னும் மூன்று மாணவர்களையும் இலவச இரவுப் பாடசாலை நடத்தும் பெரியவர் மணிவாசகம் அழைத்துப் போனார். நிறைய மார்க் எடுத்துத் தேர்ச்சி பெற்றால் அழைத்துப் போவதாகச் சொல்லியிருந்தார். நம்ம ஸ்கூலிலே மற்ற வகுப்பிலே படிக்கும் அந்த மூன்று பேரோடு என்னையும் அழைத்துப் போனார். ஏழை சொல் அம்பலம் ஏறாது என்பது உண்மைதான் சார்! நான் சொன்ன உண்மையை குணபதியும் மணியும் நம்பவில்லையே!" என்றான் கௌதமன். "நாங்கள் நம்புகிறோம்! என்றார்கள் மற்ற மாணவர்கள் ஒரே குரலில். குணபதியின் தலை தொங்கி விட்டது.





# லாராவின்

இந்த வருடம் ஏப்ரல் மாதம் 18ஆம் தேதி, மேற்கு இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர் பிரையன் லாராவுக்கு ஒரு முக்கியமான நாளாக அமைந்து விட்டது!

அன்றுதான் ஆன்டிகுவாவில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் 375 ரன்கள் எடுத்து லாரா ஒரு சாதனை படைத்தார். 1958ல், பாகிஸ்தானுக்கு எதிராக ஆடிய சோபர்ஸ் எடுத்த 365தான் இதுவரை ஒரு சாதனையாக இருந்தது. 36 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது அதை முறியடித்திருப்பவர் பிரையன் லாரா.

இது நடந்து இன்னும் இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை. இந்த ஜூன் மாதம் இன்னொரு சாதனையையும் இவரே படைத்திருக்கிறார்! இது லாராவுக்கு அதிர்ஷ்ட ஆண்டோ!

முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் – அதாவது ஃபர்ஸ்ட் கிளாஸ் மேட்சகளில் – இதுவரை பாகிஸ்தான் ஆட்டக்காரர் ஹனீஃப் முகமது எடுத்த 499தான் சாதனையாக இருந்தது. அதையும் முறியடித்து இப்பொழுது 501 ரன்கள் குவித்திருக்கிறார் லாரா. இது நடந்தது எட்பக்ஸ்டனில், டுர்ஹாம் அணிக்கெதிராக, வார்விக்

ஷயர் குழுவில் இவர் ஆடிய போது.

"ஷார்ஜாவில் லாரா ஆடிய போதே, அவருடைய திறமை யான ஆட்டத்தைக் கண்டு வியந் தேன். இந்த 25 வயது இளைஞர் எனது சாதனையை ஒருநாள் முறி யடித்துவிடுவார் என்று எனக்கு அப்போதே தோன்றியது!" என்று மனம் விட்டுப் பாராட்டியிருக் கிறார் பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹனீஃப் முகமது.

சோபர்ஸின் சாதனை யைத் தாண்டி 375 ரன் கள் எடுத்த போது, நேரே மைதானத்துக்கு வந்து அவரைக் கட்டித் தழுவிப் பாராட்டினார் சோபர்ஸ். பரந்த மனம் என்பது இப் படித்தான் இருக்க வேண் டும். இதற்காக நாம் சோபர்ஸைப் பாராட்டு வோம்.

71 நான்கு – ரன்கள், 10 சிக்ஸர்கள் என்று விளாசித் தள்ளி 501 ரன் களை லாரா குவித்த போது மைதானம் முழுக் கப் பரபரப்புத்தான்.

"களத்தில் இறங்கிவிட் டாய். இன்றைக்குப் பூரா வும் ஆடு!" என்றார் இவ ரது வார்விக்ஷயர் அணி காப்டன் டெர் மாட்ரீவ். லஞ்ச் இடை வேளைக்கு முன் 178 ரன்கள். டீ



# ாதனை!

சமயத்தில் 418 ரன்கள்! அத்தனை வேகம்.

ட்ரினிடாடில் உள்ள சாந்தா க்ரூஸ் நகரில் 1969ஆம் வருடம் பிறந்தவர் லாரா. ஏழு சகோதர களில் இவர்தான் கடைக்குட்டி. நாலு சகோதரிகள்.

1993ல் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னியில் ஆடியபோது முதல் சதம் போட்டார். எடுத்த ரன்கள் 273. இத்தனைக்கும் 1984 - ல்தான் முதல் தர கிரிக் கெட் போட்டியில் கலந்து கொள்ள ஆரம்பித்தார்!

"ரொம்பவும் களைப்பாக இருக் கிறது. நாளைக்கே ஊருக்குப் பறந்து சென்று விடுவேன். அம்மாவைப் பார்க்க வேண் டும். அவள்தான் எனக்கு நிறைய ரன்கள் எடுக்க எப்போதும் உற்சாகம் தருபவள்!" என்கிறார் பிரையின் லாரா.

– சித்தார்த்

புகைப்படங்கள் : பிரதீப் மாண்டனி

# இதற்குள் முடித்து விட்டீரே!

• சின்னஞ்சிறு அபிராமிக்கு ஏற்பட்ட சோதனைகள்தான் எத்தனை, எத்தனை! சோதனைகளையே சாதனைகளாக்கி தன்னம்பிக்கையுடன் நடைபயின்ற அபிராமி உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவள். முடிவு எதிர்பாராதது. அற்புதமான இப்படைப்பைப் படைத்திட்ட கூத்தபிரானுக்கும், ஓவியர் லலிதாவுக்கும் பாராட்டுகள். விசலூர், ஜி.ஜி.கிருஷ்ணன்.

• அபிராமி கதையளவில் எங்களை விட்டு பிரிந்தாலும், மனதளவில் வெகுகாலம் வாழ்வாள்! -கச்சிராய பாளையம், ஓவியக் கவிஞன்.

• "கோகுலத்திலிருந்து வேண்டுமானால் நீங்கள் அபிராமியைப் பிரிக்கலாம். ஆனால் எங்களிடமிருந்து ஒரு போதும் பிரிக்க முடியாது." -காமரசவல்லி மாத்தூர், பெ.இராமாதேசிகன்.

• 'அபிராமியின் அட்டிகை'யை இதற்குள் முடித்து விட்டாரே கூத்தபிரான்! -கோட்டக்கரை, இ.இராமசாமி.

• அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரத்தைக் கொடுத்துவிட்டு, மகிழ்ச்சியில் திளைத்திருந்த வேளையில் "வெடுக்"கென்று யாரோ பிடுங்கிக் கொண்டதைப் போல.. துக்கம். அபிராமி நெஞ்சை நெகிழ்த்தி விட்டாள். -சர்க்கார் கொல்லப்பட்டி, ஓவியக் கம்பன். எலவானாசூர்கோட்டை ம.வேல்முருகன், நாகூர் இதமிழ் அன்சாரி, வடமாதி மங்கலம் வே.பூங்குன்றன், ஆனைகல் மேடு சி.மாதேஸ்வரன், திருக்கண்ணங்குடி எ.ராகவேந்திரா, ஊத்தங்கரை பி.கோவிந்தசாமி, குடியாத்தம் ஏரிப்பட்டறை நிலாபாரதி மற்றும் ஏராளமானோர்.

• சின்ன சின்ன சிறுவரின் பெரிய பெரிய சாதனைகள் வியக்க வைத்தது. தொடரட்டும் வெற்றிகள். கோட்டக்கரை சி.தனபால்,இயற்கை ப்ரியன், விசலூர் ஜி.ஜி.கிருஷ்ணன், மதுரை எல்.எம்.மங்கை.

• உங்கள் இதழில் வெளியிடப்படும் போட்டிகளை அனைத்தும் வெறும் ஒப்புக்காகவும், கோகுலம் அதிகம் விற்பனை ஆக வேண்டும் என்ற நோக்குடன்தான் வைக்கிறீர்கள் என்று எனது நண்பர்கள் முறையிடுகிறார்கள். என் நண்பன் 8 வருடமாக கோகுலம் வாங்குகிறான். அவன் அனைத்துப் போட்டிகளிலும் கலந்து கொண்டு வருகிறான். அவன் பெயர் வேல்முருகன். ஒரு போட்டியில் கூட அவன் பரிசு பெறவில்லை. (விடைகள் சரியே) எனவே இங்கு இயங்கும் ஒரு சிறுவர் மன்றம் மற்றும் ஒரு நூலகம் கோகுலம் வாங்குவதையே நிறுத்தி விட்டார்கள். எனவே இதற்குப் பதில் அளித்து போட்டிகள் ஒப்புக்காக இல்லை என்பதை நிரூபித்து என் நண்பர்களின் மூக்கை உடைக்க வேண்டும். (எழுதியவர் பெயர், ஊர் பெயர் முகவரி இல்லை!)

(போட்டிகள் வைப்பது, புதிய தொடர்கதையை ஆரம்பிப்பது,புதிய பகுதிகளை அளிப்பது எல்லாமே வாசகர்களின் கவனத்தைக் கவர்ந்து அவர்களது ஆதரவைப் பெறத்தான். நூற்றுக் கணக்கானோர் சரியான விடை எழுதும்போது, குலுக்கல் முறையில் நான் பரிசுக் குரியவர்களைத் தேர்ந்து எடுத்தாக வேண்டும். சரியான விடை எழுதியவர்கள் எல்லோருக்கும் பரிசு தருவது இயலக் கூடியது அல்லவே. கோகுலத்தின் பரிசு வழங்கு முறையைப் பாராட்டாதவர்களே கிடையாது- பரிசுக்காகத்தான் கோகுலமா? ஆசிரியர்.)

• சுறா மீனின் தகவல்கள் புருவத்தை உயர்த்த வைத்து விட்டது. மேலப்பாதி என்.இராஜவேட்கம், கோட்டக்கரை சி.தனபால், ஊத்தங்கரை பி.கோவிந்தசாமி, காவேரிப்பட்டணம் சோம்ஸ், தருமபுரி எம்.சோமசுந்தரம், கோட்டக்கரை இ.இராமசாமி.

• 'கலைப் பொருள் செய்வோம்!' கட்டுரை அருமை. கவர் மாட்டியைச் செய்யும் விதத்தினை மிக அழகான முறையில் விளக்கிய கோகுலத்தைப் பாராட்ட வார்த்தைகளே கிடையாது! -மதுக்கரை சாமிநாதன், மதுரை எல்.எம்.அபிதாட்சயா, ஆலப்பாக்கம் கி.சிவா மற்றும் பலர்.

• கதை எழுதுவதில் ஆர்வம் உள்ள எங்களைப் போன்ற சிறுவர்களுக்கு ஒரு உற்சாக டானிக்காய் அமைந்திருந்தது கப.சிவராஜின் "என் கதையா?" -சோழன்மாளிகை, கு.கருணாநிதி, திருக்கண்ணங்குடி பா.சரவணகுமரன், சர்க்கார் கொல்லப்பட்டி பெரு. இளங்கம்பன், குடியாத்தம் ஏரிப்பட்டறை இ.எஸ். லலிதா.

• 'அனுமனை வென்ற கோவர்த்தனன்' படக்கதையும் ஓவியர் ராமு வரைந்த ஓவியமும் எல்லாமே சூப்பர் சார்! -ஆலப்பாக்கம் கி.சிவா, மேலப்பாதி எஸ்.நாகராஜன், சீர்காழி எஸ்.கார்த்திகேயன், ஊத்தங்கரை பி.கோவிந்தசாமி, சிதம்பரம் ஸ்ரீவித்யா காளிதாஸ்.

• ஒரு கதையில் குழந்தைகள் கதாபாத்திரங்களாக வந்துவிட்டாலே அது சிறுவர் கதை என்ற கருத்து தவறானது என்பதை சரியான நேரத்தில் விளக்கிய தலையங்கத்திற்கு ஒரு சபாஷ்! -ஆலப்பாக்கம், கி.சிவா.

• கவிஸ் பாங்கின் சிறப்பு என்னென்ன என்பதை அறிய வைத்த கட்டுரை மிக அருமை -திருவண்ணாமலை மணிமாறன், மேல்மலையனூர் எஸ்.சரவணன், கோட்டக்கரை சி.தனபால், இயற்கை ப்ரியன், மதுரை எல்.எம்.மங்கைமணாளன்.

• குடல் புண் ஏற்படும் விதத்தினையும், இதனைத் தவிர்க்கும் முறையினையும் மிக அழகான முறையில் விளக்கிய விதம் அருமை. டாக்டர் கு.கணேசன் அவர்களுக்கு எனது கோடான கோடி நன்றி! -கோட்டக்கரை இ.இராமசாமி.

• பெற்றோருக்கு உதவினேன் எங்கள் நெஞ்சை நெகிழவைத்ததோடு இல்லாமல் எங்களுக்கெல்லாம் ஒரு படிப்பினை. -ஜெயதுரை பரந்தாமன், மதுரை எல்.எம்.அபிதாட்சயா, சங்கராபுரம் ஆ.முருகன், எலந்தை தம்பிக்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.

காக்கை குருவி எங்கள் சாதி!

\- பாரதியார்



REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

